
பெண் ஒன்று கண்டேன்
தமிழ்நிவேதா
பெண் ஒன்று கண்டேன் * தமிழ்நிவேதா
பெண் ஒன்று கண்டேன்
தமிழ்நிவேதா

# பெண் ஒன்று கண்டேன்

தமிழ் நிவேதா

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : பெண் ஒன்று கண்டேன் |
| ஆசிரியர் | : தமிழ் நிவேதா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| ழுதற் பதிப்பு | : செப்டம்பர், 2009 |
| மொழி | : தமிழ் |
| ாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| லின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| ச்சு எழுத்து | : 11 புள்ளி |
| ாத்தப் பக்கங்கள் | : 168 |
| ண்டிங் | : சாதா அட்டை |
| வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| ி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆:94441-01753 |
| டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |

**விலை: ரூ.60.00**




# பெண் ஒன்
# கண்டேன்

# பெண் ஒன்று கண்டேன்



## 1

"சத்யா நீ கிளம்பியாச்சா?"

பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந் சத்யா திரும்பிப் பார்த்தான். வேலையில் அவனுக் அடுத்த கேடரில் இருக்கும் ராம்குமாரும் அவனது தங் ஷாலினியும் நின்று கொண்டிருந்தனர்.

"இதோ கிளம்பியாச்சு" என்ற சத்யா தன் பெட்டியுட கதவைப் பூட்டி விட்டு அவர்களுடன் வெளியே வந்த வீட்டு வாயிலில் பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் ஜீப் றிருந்தது.

"என்னடா ஜீப்பிலா போகப் போகிறோம்?" என்றான் சத்யா வியப்புடன்.

"சேச்சே! சென்ட்ரல் வரைதான் ஜீப். இரயிலில் சேலம் போனதும் அங்கு நம்மை பிக்அப் பண்ண டிபார்ட்மென்ட் ஆட்கள் வருவார்கள்." பெட்டிகளை உள்ளே வைத்து விட்டு இருவரும் ஷாலினியிடம் வந்தார்கள். அன்புடன் தங்கையின் தலையை வருடிய ராம்குமார் "நல்லா படிக்கணும் ஷாலினி. பத்திரமா இரு. அம்மா அப்பாவுக்கு தொல்லை கொடுக்காதே. தினமும் போன் செய்கிறேன். அங்கு போன பிறகு என் வேலை, தங்கும் வசதியெல்லாம் பார்த்துக் கொண்டு சொல்கிறேன். நீ விடுமுறையில் வரலாம்" என்றான்.

ஷாலினி கலகலவெனச் சிரித்தாள். "அண்ணா எல்.கே.ஜி. குழந்தைக்கு சொல்கிற மாதிரி சொல்றியே! நான் காலேஜ் போகிறேன். நினைவிருக்கிறதா உனக்கு?"

"காலேஜ் போனாலும், கல்யாணமே ஆனாலும் கூட நீ எனக்கு குழந்தைதான்" என்ற ராம்குமார் "சரி வந்து வண்டியில் ஏறு. உன்னை வீட்டில் விட்டு விட்டு நாங்கள் போகிறோம்" என்றான் தங்கையிடம்.

ஷாலினி அண்ணன் அருகே நின்றிருந்த சத்யாவைப் பார்க்கவும் அவன் அவளை கவனிக்காமல் ராம்குமாருடன் சென்று ஜீப்பில் ஏறினான்.

தங்கை நின்ற இடத்திலேயே நிற்பதைப் பார்த்த ராம்குமார் "சீக்கிரம் வா ஷாலினி. எங்களுக்கு இரயிலுக்கு நேரமாச்சு" என்றான், அவளிடம்.

ஷாலினி ஜீப்பில் ஏறி அவர்கள் எதிரே அமர்ந்தாள். வழியெல்லாம் ராம்குமார் ஏதோ பேசியபடியே வந்தான்.



சத்யா தெருவையும் அதில் நகரும் கட்டிடங்களையும் பார்த்தபடி இருக்க, ஷாலினி சத்யாவைப் பார்த்தபடியே அமைதியாய் இருந்தாள்.

சத்யாவும் ராம்குமாரும் இந்திய அரசின் வனபாதுகாப்பு துறையில் பணிபுரிபவர்கள். சத்யா டி.எப்.ஓ. எனப்படும் வனபாதுகாப்பு ஆய்வாளராகவும், ராம்குமார் அவனுக்கு அடுத்த நிலையிலும் இருந்தான். ராம்குமாரின் அப்பாவும் சத்யாவின் அப்பாவும் நண்பர்கள். சிறு வயதில் ராம்குமாரும், சத்யாவும், ஷாலினியும் ஒரே பள்ளியில் படித்தவர்கள். ஷாலினி இவர்களை விட ஐந்து வருடம் சிறியவளாக இருந்ததால் அவளை இருவரும் நன்றாகக் கவனித்துக் கொள்வார்கள்.

சத்யாவின் அம்மா அவன் சிறு வயதிலேயே இறந்து விட்டார்கள். அப்பாவும் வனத்துறையில் வேலை பார்த்ததால் சத்யா எட்டாம் வகுப்பிலிருந்து விடுதியில் தங்கியிருந்து படிக்கப் போனான். விடுமுறை சமயங்களில் அப்பாவுடன் இருக்க வரும்போது அவருடன் சேர்ந்து காடுகளில் சுற்றி அலைந்ததில் அதன் மீது ஒரு ஆர்வம் வந்தது. டிகிரியை முடித்ததும் அப்பா 'மேற்கொண்டு என்ன செய்யப் போகிறாய்?' என்றதும் "ஐ.எப்.எஸ். படிக்கப் போகிறேன்" என்றான் சற்றும் யோசிக்காமல்.

அப்பா வியப்புடன் அவனைப் பார்த்தார்.

"பாரஸ்ட் டிபார்ட்மென்டில்தான் வேலை பார்க்கப் போகிறேன் அப்பா" என்றான் அவன்.

அப்பாவின் முகத்தில் யோசனை தெரிந்தது. உடனே பதில் சொல்லாமல் ஒரு நிமிடம் யோசித்தார். "பாரஸ்ட் வேலை பாக்கறது ரொம்ப கடினம் சத்யா. எனக்கு அந்

காலத்துல டாக்டர், இஞ்சினியர்னு படிக்க வசதியிருக்கல. எனக்குப் பின்னால் நின்ற தம்பி தங்கைகளை கரையேத்த அப்பாவுக்கு கை கொடுக்க வேண்டியிருந்தது. அதனால் முதலில் கிடைத்த வேலையில் சேரவேண்டிய நிர்ப் பந்தத்தில் இந்த வேலையில் சேர்ந்தேன். என் குடும் பத்தை அதன் பயனாய் காப்பாற்ற முடிந்தாலும் உன்னை யும் உன் அம்மாவையும் கூட இருந்து கவனிக்க முடி யாமல் போயிற்று பார்த்தாயா? காட்டுப் பகுதிகளிலேயே வேலை பார்ப்பதால் வேலை நிமித்தம் செல்லும் இடங் களில் நல்ல பள்ளிகள் இருக்காது. மருத்துவமனை வசதி இருக்காது. ஏதாவது விசேஷம் என்றாலும் உடனே கிளம்பி சென்னைக்கு வர முடியாது. பல காரணங்களால் உங் களைப் பிரிந்தே இருக்க வேண்டியதாயிற்று. உன் அம்மாவை கூட இருந்து கவனித்துக் கொண்டிருந்தால் இன்னும் சிறிது நாள் வாழ்ந்திருப்பாள் என்று இப்போதும் எனக்குத் தோன்றுகிறது. உனக்கு எந்த நிர்ப்பந்தமும் இல் லாத நிலையில் நீ ஏன் காட்டிலும், மலையிலும் திரிந்து கஷ்டப்பட வேண்டும்? ஐ.எப்.எஸ்க்கு பதிலாக ஐ.ஏ.எஸ். வேண்டுமானால் படி. அல்லது எம்.பி.ஏ. எம்.சி.ஏ. படித்து விட்டு சென்னையிலேயே நல்ல கம்பெனியில் வேலை பார்'' என்றார் அப்பா.

''எனக்கு நகரத்தை விட காடுதான் பிடித்திருக்கிற துப்பா. சமூக மிருகங்களை விட காட்டில் வசிக்கும் மிருகங் கள் எவ்வளவோ பரவாயில்லை என்று தோன்றுகிறது.''

''சத்யா நீ ஏதோ வெறுப்பில் பேசுவது போலிருக்கிறது. ...ருப்பத்துடன் ஒரு வேலையை தேர்ந்தெடுத்தால்தான் ...த முழு ஈடுபாட்டுடன் செய்ய முடியும். உனக்கு யார் ...என்ன வெறுப்பு சத்யா?''



''யார் மீதும் வெறுப்பில்லை அப்பா. ஏனோ எனக்கு உறவினர், நண்பர்கள் என்று எந்த உறவுகளிலும் ஈடு பாடு ஏற்படவில்லை. காட்டு வாழ்க்கையில் சந்திக்கும் சவால்கள் எனக்கு சுவாரஸ்யமாக இருக்கிறது.''

அப்பா வருத்தத்துடன் தலையசைத்தார். ''உன் அம்மா இருந்திருந்தால் உன்னை சமூகத்துடன் இணைக்கும் பாலமாக இருந்திருப்பாள். இயல்பான குடும்ப வாழ்க்கை அமைந்திருக்கும். என்னுடைய கரடு முரடான வாழ்க்கை முறையினால் உன்னுடைய மென்மையான உணர்வுகள் அடிபட்டுப் போயின போலும்.''

சத்யா அப்பாவின் அருகே அமர்ந்தான். ''எனக்கு எந்தக் குறையும் நீங்கள் வைக்கவில்லை. என் மனதில் எந்த வருத்தமும் இல்லை. நீங்கள் எதற்காகவும் கவலைப் பட வேண்டியதில்லை. எனக்குப் பிடித்த வேலையை நான் செய்யப் போகிறேன். நம் நாட்டின் வனத்துறையை பாதுகாப்பதும் பராமரிப்பதும் எத்தனை பொறுப்பான வேலை என்று உங்களுக்குத் தெரியாதா அப்பா?''

''நிச்சயம் தெரியும். உனக்கு இதுதான் விருப்பம் என்றால் நான் அதில் தடை சொல்ல எதுவுமில்லை. உன் விருப்பப்படி செய்'' என்றார் அப்பா மேற்கொண்டு தடை ஏதும் சொல்லாமல்.

அவன் ஐ.எப்.எஸ். சேர்ந்து பாஸாகி டிரைனிங் முடித்து டி.எப்.ஓ. ஆனதும் ரொம்ப சந்தோஷப்பட்டார்.

''எத்தனையோ ஆபீசருங்க கீழ வேலை செஞ்சிருக் கேன். உங்கூட செய்யறதுக்கில்லாம எனக்கு அதுக்குள் ரிட்டையர்மெண்ட் ஆயிடிச்சே'' என ஆதங்கப்பட்டார். ''... விரும்பிய வேலையில் சேர்ந்தாச்சு. அடுத்து ஒரு நல்...

பெண்ணா பாத்து கல்யாணம் பண்ணிக்க'' என்று வற்புறுத்திக் கொண்டிருந்தபோது சற்றும் எதிர்பாராமல் ஒரு ஹார்ட் அட்டாக்கில் இறந்து போனார்.

தனக்கென்றிருந்த ஒரே உறவும் இல்லாமல் போனதில் சத்யா மிகவும் இறுகிப் போனான். நாளடைவில் அந்த இறுக்கம் அவனுக்கு ஒரு கம்பீரத்தைக் கொடுத்தது. அவனுக்கு கீழ் பணிபுரிபவர்கள் அவன் முகத்தைப் பார்த்தே கவனமாய் வேலை செய்யத் தொடங்கினார்கள். மற்றவர்களிடம் எப்பவும் தெனாவெட்டாய் பேசும் சி.எப்.ஓ. கூட சத்யாவிடம் அமைதியாகத்தான் பேசுவார். ரிஸ்க்கான வேலைகளில் சத்யா வலியச் சென்று ஈடுபடும் துணிச்சலும், அதை அவன் வெற்றிகரமாய் கையாண்டதும் அரசாங்கத்தில் அவனுக்கு மிகவும் நல்ல பெயரை சம்பாதித்துத் தந்திருந்தது. இப்போது சேலம் மாவட்ட வனப் பகுதிகளில் வன விலங்குகள் வேட்டையாடப் படுவதாக வந்த புகாரின் பேரில் அங்கு ராம்குமாருடன் பயணப்பட்டான் சத்யா.

ராம்குமார் வீட்டு வாயிலில் ஜீப் நின்றது. ''இறங்கி வா ஷாலு'' என் தங்கையைப் பார்த்து சொன்ன ராம்குமார் ''அப்பா அம்மாவிடம் சொல்லிவிட்டுப் பெட்டியை எடுத்து வருகிறேன்'' என சத்யாவிடம் கூறிவிட்டு டிரைவருடன் வீட்டினுள் சென்றான். இறங்குவதில் அவசரம் காட்டாமல் ''சத்யா'' என்றாள் ஷாலினி எதிரே அமர்ந்திருந்தவனைப் பார்த்து.

ஜன்னல் பக்கம் பார்த்தபடி அமர்ந்திருந்த .சத்யா திரும்பி அவளைப் பார்த்தான். அந்த பார்வையிலிருந்த நேகமற்ற பாவத்திற்கு ஒரு நிமிடம் தயங்கிய ஷாலினி.



''சத்யா நீங்க போன பிறகு நான் உங்களை ரொம்ப மிஸ் பண்ணுவேன்'' என்றாள் அவனிடம்.

அவன் பதில் பேசாமல் இருக்கவும், ''சொல்லுங்க சத்யா. நீங்க என்னை நினைக்க மாட்டீங்களா?'' என்றாள் கொஞ்சலாக.

''டோண்ட் பி சில்லி. வேலைன்னு போய்ட்டா என்னையே நான் நினைக்க மாட்டேன். உன்னை ஏன் நினைக்கப் போகிறேன்?''

சத்யா அலட்சியத்துடன் தோள்களைக் குலுக்கினான்.

''என்னை நீங்க நினைச்சுதான் ஆகணும் சத்யா. ஏன்னா நான் உங்களை ரொம்ப லவ் பண்றேன்.''

''நிறைய சினிமா பாக்கறேன்னு நினைக்கிறேன். கண்டபடி உளரத் தொடங்கியிருக்கிறாய்.''

''உளறல் இல்லை சத்யா. நிஜம். சத்யம். நீங்க இல்லாமல் வாழவே முடியாது என்னால். எப்பவும் உங்கள் நினைவாகவே இருக்கிறேன்.''

''பைத்தியக்காரத்தனம்.''

''இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. நீங்கள் இது வரை என்னை விரும்பாமல் இருந்திருக்கலாம். ஆனால் எப்படியும் நீங்கள் ஒரு பெண்ணை மணந்துதான் ஆக வேண்டும். அது ஏன் நானாக இருக்கக் கூடாது? பணம், படிப்பு, அழகு, அந்தஸ்து என சராசரி ஆண்கள் எதிர்பார்க்கும் எல்லா தகுதியும் எனக்கிருக்கிறது. சொல்லுங்கள் சத்யா.''

''நீ எல்லா தகுதிகளும் கொண்ட அழகான பெண் தான். அதில் சந்தேகமில்லை. ஆனால் நான் உனக்கானவன் இல்லை. எனக்கு திருமணத்தின் மீதே விருப்பமில்லை.''

''உங்களுக்கு விருப்பம் வரும் வரை நான் காத்திருக்கிறேன். அது எத்தனை நாளானாலும் வருடங்கள் ஆனாலும்...''

சத்யா சடாரென அடிக்குரலில் சீறினான். ''ஒரு முறை சொன்னால் புரியாது? முட்டாள். போ இங்கிருந்து.''

ஒரு நிமிடம் திடுக்கிட்ட ஷாலினி வேகமாய் ஜீப்பை விட்டு இறங்கி அழுது கொண்டே வீட்டினுள் ஓடினாள்.

சில நிமிடங்களில் தன் லக்கேஜுடன் வந்து ஜீப்பில் அமர்ந்த ராம்குமார் திரும்பி வீட்டினருக்கு கையசைத்தான். ''என் தங்கையைப் பிரிந்து வருவதற்குதான் மிகவும் வருத்தமாக இருக்கிறது சத்யா. நான் கிளம்பும் சமயம் ஒரேயடியாய் அழுகிறாள்'' என்றான் சத்யாவிடம்.

பதில் பேசாத சத்யா அலட்சியத்துடன் தலையைக் கோதினான்.

சேலம் ஜங்ஷனில் அவர்கள் இறங்கியபோது விடி காலை நான்கு மணியாகியிருந்தது. பாரஸ்ட் டிபார்ட்மென்ட் ஆட்கள் ஜீப்புடன் காத்திருந்தார்கள். இவர்களைப் பார்த்ததும் விறைப்புடன் வணங்கியவர்களிடம் தலையசைத்து விட்டு மறுபடி இரண்டு மணி நேரம் பயணித்து மேட்டூர் அணையின் அரசாங்க விருந்தினர் விடுதிக்கு வந்து சேர்ந்தார்கள். குளித்து சாப்பிட்ட பின் காத்திருந்த கார்டு, ரேஞ்சர்களுடன் மறுபடி வனப்பகுதிக்கு பயணித்தனர். கொளத்தூரை நெருங்கும்போது அணையில் பாசனத்துக்காக தேக்கப்பட்ட காவிரி நீர் சாலை ஓரம் அலை மோதியது. பசிய வயல்கள் கண்களுக்கு குளுமையாக இருந்தன. கொளத்தூரையும், சிறு சிறு கிராமங்களையும் தாண்டி வனப்பகுதிக்குள் பிரவேசித்ததும் 'தண்டா' எனும் பெயர் பலகை அவர்களை வரவேற்றது.



''பெயர் வித்தியாசமாய் இருக்கே'' என்றான் ராம்குமார்.

''இங்கு 'லம்பாடி' எனப்படும் நாடோடி பழங்குடி மக்கள் வசிக்கிறார்கள். அதனால் இந்த பெயர் வந்தது.'' - ரேஞ்சர் விளக்கினார்.

''வடக்கே கூட லம்பாடி இனத்தவர் நிறைய வசிக்கிறார்கள். அங்கும் அவர்கள் வசிக்கும் இடத்தின் பெயர் 'தண்டா' என்றுதான் அழைக்கப்படுகிறது'' என்றான் சத்யா.

ஜீப் வன அலுவலகத்தின் வாயிலில் நின்றதும் அதிலிருந்து குதித்தார்கள் ராம்குமாரும் சத்யாவும். சுற்றிலும் இருவரும் பார்வையை ஓட்டினர். புதர்களில் முட்செடிகள்தான் நிறைய இருந்தன. வனப் பகுதி அடர்த்தியாக இல்லாமல் மரங்கள் நிறைய வெட்டப்பட்டு இடைவெளி விட்டு காட்சியளித்தன. மக்கள் சரளமாய் நடமாடுவது தெரிந்தது. கும்பல் கும்பலாய் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன.

''காட்டில் இத்தனை நடமாட்டம் ஏன்? இத்தனை மரங்கள் இங்கே எதற்காக வெட்டப்பட்டிருக்கின்றன?'' என்றான் சத்யா.

அவன் குரலின் கடுமைக்கு அலுவலர்கள் மிரண்டனர்.

சுள்ளி பொறுக்குபவர்களையும் மேய்ந்து கொண்டிருந்த ஆடு மாடுகளையும் விரட்டினர். ''இங்க யாரும் வரக்கூடாது. போங்க... எல்லோரும்.''

கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகள் விரட்டியதும் சிதறி ஓடின. ஆட்டு மந்தைக்கு நடுவி

அமர்ந்திருந்த அந்த பெண் கோபத்துடன் எழுந்தாள். சிவப்பு, பச்சை, மஞ்சள் என பல வண்ணத் துணிகளை சேர்த்து தைக்கப்பட்ட லம்பாடி உடை அணிந்திருந்தாள்.

''என்ன சார் எதுக்கு ஆடுகளை விரட்டற? ஆட்டுக் கறியும் சாராயமும் வேணும்னு தினம் வந்து வாங்கிக்கற இல்ல, அப்புறம் ஏன் ஆட்டை விரட்டற?''

அவள் தலை முக்காட்டை கழுத்தைச் சுற்றி போட்ட வேகத்தில் அதில் தைக்கப்பட்டிருந்த வெள்ளி சதங்கைகள் முகத்தைச் சுற்றி சிணுங்கின. கோதுமை நிறமும், கடைந்தெடுத்த உடலும், செதுக்கின முகமுமாய் ஹிந்தி சினிமாவில் வரும் அரசகுல பெண்களைப் போல கையில் தடியுடன் மிடுக்காய் நின்றிருந்தவளை சத்யாவும் ராம்குமாரும் திகைத்துப் போய் பார்த்தார்கள்.

''இந்த அலங்காட்டில் இப்படி ஒரு அப்சரஸா?'' என்றான் ராம்குமார் வியப்புடன்.

''ஏ டோலி பெரிய ஆபீசருங்க எல்லாம் வந்திருக்காங்க. நீ ஆட்டை விரட்டு'' என்றான் ரேஞ்சர் சமாளிப்புடன்.

''வரட்டுமே!'' என்றாள் டோலி அலட்சியத்துடன். ''காடு அவங்களுக்கு மட்டும் சொந்தமா என்ன?''

''டோலி வாயாடாதே. போ, இங்கிருந்து.''

''போகமாட்டேன். நீ என்ன சொல்றது?'' அவளது ணிச்சல் ராம்குமாருக்கு வேடிக்கையாக இருந்தது. வாய் டுச் சிரித்தான்.

த்யாவின் முகம் கடுத்தது.



''ஒரு ஆடு மேய்க்கும் பெண் இவ்வளவு அலட்சியமாய் பேசுகிறாள் என்றால் அதிலிருந்தே நீங்கள் வேலை பார்க்கும் லட்சணம் தெரிகிறது'' என்றான் அவனுடன் வந்த அதிகாரிகளிடம்.

அவர்களால் உடனே பதில் பேச முடியவில்லை. அடுத்த நிமிடம் கீழே குனிந்து சிறு கற்களைப் பொறுக்கி ஆடுகளின் மீது அவர்கள் வீசவே ஆடுகள் சிதறி ஓடின. அந்தப் பெண் கோபத்துடன் இவர்களைப் பார்த்து ஏதோ திட்டியபடி ஆடுகளின் பின்னே ஓடினாள்.

''அந்த பெண் பேசியது என்ன மொழி?'' என்றான் ராம்குமார் கூட இருந்தவர்களிடம்.

''அது லம்பாடி மொழி சார். மராட்டி, கன்னடம், இந்தி எல்லாம் கலந்த ஒரு மொழி. அதற்கென்று எழுத்து வடிவமோ, பிரத்யேக சொற்களோ கிடையாது.'' கார்டு விளக்கினார்.

அன்று வனப்பகுதிகளை பார்வையிட்டு மேட்டூர் வந்து கெஸ்ட் அவுசில் படுக்கையில் விழுந்தபோது இருவருக்கும் களைப்பாக இருந்தது.

'காட்டிலும் மேட்டிலுமாய் அலைந்து கொண்டு இது என்ன வேலையோ!' என்று அலுத்துக் கொண்ட ராம்குமார், வீட்டினர் தன் போனுக்காய் காத்திருப்பார்கள் என்பது நினைவு வந்ததும் உடனே வீட்டுக்குப் போன் பேசத் தொடங்கினான்.

தனக்கு தகவல் சொல்ல யாருமில்லை என்ற நினைவுடன் சத்யா படுக்கையில் சரிந்தபோது திடீரென அந்த லம்பாடிப் பெண் நினைவுக்கு வந்தாள்.



## 2

டோலி சுட்டெரிக்கும் மதிய வெய்யிலில் வியர்த்துப் போன முகத்தைத் துடைத்தபடி தங்கள் வீட்டிற்குள் நுழைந்தாள். அவள் பின்னால் வந்த ஆடுகள் மர நிழலில் நின்று அசைபோடத் தொடங்கின.

ராகி ரொட்டியை காரமான கீரை மசியலில் தொட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்த அவள் அப்பா சக்கிரி அவளைப் பார்த்ததும் கேட்டான்,

''என்ன புள்ள உச்சிப்பொழுது இறங்கறதுக்குள்ள ஆடுகளை ஓட்டிட்டு வந்துட்ட? மேய்க்கலையா இன்னிக்கு?''

தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த டோலி கோபத்துடன் வெண்கல குவளையை கீழே வீசினாள். ''ஏன் கேட்கமாட்ட? பொழுதெல்லாம் தூங்கறதும், இரவானா சாராயம் காய்ச்சறதுமா நீ இங்கியே கிடக்கற. வெளிய போய் அலைஞ்சா பொம்பளைங்க கஷ்டம் தெரியும். பாரஸ்ட்டுல யாரோ ஆபீசர் வந்துருக்காங்களாம். அந்த ரேஞ்சர் எப்படித் துரத்தறான் தெரியுமா?''

''ஆபீசரு வந்துருக்காங்களா? சட்டப்படி ஆடு மாடு மேய்க்கக் கூடாதுன்னு ரூல் பேசுவாங்க? சரி.. சரி.. ரெண்டு நாள்ல போயிடுவாங்க'' என்றான் சக்கிரி.

''அடுத்தவங்களுக்கு பயந்து எத்தனை நாள் வாழறது? தெல்லாம் ஒரு பிழைப்பா? போலீசுக்கு பயந்து



ராத்திரியில் சாராயம் காய்ச்சறதும் பாரஸ்ட் ஆபீசருங்களுக்கு பயந்து விறகு பொறுக்கப் போறதுமாவே எத்தனை நாளைக்கு வாழறது? நாமளும் படிக்க வேணாமா? யாருக்கும் பயப்படாம நெஞ்சை நிமிர்த்தி உத்யோகம் பாக்க வேண்டாமா? என்னைத்தான் அதிகமா படிக்க வெக்கல. தம்பியாவது பெரிய படிப்புப் படிக்கணும். அவனுக்கு கட்டை வெட்ற உங்க தொழிலை கத்துக் குடுக்காதீங்க.''

சக்கிரி மனைவியைப் பார்த்துக் கடகடவெனச் சிரித்தான். ''ஏய் சுண்டி, கேட்டுக்கோ உன் பொண்ணு சொல்றதை. உன் பையன் படிச்சி இந்த ஜில்லா கலெக்டர் ஆகப் போறானாம்.''

''ஆனாலும் ஆகலாம். அவன் எதிர்காலத்தை நீங்க எப்படி தீர்மானிக்கலாம்?'' என்றாள் டோலி ஆக்ரோஷத்துடன்.

ராகி ரொட்டியை தட்டி முடித்த சுண்டி எழுந்து வந்து மகளின் அருகே அமர்ந்தாள். ''நம்ம குலத் தொழில் இதுதான் சொட்டி. (குழந்தை). நீ ரொம்ப ஆசைப்படாதே. நாடோடி கூட்டத்துப் பையன் பெரிய ஆளாய் வருவதும், அழகான பெண்களை மணக்க ராஜகுமாரர்கள் குதிரைகளில் வருவதும் கதைகளில்தான் நடக்கும்'' என்றாள் அனுதாபத்துடன்.

''கதைகள் கூட வாழ்க்கையை பிரதிபலிப்பவைதான் அம்மா. பார்த்துக் கொண்டே இரு நிச்சயம் ஒரு நாள் நான் நினைப்பது நடக்கும்'' உறுதியுடன் சொல்லிவிட்டு எழுந்து செல்கிற மகளைச் சுண்டி யோசனையுடன் பார்த்தாள். ''என்ன இந்த பொண்ணு, என்னன்னவோ பேசுதே'' என்றாள் கணவனிடம்.

''அது வயசுக் கோளாறு. அப்படித்தான் பேசும். இவளுக்கு பரிசம் போட்ட டோபரான் இன்னும் இரண்டு மாசத்தில் கல்யாணம் பண்ணிக்கிட்டா எல்லாம் சரியா போயிடும்'' என்றான் அலட்சியத்துடன். டோலி கயிற்றுக் கட்டிலில் சாய்ந்து அமர்ந்தாள். அருகிலுள்ள ராம கிருஷ்ண மடத்தின் பள்ளியிலிருந்து பள்ளி முடிந்ததற் கான மணி சத்தம் கேட்டது. ஐந்தாவது வரைதான் அதில் படிக்க முடியும். உயர் நிலைப் பள்ளியில் படிக்க வேண்டு மானால் கொளத்தூருக்குத்தான் போக வேண்டும். டோலி அடம் பிடித்து கொளத்தூர் போய் பத்தாவது வகுப்பு வரை படித்தாள். அவர்கள் கூட்டத்தில் அவள் ஒரு சாதனைப் பெண்ணாகக் கருதப்பட்டாள்.

பள்ளியிலிருந்து கசங்கிய சட்டையும், அரை டிராயருமாக வீட்டிற்கு ஓடும் மாணவர்களுடன் அவளது தம்பியும் ஓடி வந்தான். அவளை பார்த்ததும் ''அக்கா'' என்று ஓடி வந்து தன் சிலேட்டு பலகையைக் காண் பித்தான். ''இன்னிக்கு பரீட்சையில கணக்குல நாதான் பர்ஸ்ட். பாரேன்.''

டோலி பெருமையுடன் தம்பியின் முகத்தைத் தொட்டு முத்தமிட்டாள்.

"நீ கெட்டிக்காரன்னுதான் எனக்கு தெரியுமே! எல்லா பரீட்சையிலும் இப்படியே மார்க் வாங்கணும். என்ன?''

அவள் தம்பி கண்ணன் உற்சாகத்துடன் தலையசைத் தான்.

''ஆனா, அப்பா நோட்புக் கேட்டா அடிக்குதுக்கா.''

''அப்பாவை கேட்காதே. நான் வாங்கித் தருகிறேன்'' ற டோலி கறந்த பசும்பாலை அளந்து பால் பாத்



திரத்தில் ஊற்றி தம்பியிடம் கொடுத்தாள். ''பெரிய கவுண்டர் வீட்ல இந்தப் பாலை கொடுத்துட்டுப் பணம் தருவாங்க. வாங்கி நோட் புக் வாங்கிக்க.''

கண்ணன் பயத்துடன் வீட்டை எட்டிப் பார்த்தான்.

''அம்மாவோ, அப்பாவோ பாத்தா அடிப்பாங்க அக்கா.''

''பாத்தா அவங்களை நான் சமாளிச்சிக்கிறேன். நீ போ கண்ணா.''

கண்ணன் சுற்றிலும் பார்த்துவிட்டு பால்கேனுடன் ஓடினான். கண்ணன் இப்போது ஐந்தாம் வகுப்பு படிக் கிறான். அதுவும் டோலியின் பிடிவாதத்தில் பெற்றோர் அவனை பள்ளிக்குச் செல்ல அனுமதித்திருக்கிறார்கள். புத்தகமோ, பேனா பென்சிலோ அவன் கேட்டால் 'வெட்டி செலவு' என்று திட்டுவார்கள். கண்ணன் அதற்கு பயந்து அக்காவிடம் தான் கேட்பான். டோலி அம்மா அப்பா வுக்குத் தெரியாமல் பாலை விற்றும், சந்தையில் சாமான் வாங்க கொடுக்கும் பணத்தில் மிச்சம் பிடித்தும் தம்பிக்கு தருவாள். ஆனால் எத்தனை நாளைக்கு இது நடக்கும்?

இன்னும் பெரிய படிப்பு படிக்க நிறைய பணம் செல வாகுமே, அதற்கு அவள் என்ன செய்வாள்? இப்போது பள்ளிக்கட்டணம் கிடையாது என்றாலும் கல்லூரிக்கு சென்றால் கல்லூரிக் கட்டணம், விடுதி செலவு எல்லாம் எவ்வளவாகும்? டோலி தீவிரமாக யோசித்தாள். என்ன செய்யலாம்? கண்ணன் படித்தே ஆக வேண்டும்.

போதையிலும் அறியாமையிலும் சீரழியும் தங்கள் சமூகத்தவர்களைப் போல் இல்லாமல் அவன் பெரிய ஆளாக வேண்டும். இதே இடத்துக்கு ஆபீசராய் காரில் வந்து இறங்க வேண்டும். காலையில் பார்த்தோமே, அந்த

ஆபீசர் மாதிரி கம்பீரமாய்.. எல்லோரையும் அதட்டிக் கொண்டு பார்வையில் கண்டிப்பை காட்டியபடி... நீல சட்டையும் கறுப்பு பேண்டுமாய் - கூலிங்கிளாசை நாசூக்காய் சுழற்றியபடி அருகிலிருந்தவரை ராம்குமார் என்று கூப்பிட்டார். அவரது பெயர் என்னவாயிருக்கும்? இன்னும் எத்தனை நாளைக்கு இங்கிருப்பார்?

தொப்பென்று ஏதோ மேலே விழவும் டோலி சிந்தனை கலைந்து திரும்பிப் பார்த்தாள். பக்கத்து குடிசையில் அவள் தோழி துளசி நின்றிருந்தாள்.

''நானும் பார்க்கிறேன். ரொம்ப நேரமா அப்படி உட்கார்ந்திருக்க. அப்படி என்ன யோசனை உனக்கு? பரிசம் போட்டவனை நினைச்சிட்டு இருந்தியா?'' என்றாள் கிண்டலுடன்.

டோலி எரிச்சலுடன் முகத்தை சுருக்கினாள். ''அவனை நான் ஏன் நினைக்கப் போகிறேன்? எங்கப்பா வேண்டுமானால் நினைக்கலாம்.''

''பின்னே டோபரான் கொஞ்சமாவா கொடுத்திருக்கான்? நம்ம சனத்திலேயே உனக்கு குடுத்த மாதிரி எந்த பொண்ணுக்கும் மாப்பிள்ளை வீட்டிலிருந்து பரிசப்பணம் கொடுத்ததில்லை. சும்மாவா? ஆளுக்காள் உன் அழகில் மயங்கி போட்டி போட்டதில் டோபரான் அதிகப் பணம் கொடுத்து நிச்சயம் செய்து விட்டான்.''

டோலி கசப்புடன் சிரித்தாள். ''இது நல்ல வியாபாரம் ல்ல? ஒரு மாப்பிள்ளை வீட்டிலிருந்து பணம் பறிக்க ம். பெண் அழகு கூடினால் பரிசப்பணமும் கூடும்.''

ஏன் அப்படி நினைக்கணும் டோலி? வாழ்க்கைப்பூரா ன் கூட இருந்து குடும்பம் நடத்தப் போறோம். அவன்



பிள்ளையை சுமந்து, சுக துக்கத்தில் பங்கெடுத்துக் கொள்கிற நமக்காக அவன் ஒரு தொகை செலவழித்தால் என்ன? உனக்கு தெரியுமா? மற்ற இனத்தில் எல்லாம் பெண் வீட்டார்தான் மாப்பிள்ளைக்கு பெண்ணையும் கொடுத்து பணமும் கொடுக்க வேண்டும். நம்மைப் பணம் கொடுத்து ஒருவன் மணந்து கொள்வது நமக்கு கௌரவம் அல்லவா?''

''எது துளசி கௌரவம்? ஆடு மாட்டைப் போல நம்மை பணம் கொடுத்து வாங்கிப் போகிறார்கள். பணத்துக்கு ஆசைப்பட்டு நம்முடைய பெற்றோரும் நமக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை என்றாலும் கூட வற்புறுத்தி கல்யாணம் செய்து வைத்து விடுகிறார்கள். குடிகாரனிடம் சிக்கிக் கொண்டு ஆயுசுக்கும் நாம் காட்டில் திரிந்து கஷ்டப்பட வேண்டியதுதான்.''

துளசி அதிசயத்துடன் முகவாயில் விரல் வைத்தாள். ''என்னவோ புதுசா பேசறியே டோலி! நம்ம சனத்தில் குடிக்காத ஆம்பளை யார்?

ஆடுமாடு மேய்க்கறதும், சாராயம் காய்ச்சறதும் நம்ம குலத் தொழிலாச்சே! பெண்களும் கூட நிறைய பேர் குடிக்கத்தான் செய்யறாங்க. நமக்கு இது புதுசா என்ன?''

''புதுசோ பழசோ! எனக்கு பிடிக்கல துளசி.''

''அதுக்கு என்ன செய்ய முடியும் டோலி? நமக்கு விதிக்கப்பட்டது இதுதான். நீயாவது பத்து வரை படிச்சிருக்க. எனக்கெல்லாம் எழுத படிக்கக் கூட தெரியாது. அதை நினைச்சி சந்தோஷப்படாம எதுக்கு கிடைக்காததை நினைச்சி கவலைப்படணும்?''

''துளசி யோசித்துப் பார். நாமும் மற்றவர்கள் மாதி உயர்ந்த நிலைக்கு வர வேண்டாமா? நமக்குப் பின் வரு

தலைமுறையாவது படிக்க வேண்டாமா? நம்முடைய
சந்ததிகளை உருவாக்குவது நம் கையில்தானே இருக்
கிறது!''

''அதுக்கு?''

''அதுக்காக நாம நல்லா படிச்சவனா பாத்து கட்டிக்
கணும். என் தம்பியை, உன் தங்கையை எல்லாம் நல்லா
படிக்க வெக்கணும்.''

''சரிதான். நல்லா படிச்சவன். நம்ம குடிசைக்கு வந்து
ஏன், கல்யாணம் கட்றான்? லட்சக் கணக்கில் வரதட்
சணையோட காத்திருக்கும் படிச்ச பொண்ணையில்ல
தேடிப் போவான்?''

துளசியின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாத டோலி
அமைதியானாள்.

காட்டுப்பகுதிக்குள் தீவிரவாதிகள் நடமாட்டம் ஏதும்
இருக்கிறதா என்பதை கண்காணிக்க வேண்டி சத்யா
சேலம் மாவட்ட வனப்பகுதிகளை இரண்டு பிரிவுகளாக
தானும் ராம்குமாரும் கவனிக்கலாம் என்று முடிவு செய்
தான். ராம்குமார் ஏற்காடு கொல்லிமலை பக்கமும், சத்யா
தண்டா வனப்பகுதிக்குமாய் சென்றார்கள். அலுவலகத்
தில் தன்னுடன் வரத்துடித்த அலுவலர்களைத் தவிர்த்து
விட்டு சத்யா தனியாக காட்டுப் பகுதிக்குள் சென்றான்.
பல இடங்களில் மரங்கள் வெட்டப்பட்டு சமவெளிகளாய்
மாறியிருந்தன. இந்த மரத்திருட்டு யார் வழியாய்
டக்கிறது என்பதை முதலில் விசாரிக்க வேண்டும்.
ர்த்தவற்றை மனதில் குறித்தபடி நடந்தான். சிறிது தூரம்
ந்ததும் பின்னால் புதர்கள் சலசலக்கும் ஓசை கேட்டது.
று திரும்பிப் பார்த்தான். எந்த அசைவையும் காணோம்.



மறுபடி நடக்கத் தொடங்க மறுபடி புதர் அசைந்தது. சத்யா
எச்சரிக்கையானான். ஏதாவது காட்டு மிருகமாய் இருக்கக்
கூடும். சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தவன், சத்தமின்றி
நடந்து சென்று ஒரு மரத்தின் பின்னே மறைந்தான். வெகு
நேரம் ஒரு சத்தமும் வரவில்லை. மறைந்திருந்து தாக்கக்
கூடிய மிருகம் ஏதாவது இருக்கலாம். மெதுவாய் நகர்ந்து
அடிமேல் அடி வைத்து முன்னேறிய போது, பக்கவாட்டில்
இலைகளின் அசைவு முன்னே சென்றது. இடது பக்கமாய்
நகர்கிறது போலும் என்று நினைத்தபடி நேராய் நடந்து
வலது பக்கம் நின்று திரும்பிப் பார்த்தவனின் கண்களில்
இலைச்சருகுகளுக்கு மேலாய் கால் விரல்கள் தென்
பட்டன.

எவனோ ஒளிந்திருக்கிறான். இவ்வளவு நேரமும்
அலைந்ததில் சத்யா எரிச்சலானான். யாருடைய வேலை
இது? எதற்காக மறைகிறார்கள்? மான் தோலுக்காகவோ,
யானை தந்தம், முயல் ரத்தம் என்று எதற்காக வேண்டு
மானாலும் வந்திருக்கலாம்.

கூட்டமாய் வந்திருக்கிறார்களா? அல்லது தனி ஆளா?
யோசித்தபடி சத்யா பேண்ட் பாக்கெட்டிலிருந்த பிஸ்
டலை கைகளில் தயாராய் பிடித்தபடி மெதுவாய் முன்
னேறினான். சத்யா அருகில் நெருங்கவும் அதுவரை
மறைந்திருந்த உருவம் அருகில் சத்தம் கேட்டு ஓட
முற்பட்டது. அதற்கு இடம் தராத சத்யா ஒரே பாய்ச்சலில்
ஓடிப் பிடித்து விலக்க முடியாமல் இறுக்கினான். இன்ன
தென்று புரியாத நிலையில் சில நொடிகள் சென்ற
பிறகுதான் தான் அணைத்திருப்பது ஒரு பெண் என்பதை
உணர்ந்தான். அவன் விடுவிக்கும் முன்னரே திமிறி
அவனிடமிருந்து விடுபட்ட டோலி தள்ளி நின்று கோப
துடன் முறைத்தாள்.

"நீங்க பெரிய ஆபீசரா இருக்கலாம். அதுக்காக இப்படி தொடறதெல்லாம் எங்கிட்ட வேண்டாம். இன்னொரு தரம் தொட்டீங்க..." அவள் முடிக்கும் முன் சத்யா குறுக்கிட்டான்.

"தொட்டால்?"

"தொட்ட கையை வெட்டிடுவேன்."

"எங்கே வெட்டு பார்க்கலாம்."

தன் கைகளை விரித்தபடி சத்யா அவளை நோக்கி முன்னேற அவள் பின்னே நகர்ந்தாள். இருவரும் இஞ்ச் இஞ்சாக நகர்ந்து ஒரு பெரிய மரத்தின் கிளை முதுகை தட்டவும் நின்றார்கள். சுற்றிலும் அடர்ந்த காடு. கேட்க யாருமற்ற தனிமை. ஒரு ஆடவனிடம் நெருக்கமான நிலையில்தான் டோலிக்கு தன்னையும் மீறி சற்றே பதறியது. அவள் கண்களில் தெரிந்த மிரட்சியைப் பார்த்த சத்யாவுக்கு வேடிக்கையாக இருந்தது "என்ன பயமாக இருக்கிறதா?"

"எனக்கென்ன பயம்?" என்றாள் டோலி தலையை ிர்த்தி.

'நிஜமாவே உனக்கு பயமில்லை?"

இல்லை."

ப்ப வா என்னுடன்."

டியாது" என்றாள் டோலி சற்றும் யோசிக்காமல்.

மில்லாவிட்டால் என்னுடன் வர வேண்டியது

ளுடன் வந்துதான் என் தைரியத்தை நிரூபிக்
அவசியம் இல்லை."



"அப்ப பயம்னு ஒத்துக்கோ."

"முடியாது. உங்களைப் பாத்து நான் ஏன் பயப்படணும்? இந்த காட்டிலுள்ள மிருகங்களுக்கே நான் பயப்படுவதில்லை" டோலி அலட்சியத்துடன் முகத்தைத் திருப்பினாள். அந்த அலட்சியம் அவனது ஆண் என்ற ஈகோவை தூண்டி விட்டது. திரும்பிய முகத்தின் செதுக்கினாற் போன்ற மூக்கும், செழுமையான கன்னங்களும் கவனத்தை ஈர்த்தன. சத்யா என்ன செய்கிறோம் என்றே புரியாமல் அவளை நோக்கி குனிந்த விநாடியில் பின்னாலிருந்து குரல் கேட்டது.

"டோலி.... ஏ டோலி..."

சத்யா சடாரென விலகினான்.

உடைத்த விறகை சுமையாக்கி தலையில் வைத்தபடி துளசி நின்றிருந்தாள். "விறகு உடைக்க இவ்வளவு நேரமா உனக்கு? போகலாம் வா" என்றபடி வந்தவள் அப்போது தான் சத்யாவைப் பார்த்தாள். தலையிலிருந்த விறகு கட்டு தானாய் நழுவியது.

"சார்... சார்... அடுப்புக்கு காய்ந்த செடிகளை ஒடித்துப் போகத்தான் வந்தோம். சந்தன கட்டையெல்லாம் இல்ல. நீங்க வேணா பிரிச்சிப் பாத்துக்குங்க சார். விறகை பிடுங்கிடாதீங்க. எங்க வீட்டில் உங்க புண்ணியத்தால் ஒரு வேளை அடுப்பு எரியும்" துளசி கெஞ்சலில் இறங்கினாள்.

"ம்... ம்..." என்று யோசிக்கும் பாவனையில் முகவாயை தட்டியபடி சிறிது நேரம் செலவிட்ட சத்யா, "நீ கெஞ்சுவதைப் பார்த்தால் பாவமாகத்தான் இருக்கிறது. ஆனால் உன்னிடமிருக்கும் பணிவு உன் தோழியிடம்

காணோமே! ரொம்ப துணிச்சல்காரியாய் இருக்கிறாள்'' என்றான் துளசியிடம்.

''டோலி ரொம்ப நல்லவள் சார். செல்லப் பெண்ணாக வளர்க்கப்பட்டவள் என்பதால் தன்னிச்சையாய் பேசுவாள். உங்களிடம் எதாவது தவறாகப் பேசியிருந்தால் அவளுக்கும் சேர்த்து நான் மன்னிப்பு கேட்கிறேன்'' என்றாள் துளசி.

''ஏன் உன் தோழி மன்னிப்பு கேட்க மாட்டாளா?''

துளசி டோலியிடம் லம்பாடி மொழியில் ஏதோ சொல்ல டோலி அவளை முறைத்து விட்டுத் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

துளசி தயங்கியபடி சத்யாவைப் பார்க்கவும் ''சரி நீ போ'' என தலையசைத்தான் சத்யா.

விட்டால் போதும் என்ற நிலையிலிருந்த துளசி விறகுக் கட்டை தூக்கி தலையில் வைத்தபடி அவசரமாக டோலியின் பின்னால் ஓட்டமும் நடையுமாகச் சென்றாள். இருவரும் சேர்ந்துதான் விறகு உடைக்க வந்தவர்கள் காட்டிற்குள் நுழைந்ததும் காய்ந்த குச்சிகளாக தேடி ஆளுக் கொரு பக்கம் போனார்கள். டோலி இரண்டு குச்சியை முறிக்கும் முன் சத்யாவின் காலடிச் சத்தம் கேட்டது. வரு வது யார் என்று பார்ப்பதற்காக புதர் மறைவில் மறைந்து கொண்டாள். சத்யாவைப் பார்த்ததும் அவன் பார்க்கும் ன் மெதுவாய் அந்த இடத்திலிருந்து சென்றுவிட பன்றபோதுதான் அவனிடம் மாட்டிக் கொண்டாள். துவாக இதுபோல வரும் அதிகாரிகள் அபராதம் என்ற ரில் வசூல் வேட்டை நடத்துவார்கள். ஒரு சில மான அதிகாரிகள் ஏமாந்த பெண்களைத் தவறான



முறையில் உபயோகப்படுத்திக் கொள்வதும் உண்டு. நல்ல ஆபீசர்கள் யாராவது வந்தால் ''சந்தன மரத்தை ஒடிக்கக் கூடாது, காட்டு பறவைகள், சிறு விலங்குகளைப் பிடிக்கக் கூடாது'' என்று எச்சரித்து அனுப்புவார்கள். சத்யா இதில் எந்த ரகத்தைச் சேர்ந்தவன் என்று யோசித்தபடி டோலி நடந்து கொண்டிருந்தாள்.

''டோலி உன் விறகு எங்கே?'' துளசியின் உலுக்கலில் திரும்பிப் பார்த்தவள், ''ஏதோ சத்தம் கேட்டு அப்படியே நின்னுட்டேன். விறகே உடைக்கல'' என்றாள்.

''இன்னிக்கு உங்கம்மா உன்னை நல்லா திட்டப் போகுது பார்.''

நழுவிப் போன முக்காட்டை இழுத்து விட்டபடி நடக்கும் அவர்களைப் பார்த்தபடி சத்யா அப்படியே நின்றிருந்தான். கணுக்கால் வரையிலான குஞ்சலம் வைத்த பாவாடையும், ஜாக்கெட்டின் முதுகுப் புறம் கட்டியிருந்த கயிறும், உழைத்து உரமேறிய உடலும் அலாதி கவர்ச்சியாய் இருந்தது. சில நிமிடங்களில் அவர்கள் கண்ணுக்கு மறைந்ததும் தன் வேலையை கவனிக்கப் போனான்.

அன்று இரவு சத்யா படுக்கையில் விழுந்தபோதுதான் தோன்றியது. காலையில் நாமா அப்படி நடந்து கொண்டோம் என்று! இதுவரை எத்தனையோ அழகான படித்த பெண்களைப் பார்த்துப் பழகியிருக்கிறான். அவர்களின் வெளிப்படையான ஆர்வத்தையும், அழைப்பையும் ஒரு அலட்சியமான தோள் குலுக்கலில் புறக்கணித்திருக் கிறான். எந்தப் பெண்ணின் முகமும் நினைவில் நின்றதே யில்லை. டோலியைப் பார்க்கும் வரை தனக்கு பெ களிடம் ஆர்வம் ஏற்படக்கூடும் அவர்களை கவனிக் கூடும் என்று கூட அவன் நினைத்ததேயில்லை. ந

வேளையாய் அந்த துளசி மட்டும் சமயத்தில் வராமலிருந்தால்? யோசித்தபடி புரண்டு படுத்து வெகு நேரம் கழித்து கண் அயரும் வேளையில் துளசி வராமலேயே இருந்திருக்கலாம் என்று தோன்றியது.



# 3

சத்யா பாரஸ்ட் அலுவலர்களுடன் வனபாதுகாப்பு சம்பந்தமாய் பேசிக் கொண்டிருந்தான். ''சந்தன மரம் வெட்டவும், விலங்குகளை பிடிக்கவும் அவ்வப்போது ஏதாவது கும்பல் காட்டினுள் நுழைந்துவிடத்தான் செய்கிறது. இரவு பகலாய் சுற்றினாலும் காட்டுப் பகுதியை முழுசாய் கண்காணிப்பது கடினம் என்றார்கள் அலுவலர்கள்.

''காட்டில் சட்டத்துக்கு புறம்பான நடவடிக்கைகள் நடந்தால் இங்கு வாழும் பழங்குடி மக்கள் நமக்கு தகவல் தெரிவிப்பார்கள் இல்லையா?''

''சிலர் விசுவாசமாய் தெரிவித்தாலும் பலர் கடத்தல் காரர்களிடம் பணமோ, பொருளோ வாங்கிக் கொண்டு அவர்களுக்கு உதவத்தான் செய்கிறார்கள்.''

''இங்கு வசிக்கும், காட்டில் திரிவதையே வேலையாகக் கொண்ட லம்பாடி இன மக்களுக்குத் தெரியாமல் காட்டிலிருந்து எதுவும் வெளியே செல்ல முடியாது. யாரும் உள்ளே வரவும் முடியாது. எனவே அவர்களின் உதவி



நமக்குப் பெரிதும் பயன்படும். அவர்கள் உதவி முழுதாக வேண்டுமென்றால் அவர்களுக்கு நம்மீது நம்பிக்கை வரும்படி நாம் நடந்து கொள்ள வேண்டும். அவர்களிடம் கையேந்த ஆரம்பித்தால், அவர்களின் பலவீனங்களை உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்த்தால் அந்த நம்பிக்கை வராது'' என்றான் சத்யா.

ஒருவரை ஒருவர் பார்த்தபடி அவர்கள் லேசாய் தலை குனிந்தனர்.

யாரும் பேசாமலிருக்கவே சத்யா தொடர்ந்து பேசினான். ''இன்று மாலை நாம் பழங்குடி மக்களின் பகுதிக்குப் போய் அவர்களைச் சந்திக்கலாம். இதற்கு முன்பு ஒரு புகழ் பெற்ற குற்றவாளியை பிடிப்பதில் கூட அந்த இடத்தில் வசிக்கும் மக்களின் உதவி பெருமளவு இருந்தது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.''

''உண்மைதான் சார்'' என்றார்கள் எல்லோரும் ஒரே குரலில்.

''சரி மாலையில் செல்லலாம்' என்ற சத்யா வேறு விஷயங்களைப் பேசத் தொடங்கினான்.

மாலையில் அவர்கள் சரிவில் ஏறி இறங்கியபோது சமதரையில் நெருக்கமாய் வீடுகள் காணப்பட்டன. ஒரு சில ஓட்டு வீடுகளும், பனை ஓலை குடிசைகளுமாய் இருந்தன. அங்கிருந்து கிளம்பிய அடர்த்தியான புகை காற்றில் காடு முழுவதும் பரவியது.

''இங்கே ஏதோ தீப்பிடித்த மாதிரி தெரிகிறதே; நிறைய புகை வருகிறது'' என்றபடி சத்யா வேகமாய் நடக்கவும் அவன் கூட வந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தபடி சிரித்தனர்.

''ஸார். இது தீப்பிடித்த நெருப்பு இல்லை. சாராயம் காய்ச்சுகிறார்கள்.'' என்றார் கார்டு.

''என்ன இவ்வளவு சாதாரணமாய் சொல்கிறீர்கள்? சாராயம் காய்ச்சுவது சட்டப்படி குற்றம்னு தெரியாதா அவங் களுக்கு? நீங்களும் இதை எப்படி அனுமதித்தீர்கள்?''

''யாரிடமும் அவர்கள் அனுமதி கேட்பதில்லை ஸார். பரம்பரையாக செய்து கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினர் கைது செய்து சிறையில் வைத்தாலும் ஜாமீனில் வெளியே வந்து மறுபடி சாராயம் காய்ச்சத் தொடங்கு வார்கள். ஒருவரை பிடித்தால் மற்றொருவர், எல்லோரையும் பிடித்தால் வீட்டுப் பெண்கள் கூட இந்தத் தொழிலை செய்வார்கள்.''

''அப்படியானால் சட்டத்தால் இவர்களை மாற்ற முடியாது. நம் முயற்சியால்தான் அதை செய்ய வேண் டும். நல்ல வேலையும் நிரந்தர வருமானமும் இருந்தால் இவர்கள் இந்தத் தொழிலை நாட மாட்டார்கள்'' சத்யா பேசியபடியே ஊரை நெருங்கினான்.

குடிசைகளுக்கு வெளியே வெட்டவெளியில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்த ஆண்களும் பெண்களும் குடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை அணுகிய கார்டு, ''இந்தா சக்கிரி பெரிய ஆபீசர் வந்திருக்கார் வா'' என்று ஒருவனை எழுப்பி அழைத்து வந்தான்.

''இவன் பெயர் சக்கிரி. இந்த கூட்டத்திற்கு தலைவன்'' என்று சத்யாவிடம் அவனை அறிமுகப்படுத்தினார்கள்.

சக்கிரி நிற்க முடியாமல் தள்ளாடியபடியே கண்களை சுருக்கி சத்யாவைப் பார்த்தான்.



''நீங்கதான் பெரிய ஆபீசரா? வணக்கங்க சாமி. வாங்க. வந்து உட்காருங்க'' என்றபடி முன்னால் நடந்து சென்று கட்டிலில் அமர்ந்திருந்தவர்களை அதட்டினான். ''ஏய் எழுந்துருங்க எல்லோரும். ஆபீசர் வந்துருக்கார் பாருங்க'' என உரக்கக் குரல் கொடுத்தான். அங்குமிங்குமாய் இருந்தவர்கள் ஒவ்வொருவராய் வந்து இவர்களை சுற்றி அமர்ந்தனர்.

''நீங்க உட்காருங்க'' என சக்கிரி அந்த பெரிய கட் டிலை காட்டினான். ''ஐயாவுக்கு எதாவது கொண்டா'' என அவன் குரல் கொடுத்ததும் சுண்டி பெரிய அலுமினிய தட்டு நிறைய ஆட்டுக்கறியும், ஒரு குவளையில் மதுவையும் கொண்டு வந்து வைத்து விட்டு பணிவுடன் ஒதுங்கி நின்றாள்.

சத்யா சுற்றிலும் பார்த்தான். பெரிய பேரல்களில் சாராயம் அடுப்பில் இருந்தது. பட்டிகளில் ஆடுகளும் மாடுகளும் அடைக்கப்பட்டிருந்தன. கண்ணாடியும், சலங்கைகளும் கலந்து வண்ண வண்ண துணிகளால் தைக்கப்பட்டிருந்த உடைகளில் அழகிய சித்திரமாய் நடமாடிய பெண்கள் ஆண்களுக்கு சரியாய் அமர்ந்து குடிப்பது அவனுக்கு வருத்தமாக இருந்தது.

''சக்கிரி இப்படி சாராயம் காய்ச்சறது தப்புன்னு உங் களுக்கு தெரியாதா? போலீஸார் தீவிர நடவடிக்கை எடுத்தால் நீங்கள் எல்லோரும் உள்ளே போக வேண்டி வரும்'' என்றான் சத்யா சக்கிரியிடம்.

சக்கிரியின் அருகே நின்றிருந்தவன் சிரித்தான். ''இது எல்லாருக்கும் தெரிஞ்ச ரகசியம் சாமி.''

''இருந்தாலும் சட்டத்துக்குப் புறம்பான விஷயத்தைச் செய்யலாமா?''

''சட்டம் கிடக்குது சாமி'' என்றான் சக்கிரி அலட்சியத்துடன்.

''இன்னிக்கு மது விலக்கும்பாங்க. நாளைக்கு அரசாங்கமே பாக்கெட் சாராயம் விக்கும். ஆட்சி மாறும். அரசாங்கமும் தலைவர்களும் மாறுவார்கள். ஆனா நாங்க மாற மாட்டோம். எங்க குலத்தொழிலை விடமாட்டோம்.''

சக்கிரிக்கு தான் பேசுவதின் பொருள் முழுதாய் தெரியுமா என்று சத்யாவுக்கு திகைப்பாக இருந்தது. சமாளித்தபடி தொடர்ந்து பேசினான்.

''குலத் தொழிலையே கவனித்து வந்தால் போதுமா சக்கிரி? உங்க குழந்தைகள் படிக்கணும். வேலைக்குப் போகணும்னு ஆசை இல்லியா உங்களுக்கு?''

அரைகுறை போதையில் இருந்தவர்கள் உரத்த குரலில் சிரித்தார்கள்.

''சாமி தமாஷ் பண்றாருடா.''

''சும்மாயிருங்கடா'' சக்கிரி அவர்களை அடக்கினான்.

''சாமி என் பொண்ணு கூட நீங்க சொல்ற மாதிரித்தான் ஏதோ சொல்லிகிட்டு கிறுக்கு பிடிச்சி அலையுது. பிள்ளைங்கள படிக்க அனுப்பி வெச்சிட்டா எப்படிச் சாப்பிடுவது? இங்கு எல்லாரும் சேர்ந்து வேலை செஞ்சாதான் வயிறு ிறைய சாப்பிட முடியும். பதினைஞ்சு, பதினாறு வருஷம் ள்ளைகளை சும்மா வீட்ல உட்கார வெச்சி படிக்க லவு பண்ற அளவுக்கு எங்களுக்கு பெரிய சொத்தெல் ் கிடையாது ஸார்.''

டிப்பு செலவையும் பிள்ளைங்க சாப்பாட்டு செல ும் கூட அரசே ஏத்துக்கும் சக்கிரி.''



''மதியம் சோறு போட்டா ஆச்சா? மீதி இரண்டு வேளை சாப்பாடு, அவன் சம்பாதித்தால் வரக்கூடிய வருமானம் இதெல்லாம் யார் தருவா?''

''அதற்காக இந்த வயதில்'' - என்று ஆரம்பித்த சத்யா தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். பார்த்த முதல் நாளிலேயே இவர்களுக்கு எதிரான விஷயத்தை திரும்பத் திரும்ப வற்புறுத்துவது சிநேக பாவத்தை முறிக்கும் என்பதை தன் அனுபவத்தில் அறிந்திருந்ததால் வந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினான்.

அதிகாரிகளின் செயல்பாடுகளுக்கு தாங்கள் ஒத்துழைப்பதாக சக்கிரி உறுதி கூறியதும் சத்யா எழுந்து விடைபெற்றான். நன்றாக மலைப்பகுதி முழுவதும் இருட்டி விட்டிருந்தது. டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் நடக்கையில் ஒரு வீட்டின் திண்ணையில் மங்கலான விளக்கு வெளிச்சத்தில் சிறுவர் சிறுமியர் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு நடுவே டோலி அமர்ந்திருந்தாள். சத்யா வியப்புடன் பார்க்கவும், கூட வந்த அலுவலர் சொன்னார்.

''நம்ம சக்கிரியோட பொண்ணுதான் டோலி. இந்த கூட்டத்திலேயே படிச்ச பொண்ணு இதுதான. அப்பா கிட்ட சண்டை போட்டு தன் தம்பியைக் கூட படிக்க வெக்குதாம். மாலை நேரத்தில் வேலை முடிந்து வரும் சிறுவர்களை உட்கார வைத்து படிப்பு சொல்லி தருது. நல்லா படிச்சி வேலைக்குப் போகணும்னு புத்திமதி எல்லாம் சொல்லுது. சரி சரின்னு தலையாட்டி கேட்டுக்கிற பசங்க காலையில் எழுந்ததும் வேலைக்குத்தான் ஓடறாங்க.''

சத்யா யோசனையுடன் தலையசைத்தான். ''சக்கிரியை விட இந்தப் பெண் நமக்கு உதவுவாள் என்று தோன்றுகிறது.

''உண்மைதான் சார். படித்த பெண். எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்ளும்'' என்றார் அவர்.

''அப்ப நாளை இந்த பெண்ணை ஆபீசுக்கு வரச் சொல்லுங்க'' என்றபடி நடந்தான் சத்யா.

மறுநாள் காலை சத்யாவைப் பார்க்க வந்த டோலி பளீரென்றிருந்தாள். இயல்பிலேயே சிவந்த அதரங்கள் மின்ன ''வரச் சொன்னீங்களாம்'' என்றாள் அவன் முகத்தைப் பாராமல்.

''ஆமாம். உன்னிடம் பேச வேண்டும் உட்கார்'' என்றான் சத்யா ஒரு இருக்கையைக் காட்டி.

''ஆச்சரியமா இருக்கு. எங்களை உட்காரச் சொல்லி பேசற முதல் ஆபீசர் நீங்கதான்'' என்றாள் டோலி உடனே அமராமல்.

''மனுஷங்களுக்கு மரியாதை கொடுப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?'' என்றான் சத்யா.

''படிச்சி பெரிய உத்யோகம் பாக்கறவங்களுக்கு எங்களை மதிக்கத் தோன்றுவதில்லை'' என்றாள் டோலி சற்றும் தயக்கமின்றி.

''ஒருவேளை அப்படி மதிக்காம போனதுக்கு உங்க நடவடிக்கையே கூட காரணமாய் இருக்கலாம்'' என்றான் சத்யா லேசான கடுமையுடன்.

''அப்படி என்ன மோசமா நடந்துகிட்டோமாம்?''.

''சாராயம் காய்ச்சறதும், காட்ல மரம் வெட்டறவங்களை
ண்டு கொள்ளாமல், கேட்டாலும் தகவல் தெரிவிக்காமல்
ப்பது, ஒரு சிலர் அவர்களுக்கு உதவி செய்வது,
ல்லாம் நல்ல விஷயமா?''



''எங்க சனங்க வயத்துப் பிழைப்புக்காக ஆரம்ப காலத்திலிருந்து சாராயம் காய்ச்சினாங்க. படிப்பறிவில்லாத நாடோடி பழங்குடி மக்கள் தங்கள் வருமானத்திற்கு வேறு என்ன செய்ய முடியும்? அதே மாதிரி மரம் வெட்டி லட்ச லட்சமாய் சம்பாதித்தவர்கள் எல்லாம் நகரத்தில் இருக்கிறார்கள். நல்ல அந்தஸ்தில் வசதியுடன் இருக்கிறார்கள். அவர்களைப் போய் கேள்வி கேளுங்கள்.''

அதற்கு பதில் சொல்லாமல் சத்யா பேச்சை மாற்றினான்.

''அரசு உங்களுக்கெல்லாம் எவ்வளவு சலுகை தந்திருக்கிறது தெரியுமா? பள்ளிகள், கல்லூரிகளில் இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்பில் முன்னுரிமை. பத்தாவது வரை படித்த பெண்களுக்கு திருமணத்தின்போது உதவித் தொகை தந்து பெண் கல்வியை ஊக்குவிப்பது இன்னும் எவ்வளவோ சலுகைகள் இருக்கிறது. வெளிமாநிலங்களில் உங்கள் இனமக்களில் சிலர் படித்து நல்ல வேலையில் இருக்கிறார்கள் தெரியுமா?

டோலியின் கண்களில் ஆர்வம் தெரிந்தது. ''உண்மையாகவா சொல்லுகிறீர்கள்?''

''உண்மைதான். இதில் பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?''

டோலியின் இதழ்கள் விரிந்து பற்கள் மின்னலாய் ஒளிர்ந்தன.

''நான் அப்படி கேட்டிருக்கக் கூடாதுதான்'' என்றா
மெதுவாய். தன் பின்னந்தலையில் தட்டியபடி.

அவள் செயலில் தெரிந்த குழந்தைத்தனம் அவனை
ரஸ்யப்படுத்தியது. வயிற்றை ஒட்டி முடிச்சிடப்பட்டிரு

ரவிக்கையும், இடுப்பில் இறங்கி நின்ற பாவாடையும் மிகுந்த கவர்ச்சியாகத் தோன்ற, அவளிடம் கேட்டான். "நீ ஏன் மற்ற பெண்களைப் போல புடவையோ, சுடிதாரோ அணியக் கூடாது?"

தலையிலிருந்து சரிந்த துப்பட்டாவை தோள்களைச் சுற்றி இழுத்து விட்ட டோலியின் முகம் வாடிப்போனது. "எனக்கு ஆசைதான். ஆனால் எங்கள் குல வழக்கப்படி பெரிய பெண்ணானதும் இந்த உடையைத்தான் அணிய வேண்டும். நாங்களே வீட்டிலிருந்தபடி இந்த உடையை தைத்துக் கொள்வோம். இதற்கென சில சம்பிரதாயங்கள் உண்டு."

"அணிய பிரியமில்லை என்று சொன்னால்?"

"அவ்வளவு எளிதில் சொல்ல முடியாது. பெற்றவர்கள் வற்புறுத்துவார்கள். மற்றவர்கள் கட்டாயப்படுத்துவார்கள். இந்த உடை எங்கள் குலத்தின் அடையாளச் சின்னம். அடையாளத்தை துறப்பது வேர்களை அறுப்பதற்குச் சமம்."

"அப்போ நீ இப்படியேதான் இருக்கப் போகிறாயா டோலி? குறிப்பிட்ட சமூகத்தின் நடமாடும் அடையாள அட்டையா நீ? உனக்கென்று ஒரு வாழ்க்கை. கண்ணியமாய்.. படித்தவனாய்.. உன் மீது அன்பு செலுத்துபவனாய் ஒரு கணவன் வேண்டாமா? சீருடை அணிந்த உன் பிள்ளைகள் பெரிய பள்ளிகளில் படிக்க வேண்டாமா?"

"வேண்டாம்." டோலி காதுகளைப் பொத்தினாள். "...டைக்காத விஷயங்களுக்கு என்னை ஏங்க வைக்...ர்கள்?"



"இதில் எதுவும் கிடைக்காததில்லை டோலி..." அவன் மேற்கொண்டு பேசுவதற்கு "ஸார்." என்ற வாட்ச்சரின் குரல் கேட்டது.

அவருடன் லம்பாடி இளைஞர்கள் சிலர் நின்றிருந்தார்கள். அவர்களை உள்ளே வரவழைத்து அமரச் செய்த பின் சத்யா பேசினான்.

"இந்த காடுகளில் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் நடந்தால் இங்கே வசிக்கும் உங்கள் கண்களிலிருந்து அவை தப்ப முடியாது. வனங்கள் நம் நாட்டின் அரண்கள் மட்டுமல்ல சொத்தும் கூட. எத்தனையோ விலங்குகளின் பறவைகளின் வாழ்விடம். மழையை தந்து நம்முடைய நீர் ஆதாரமாகவும் இருக்கிறது. பல தலைமுறைகளாக இங்கு வாழ்ந்து வரும் நீங்கள் யாராவது வனச் செல்வத்தை அபகரிக்க உதவி செய்தீர்கள் என்றால் உங்கள் வீட்டை நீங்களே திருடனிடம் ஒப்படைப்பதற்குச் சமம்."

"இல்லை. நாங்கள் அந்த மாதிரி காரியங்களில் ஈடுபட மாட்டோம்" என்றார்கள் அந்த இளைஞர்கள்.

"அப்போ எங்களுக்கு துணையாக நீங்களும் நின்று சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும், காடுகள் செழிப்படையவும் உதவி செய்ய வேண்டும். ஒரு சிலர் பணத்துக்கு ஆசைப்பட்டு சமூக விரோத காரியங்களில் ஈடுபடும்போது அதைத் தடுக்க முயற்சிக்க வேண்டும்."

டோலி இதற்கு பதில் சொன்னாள். "சுபாவத்தில் எங்களது மக்கள் மிக எளிமையானவர்கள். அவர்களது அன்றாட தேவைகள் தீர்ந்தாலே திருப்தியடைந்து விடுவார்கள். தேவைகளை தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகளைப் பற்றி யோசிப்பதில்லை. உங்களது சமூகத்தி

குறிப்பிடப்படும் தவறு சரி என்பதற்கான பொருளே எங்களது பழக்கங்களில் வேறாக இருக்கும். எங்கள் சமுதாயத்தில் நாங்கள் வகுப்பதுதான் சட்டம். அதை மீறுபவர்கள் எங்கள் தலைவர்களால் எங்களது கூட்டத்தினர் முன்னிலையில் தண்டிக்கப் படுவார்கள். நீங்கள் கூறும் சமூக நீதிகளை அவர்கள் பொருட் படுத்துவதில்லை.''

''இந்த கூட்டத்தில் ஒருத்தியாக பிறந்த நீ மட்டும் எப்படி படித்தாய்?'' என்றான் சத்யா வியப்புடன்.

டோலியின் முகம் புன்னகையால் ஒளிர்ந்தது. ''என் அப்பாவுக்கு என்னிடம் பிரியம் அதிகம். கூட்டத்தின் தலைவன் மகளை தடுக்க யாருக்கு துணிவு வரும்? முடிந்தவரை படித்தேன். உயர்நிலைப் பள்ளி படிப்பை ஆண் பெண் சேர்ந்து படிக்கும் பள்ளியிலும், கல்லூரி படிப்பை வெளியூரிலும் படிக்க வேண்டி இருந்ததால் பத்தாவதுடன் நின்று விட்டேன்'' என்றாள் ஏக்கத்துடன்.

''இப்ப கூட நீ படிக்கலாம் டோலி.''

''இல்லை. என் தம்பி படித்தால் போதும் எனக்கு. அவனும் இங்கேயே கிடந்து வெளிஉலகைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் போய் விடுவானோ என்பதுதான் என் கவலை.''

சத்யாவும் வாட்ச்சரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சத்யாவின் முகத்தில் முதல் முறையாக புன்னகை அரும்பியது. வாட்ச்சர் உற்சாகத்துடன் டோலியைப் பார்த்துச் சிரித்தார்.

''நீ கவலையே படாத டோலி. நம்ம ஐயா இருக்கும் போது என்ன கவலை உனக்கு? உன் தம்பி விஷயம் அவர்



பாத்துக்குவார். நீ மட்டும் நாங்க சொன்ன விஷயத்தை கவனி.''

டோலியின் முகம் மலர்ந்தது. ''எங்கள் குழந்தைகள் படிக்க உதவினா போதும். உங்களுக்கு எங்களால் முடிந்த எல்லா உதவியும் செய்கிறோம்.''

கூட இருந்த இளைஞர்களும் டோலியின் வார்த்தைக்கு ஒத்து ஊதினர். சத்யா அவர்களிடம் சொன்னான்.

''கேரளாவில் பரம்பிக்குளம் வனப்பகுதியில் உள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரமே இப்போது மாறி விட்டது. உங்களைப் போல் காடுகளில் வேட்டையாடி மரங்களை வெட்டிக் கொண்டிருந்த மலடர், காடர் போன்ற பழங்குடி மக்களுக்கு கேரள அரசு தனித்தனி காலனிகள் கட்டிக் கொடுத்ததுடன் அவர்களுக்கான வேலை வாய்ப்பையும் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. அங்குள்ள இளைஞர்களை கொண்டு காட்டைப் பாதுகாத்து சுற்றுலாவை மேம்படுத்த வனத்துறை மூலம் ''எக்கோ டெவலப்மென்ட் கமிட்டி''யை உருவாக்கி உள்ளது. பத்திலிருந்து பனிரெண்டாம் வகுப்பு வரை படித்தவர்கள் அதில் டூரிஸ்ட் கைடாகியிருக்கிறார்கள். வனப்பகுதியில் ஒரு பிளாஸ்டிக் குப்பை கூட விழாமல் பாதுகாக்கிறார்கள். படிக்காத பாமர மக்கள், ஒன்று சேர்ந்து தங்கள் குழந்தைகள் படிக்க 'சினேகாலயம்' என்ற லைப்ரரியை உருவாக்கியிருக்கிறார்கள். அதுபோல இங்கும் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அதற்கு நீங்கள் எல்லோரும் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும்.''

''ஹே...'' டோலி உற்சாகத்தில் துள்ளிக் குதித்தாள்.

''இந்த மாதிரி ஒரு நாளுக்காகத்தான் நாங்கள் இத்தனை

நாளாய் காத்திருந்தோம். நீங்க என்ன செய்யணும்னு மட்டும் சொல்லுங்க. மீதியை நாங்க பாத்துக்கறோம். அங்கிருந்தவர்களில் சிலர் டோலியின் பக்கம் சேர்ந்து கொள்ள சிலர் முணுமுணுத்தனர். ''இது சரி வருமா? நம்ம ஆளுங்களை மாத்த முடியுமா?''

மற்றவர்கள் அவர்களை அடக்கினார்கள். ''எல்லாம் சரியா நடக்கும். சும்மாயிரு.'' ஆயுசுக்கு விறகு வெட்டியே காலத்தைக் கழிக்கப் போகிறாயா?

''அவ்வளவு பெரிய ஆபீசர் சொல்றப்ப மரியாதை வேண்டாமா?'' என ஆளுக்காள் அதட்டவும் அவர்கள் அமைதியானார்கள். சத்யாவிடம் விடைபெற்று கூட்ட மாய் அனைவரும் தங்கள் இருப்பிடம் திரும்புகையில் டோலிக்கு உற்சாகம் கரை புரண்டது. ''துளசி'' என்று பெரிய குரலில் அழைத்தபடி அவள் வீட்டிற்குள் நுழைந் தாள்.

''என்ன இன்னிக்கு ஒரே சந்தோஷம் தெரியுதே முகத்துல? என்ன விஷயம்?'' என்றபடி எதிரே வந்தாள் துளசி.

''சந்தோஷம் மட்டுமா? அப்படியே பறக்கணும் போலிருக்கு எனக்கு. நமக்கெல்லாம் விடிவு காலம் வந்தாச்சு. நான் எதிர்பார்த்ததெல்லாம் நடக்கப் போகுது.''

''அடேங்கப்பா. அப்படி என்ன நடக்கப் போகுது?'' என்றாள் துளசி வியப்புடன்.

டோலி சத்யா கூறியதை விவரித்தாள். ''இன்னும் ஐந்து வருடங்களில் பாரேன், நம்ம சனங்க எப்படியிருக்கப் போறாங்கன்னு. இந்த விறகு அடுப்புக்குப் பதிலாய் கேஸ் ஸ்டவ். ஆட்டுரலுக்கு பதிலாய் மிக்ஸி. குடிசை வீடு



கான்கிரீட் கட்டிடமாய் மாறிவிடும். அழுக்கு வேஷ்டியும் முண்டாசுமாய் திரிபவர்கள், சலவை செய்த பேண்ட் சட்டையுடன் வலம் வருவார்கள். நீயும் நானும் கூட புடவை அணிய பழக வேண்டும்'' கண்களில் கனவு மின்ன பேசிக் கொண்டு போனவளை இடைமறித்தாள் துளசி.

''உடுப்பு மாறுவது இருக்கட்டும். நம்முடைய உலகம் மாறுமா? உனக்கு வரப் போகிற கணவனை குடியி லிருந்து மீட்க முடியுமா உன்னால்? சுபாவத்தில் முரடனும் சோம்பேறியுமான டோபரான் வீட்டிலிருந்து சாராயம் காய்ச்சி விற்பதை விட்டு விட்டு வேறு தொழிலை நினைத்துக் கூட பார்க்க மாட்டான். இதே ஊரில் இப் படிப்பட்ட ஒருவனை மணந்து கொண்டு வாழும் சூழ் நிலையில் நாம் என்ன உடை அணிந்தால் என்ன டோலி?''

சட்டென்று ஆர்வம் வடிய அமைதியாய் அமர்ந்திருந்த டோலி, ''இல்லை துளசி. நம் வாழ்க்கையும் நல்லபடியாய் அமையத்தான் போகிறது பார்'' என்று தீர்மானத்துடன் கூறியபடி எழுந்தாள்.



# 4

கெஸ்ட் அவுசின் வரவேற்பறை சோபாவில் சாய்ந்த படி அன்று வந்திருந்த முக்கிய கடிதங்களை பார்வை யிட்டான் சத்யா. அலுவலக கடிதங்களுக்கு மத்தியில்

ஷாலினியிடமிருந்து வந்த கடிதம் ஒன்றும் இருந்தது. ரொம்ப துணிச்சல் இந்த பெண்ணுக்கு என்று நினைத்த படி கடிதத்தைப் பிரித்தான்.

''உங்களை போனில் தொடர்பு கொள்ள பலமுறை முயற்சி செய்தேன். நீங்கள் கிடைக்கவில்லை. அண்ணனுக்குத் தொடர்பு கொண்ட போதுதான். நீங்கள் இருவரும் வேறு வேறு இடத்தில் இருப்பது தெரிந்தது. என் பெற்றோர் எனக்கு மாப்பிள்ளைப் பார்க்கத் தொடங்கி விட்டனர். எனக்கு இப்போது திருமணம் வேண்டாம் என்றால் உனக்காக அண்ணன் காத்திருக்கிறான் என்று திட்டுகிறார்கள். இங்கே தினமும் இவர்களை சமாளிப்பது பெரும்பாடாக இருக்கிறது. நீங்கள் இப்போது சென்னையில் இருந்திருந்தால் வருவது வரட்டும் என்று உங்களை கை காட்டியிருப்பேன். இப்போதும் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. உங்கள் பெயரைச் சொல்லி விடட்டுமா சத்யா? சென்னையிலிருந்து கிளம்பும் போது என் விருப்பத்தை சொன்னதற்கு கோபித்துக் கொண்டீர்கள். இப்போது இவ்வளவு தொலைவு வந்த பிறகு அதைப் பற்றி யோசித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். எனக்கு உங்கள் நினைவாகவே இருக்கிறது சத்யா. நீங்களும் என்னை நினைக்கிறீர்களா?... இன்னும் இரண்டு பக்கங்களுக்கு நீண்டது கடிதம்.

சத்யா மேற்கொண்டு படிக்கப் பிடிக்காமல் கிழித்து எறிந்தான். பிடிக்கவில்லை என்று முகத்திற்கு நேராய் சொன்ன பிறகும் இது என்ன முட்டாள்தனமான பிடிவாதம் ன்று அவனுக்கு எரிச்சல் வந்தது. பயனற்ற கற்பனை ால் ஷாலினியின் திருமணம் தடைபடக் கூடாது று நினைத்தவன், உடனே ராம்குமாருக்கு போன்



செய்தான். அலுவலக விஷயம் சிறிது நேரம் பேசிய பின்னர் ஷாலினியின் திருமணம் எப்போது என்று விசாரித்தான்.

''என்னப்பா திருமணத்தைப் பற்றியெல்லாம் நீ விசாரிக்கத் தொடங்கி விட்டாய்?'' என்றான் ராம்குமார் வியப்புடன்.

என்ன பதில் சொல்வதென யோசித்த சத்யா, ''உறவு முறையில் யாரோ கேட்டார்கள்'' என்றான் பொதுவாக.

''அவ்வளவுதானா? நான் கூட நீதான் மணந்து கொள்ளப் போவதாக சொல்லப் போகிறாய் என்று நினைத்து விட்டேன்.''

''ராம்குமார் நீ என்ன சொல்கிறாய்? அவள் உன் தங்கை.''

''சோ வாட்? தங்கை நண்பனுக்கு மனைவியானால் சகோதர உறவும் பாதிக்கப்படாது. நம் நட்பும் வலுவடையும்.''

''உன் தங்கையை மணக்கா விட்டாலும் நீ என் நண்பன்தான் ராம்குமார்.''

''இருந்தாலும் மைத்துனன் உறவில் உரிமையும் இருக்கும் சத்யா.''

ராம்குமாரின் சிரிப்பை சத்யாவால் ரசிக்க முடியவில்லை. அண்ணன் தங்கைக்கு மட்டும்தான் இந்த எண்ணமா? குடும்பத்தினர் எல்லோருமே இப்படித்தான் நினைக்கிறார்களா என்று தெரியவில்லை. நண்பனின் தங்கையை இதுவரை அவனும் ஒரு தங்கையாகத்தான் நினைத்து வந்திருக்கிறான். அதை அவனுக்குப் புரிய வைத்து விடும் நோக்கத்துடன், ''ராம்குமார் ஷாலினியை

நான் அப்படியெல்லாம் நினைத்துப் பார்த்ததே இல்லை. நான் அவளுடன் சகஜமாகப் பேசியது கூட இல்லை'' என்றான் அழுத்தமாக.

''எனக்குத் தெரியுமே'' என்றான் ராம்குமார். ''ஷாலினி மட்டுமல்ல எந்தப் பெண்ணுடனுமே நீ சகஜமாய் பேசிய தில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். சொல்லப் போனால் இந்த ஒரு தகுதிக்காகவே உன்னை மிஸ் பண்ணக் கூடாது என்று தோன்றியது.''

''ராம்குமார் ஷாலினி எனக்கும் தங்கை போலத்தான்.''

''போலத்தானே? தங்கை இல்லையே! பார்க்கிற பெண்களை எல்லாம் தங்கையாகவே நினைக்கத் தொடங்கினால் உனக்கு எப்பவும் கல்யாணமே ஆகாது. முதலில் ஷாலினியை மணந்து கொள். பின் மனைவி என்ற எண்ணம் தானாய் வந்து விடும்.''

''ராம்குமார் நிறைவேறாத ஆசைகளால் நம் உறவில் விரிசல் உண்டாக்கி விடாதே.''

''ஏன்? ஏன் நிறைவேறாது?'' என்றான் ராம்குமார் வேகத்துடன். என் தங்கைக்கு என்ன குறை?''

''எந்தக் குறையும் இல்லை. அவளுக்கு என்னைவிடச் சிறந்தவன் கிடைப்பான் பாரேன்.''

''நீ ஏன் மறுக்கிறாய்? அதை முதலில் சொல்'' என்றான் ராம்குமார் விடாப்பிடியாக.

சத்யா யோசித்தான். ராம்குமாரிடம் இந்த பேச்சை ஆரம்பித்ததே தவறோ என்று பட்டது. எதாவது ஒரு ாரணத்தைச் சொல்லும் வரை அவன் மீண்டும் மீண்டும் ளைத்துக் கொண்டேதான் இருப்பான். சட்டென



முடிவெடுத்த சத்யா ராம்குமாரிடம் சொன்னான். ''நான் ஒரு பெண்ணை காதலிக்கிறேன் ராம்குமார்.''

மறுமுனையில் ராம்குமார் சிரிப்பது நன்றாக கேட்டது. ''என்னிடமிருந்து கழண்டு கொள்ள எதாவது சொல்லாதே சத்யா. நீ ஒரு பெண்ணை விரும்பியிருந்தால் அது எனக்கு தெரியாமல் இருக்காது. சென்னையிலிருந்து நாம் கிளம்பும் வரை உன்னிடம் ஒரு காதலனுக்குரிய எந்த அறிகுறியையும் நான் பார்க்கவில்லை.''

சத்யாவுக்கு சிக்கிக் கொண்ட மாதிரி இருந்தது. அதிலிருந்து விடுபட உடனே சொன்னான். ''இங்கு வந்த பிறகுதான் காதலிக்கத் தொடங்கினேன் ராம்குமார்.

ராம்குமார் மீண்டும் சத்தமாகச் சிரித்தான். ''காட்டில் திரியும் விலங்குகளையும், கிராமத்தில் வளர்க்கும் ஆடுமாடுகளையும் காதலிக்கத் தொடங்கி விட்டாயா என்ன?''

''விலங்குகளைத் தவிர இங்கு மனிதர்களும் இருக் கிறார்கள். அவர்களுக்கு பெண்களும் இருக்கிறார்கள். அதில் அழகான பெண்களும் உண்டு ராம்குமார்.''

''இருக்கட்டுமே! அந்த பெண்களுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? பெரிய படிப்பும் நாகரீகமும் அற்ற பெண்களை நம்மைப் போல் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் எப்படி காதலிக்க முடியும்?

அப்படியே அழகில் மயங்கி விரும்பினாலும் அது எப்படி திருமணம் வரை செல்லக் கூடும்?

''காதலுக்கு கண்ணில்லை என்று நீ கேள்விப் பட்ட தில்லையா ராம்குமார்?''

''இருந்தாலும் என்னால் நம்பமுடியவில்லை'' என் றான் ராம்குமார் குழப்பத்துடன்.

''நான் உண்மையைச் சொன்னேன். நம்புவதும் நம்பாததும் உன் விருப்பம்'' என்றபடி சத்யா போனை வைத்தான்.

எப்படியோ சமாளித்து விட்டோம் என்றிருந்தது சத்யாவுக்கு. எப்போதும் அவனை சுற்றி வந்த பெண்களை எளிதாக விலக்கிய அவனால் நண்பனின் தங்கை என்பதால் ஷாலினியை விலக்குவது கடினமாக இருந்தது. ராம்குமாருடன் அவனுக்கு உண்டான நட்பை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு ஷாலினி அவனுடன் நெருங்கிப் பழக முயன்றாள். நல்ல பெண், கண்ணியமான குடும்பம் என்றாலும் கூட சத்யாவுக்கு அவள் மீது விருப்பம் எதுவும் ஏற்படவில்லை. ராம்குமார் தன் தங்கையை சமாளித்துக் கொள்வான் என்று நினைத்தபடி சத்யா தன் வேலையில் மூழ்கிப் போனான்.

''டோலி... ஏ டோலி...'' அம்மியில் மிளகாய் அரைத்துக் கொண்டிருந்த டோலி நிமிர்ந்து பார்த்தாள்.

கண்கள் சிவக்க, போதையில் தள்ளாடியபடி டோபரான் நின்று கொண்டிருந்தான். பதில் பேசாது வேகத்துடன் அம்மியை இழுத்து அரைத்தாள் டோலி. வெங்காயமும், தனியாவும் கீழே சிதறின!

''ஏ புள்ள கூப்பிடறது காது கேக்கல?''

''வெக்கமா இருக்கா உனக்கு? கட்டிக்கப் போறவன் தானே! எதுக்கு வெக்கப்படணும்? நிமிர்ந்து பார்.''

டோலி கோபத்துடன் முறைத்தாள். ''குடிச்சிட்டு வந்து இங்க என்ன அட்டகாசம் பண்ற? போ வெளியே.''

''இங்க பார்டா கோபத்தை. உங்கிட்ட இல்லாம வேறு ங்க போறதாம்? எழுந்து வா எங்கூட.''



''நா எங்கியும் வரமாட்டேன். இதெல்லாம் எங்கிட்ட வெச்சுக்காதே.''.

''அட, அவ்வளவு திமிரா உனக்கு? வாடீங்கறேன்'' அருகே வந்து அவள் கைகளைப் பற்றி எழுப்பினான் டோபரான்.

டோலி கோபத்துடன் அவன் முகத்தில் பளாரென அறைந்தாள். கையிலிருந்த மிளகாய் கன்னத்திலும் கண்களிலும் பட டோபரான் அலற ஆரம்பித்தான். அவனது கத்தலைக் கேட்டு அக்கம் பக்கமிருந்தவர்கள் ஓடி வந்தனர்.

''என்னாச்சு... என்ன?'' என்ற அவர்களின் விசாரணைக்கு பதில் சொல்லாமல் ''ஐயோ, கண்ணு முகமெல்லாம் எரியுதே'' என அங்கும் இங்குமாய் குதித்தான் டோபரான். அப்போதுதான் வெளியேயிருந்து உள்ளே நுழைந்தார் சக்கிரியும் சுண்டியும். டோபரானைப் பார்த்ததும் திகைத் துப் போய் அருகில் ஓடி வந்து ''என்ன? - என்ன?' என்று பரபரத்தனர். யாரையும் நிமிர்ந்து பார்க்காத டோபரான் ''எரியுது'' என கத்திக் கொண்டேயிருந்தான்.

''டோலி மாப்பிள்ளைக்கு முகம் கழுவ தண்ணீர் கொண்டு வா'' என்றான் சக்கிரி மகளிடம்.

டோலி நமட்டுச் சிரிப்புடன் தண்ணீரைக் கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்தாள். சக்கிரி, ''முகத்தை கழுவு டோபரான். தேங்காய் எண்ணெய் தடவினால் எரிச்சல் குறையும். நான் எண்ணெய் எடுத்து வருகிறேன்'' என்றபடி சொம்பை அவன் கையில் கொடுத்துவிட்டு எழுந்து போனான்.

டோபரான் நிமிர்ந்து டோலியைப் பார்த்தான். குறும்புச் சிரிப்புடன் டோலி அவனையே பார்த்தவாறு நின்றிருந்தாள்.

''டோலி அடுப்பில் காபிப் போட சுடுதண்ணி வெச்சிருந்தேனே பாத்தியா?'' என்ற சுண்டியின் குரல் உள்ளேயிருந்து கேட்டது.

டோபரான் கையிலிருந்த தண்ணீர் சொம்பை கீழே போட்டுவிட்டு வெளியே ஓடினான்.

டோலி விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள். மகள் சிரிப்பதையும், மருமகனாக விரித்தவன் ஓடுவதையும் பார்த்த சுண்டி,

''அந்த பையனை நீ என்ன செஞ்ச?'' என்றாள் டோலியிடம்.

''நா ஒண்ணும் பண்ணல. அவனாத்தான் ஓடறான்.''

''அது சரி அம்மியில் நீ அரைச்ச மிளகாய் அவன் முகத்தில் எப்படி இருந்தது?'' என்றாள் சுண்டி சந்தேகத்துடன்.

''ம்... குழம்பு வெச்சி சாப்பாடு போடறதுக்குள்ள அவனுக்கு அவசரம். பசியில் அம்மியிலேயே வாய் வெச்சி சாப்பிட ஆரம்பிச்சிட்டான்.''

டோலி மறுபடி அடக்க மாட்டாமல் சிரித்தாள்.

''நீ இப்படி அந்த பையனுடன் மல்லுக்கு நிக்கக் கூடாது டோலி. எப்படியானாலும் உன்னை கட்டிக்கப் போறவன்'' என்றாள் சுண்டி கவலையுடன்.

''இந்த குடிகாரனை கட்டிகிட்டு ஆயுசுக்கும் என்னை லோல் படச் சொல்றியா?''

''எல்லாருந்தான் குடிக்கறாங்க. ஏன் உங்கப்பன் குடிக்கலையா? கல்யாணம் ஆன பிறகு அவனை உன் வழிக்கு கொண்டு வர்றதுதான் புத்திசாலித்தனம்.''



''முரடனும் மூர்க்கனுமான அவனை வழிக்குக் கொண்டு வருவதோ அவனுடன் குடும்பம் நடத்துவதோ முடியாத காரியம் அம்மா.''

''டோலி இந்தா உனக்காக மலைத்தேன் கொண்டு வந்திருக்கிறேன்'' என்ற சக்கிரி மகளின் அருகே வந்து சுரைக்காய் குடுவையை அவளிடம் கொடுத்தான்.

''சரிப்பா'' என்று டோலி குடுவையை வாங்கிக் கொண்டு நகர்ந்ததும்,

''உம் மவ என்ன சொல்றா?'' என்றான் சக்கிரி மனைவியிடம்.

''டோபரான் குடிக்கறானாம். முரடனாம். அவனுக்குப் பிடிக்கலையாம்'' என்றாள் சுண்டி.

''இத்தனை அழகா நமக்கு பொண்ணு பிறந்திருக்கேன்னு நானே பலமுறை சந்தோஷப்பட்டிருக்கேன். நம்ம சனத்தில் அதிகம் படிச்சிருக்கு. எல்லாத்துக்கும் செல்லப் பொண்ணா இருக்கிறவளை அந்த முரட்டுப் பயல்கிட்ட ஒப்படைக்குமான்னு எனக்கே கவலையா இருக்கு. அவளோட அருமை தெரியாத பயல்.''

''ஏ சுண்டி இதென்ன புதுக்கதையா இருக்குது. மகளோட சேர்த்து நீயும் குழப்பற. நான் கூட கல்யாணத்துக்கு முன்னால் ஜல்லிக்கட்டு காளையா சுத்தினேன். இப்ப நீ மூக்கணாங்கயிறு போட்டு அடக்கல? அந்த மாதிரித்தான் கல்யாணம் ஆனா எல்லாம் சரியாயிடும். பரிசப் பணமா எத்தனை காசு கொடுத்திருக்கான்? அவள் மேல் பிரியம் இல்லாமலா தருவான்? அதுவுமில்லாம கல்யாணம் பண்ணி எங்க போயிடப் போறான்? இங்க நம்ம கண் முன்னாடி தானே இருக்கப் போறாங்க? நீ

ஏதாவது கவலைப்பட்டு அவ மனசையும் கலைச்சிடாதே'' என்றான் சக்கிரி.

சுண்டி பதில் பேசாது தலையாட்டினாள்.

சத்யா அன்று இரவு தூங்கப் போகும் சமயம் அவனுக்கு ரேஞ்சரிடமிருந்து போன் வந்தது. ''ஸார் காட்டிற்குள் தோனி மடுவு பக்கமாய் யாரோ வெளி ஆட்களின் நடமாட்டம் இருப்பதாய் மாடு மேய்க்க போனவர்களிடமிருந்து தகவல் வந்திருக்கிறது.''

''ஓ.கே. கார்டையும், வாட்ச்சர்கள் மூன்று பேரை அழைத்துக் கொண்டு எனக்காக காத்திரு. இன்னும் அரை மணி நேரத்தில் நான் அங்கே இருப்பேன்.''

''ஸார் நீங்களே வர்றீங்களா?'' என்றார் ரேஞ்சர் நம்ப மாட்டாத வியப்புடன். பொதுவாக பெரிய அதிகாரிகள் இது போன்ற கண்காணிப்பு வேலைகளுக்கு வரமாட்டார்கள் என்பதால் அவருக்கு மிகவும் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

சத்யா ஜெர்கினும் ஷூவும் அணிந்து இடுப்பில் சொருகிய கன்னுடன் கெஸ்ட் அவுசில் தன் அறையின் கதவைத் தாழிட்டு விட்டு ஜீப்பை எடுத்தபோது வாட்ச்மேனும், அவனுக்கு உதவியாய் நியமிக்கப்பட்டிருந்த பையனும் ஓடி வந்தார்கள். ''ஸார்...'' என்றபடி ஜீப்பின் கூட வந்தவர்களிடம் எதுவும் சொல்லாமல் அறை சாவியை கொடுத்து விட்டு ஜீப்பை வேகமாய் ஓட்டினான் சத்யா. பொதுவாக டிரைவர் வண்டியை ஓட்டுவதால், இன்று அவன் வண்டியை எடுத்தது உற்சாகமாக இருந்தது. அந்த இரவில் போக்குவரத்தில்லாத சாலையில் கொளத்தூரைக் கடந்து புற வழிச் சாலையில் இடது பக்கம்



திரும்பி தண்டா வன அலுவலகத்தை அடைந்தபோது சரியாக முப்பது நிமிடங்கள் முடிந்திருந்தன.

''ஸார் இவ்வளவு சீக்கிரமாய் வந்துட்டாரே'' என்ற அலுவலர்களின் வியப்பை கவனிக்காமல் டார்ச் லைட்டுடன் கிளம்பினான் சத்யா. சத்தம் எழுப்பாமல் சிறு கும்பலாய் அவர்கள் காட்டின் மையப் பகுதிக்கு வந்தார்கள். எங்கோ நரி ஊளையிடும் சத்தம் கேட்டது. தன் காலுக்கு நடுவே ஓடிய பாம்பை மிதிக்காமல் கவனமாய் அடியெடுத்து வைத்த சத்யா திடீரென நின்றான். தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது.

''யாரோ அடுப்பு மூட்டி சமைக்கிறார்கள்'' என்றார் கார்டு.

''சத்தமின்றி சுற்றி வளைக்க வேண்டும்'' என்று அவர்களுக்கு செயல்படும் முறையை சத்யா விளக்கினான். அதன்படி எல்லோரும் ஆளுக்கொரு திசையில் பிரிந்து போய் வெளிச்சம் தெரியும் இடத்தை சூழ்ந்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்து வேறு வேறு திசையில் நடக்கத் தொடங்கினர். காலில் ஒட்டும் அட்டைப் பூச்சிகளை உதறி விட்டு இஞ்ச் இஞ்சாக முன்னேறினார்கள். அவர்களை நெருங்க இரண்டு அடி தூரத்தில் இருந்தபோது சத்யா ஒரு மரக் கிளையில் ஏறிப் பார்த்தான். மூன்று கற்களை வைத்து அடுப்பு மூட்டியிருந்தார்கள். அடுப்பில் ஒரு பெரிய பானையில் எதுவோ கொதித்துக் கொண்டிருந்தது. அதைச் சுற்றி எட்டுப் பேர் அமர்ந்திருந்தனர். சத்யா சுற்றிலும் பார்த்தான். தூரத்தில் பாரஸ்ட் அலுவலர்களின் தலை தெரிந்தது. அவர்களுக்கு சைகை காண்பித்துவிட்டு இலை அசைவது தெரியாத வண்ணம் ஊர்ந்து சென்றான். எல்லோருக்கும் முன்னால்

கூட்டத்தை நெருங்கிய கார்டு அவசரப்பட்டு ஒரு காரியம் செய்தார்.

''யாரது? என்ன செய்கிறீர்கள் இங்கே?'' என்று குரல் கொடுத்தார். உடனே அமர்ந்திருந்தவர்கள் எழுந்து மின்னலாய் ஓடினார்கள்.

''சே!'' சத்யா சலிப்புடன் காலை உதைத்தான். உடனே திரும்பி ஓடியவர்களை துரத்தத் தொடங்கினான். எல்லோரும் ஆளுக்கொரு திசையில் ஓட ஆரம்பித்த சிறிது நேரம் யாரை யார் துரத்துகிறார்கள் என்பது தெரியாமல் ஒரே களேபரமாக இருந்தது. சிறிது தூரம் வரை அவர்களை துரத்திய சத்யாவால் ஐந்து நிமிடத்துக்கு மேல் தொடர்ந்து செல்ல முடியவில்லை. அடர்ந்த இருளும் நெருக்கமான மரங்களுமாய் இருந்த பகுதியில் அடையாளம் தெரியாதவர்களை பின்பற்றுவது முடியாத காரியம் என்றுணர்ந்தான். கூட வந்தவர்களும் பிரிந்துப்போன நிலையில் அதற்கு மேல் துரத்திச் செல்லாமல் திரும்பிச் செல்ல முடிவு செய்தான். அமாவாசை நெருங்கியதாலோ என்னவோ அன்று ஒரே இருட்டாக இருந்தது. வெளியே செல்ல வழி தெரியவில்லை. தான் ஒரு பாறை மீது நின்றிருப்பதை உணர்ந்தான் சத்யா. அங்கிருந்து பார்த்தபோது சுற்றிலும் அடர்ந்திருந்த மரங்களும், புதர்களுமாய் இருள் அடர்ந்திருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் விடிந்து விடும். விடியும் வரை இங்கேதான் இருந்தாக வேண்டும். வேறு வழியில்லை என்று நினைத்தபடி நின்றிருந்த பாறையிலேயே சாய்ந்து அமர்ந்தான் சத்யா. இருட்டுப் பகுதியில் குருட்டு யோசனையில் ஆழ்ந்து சிறிது நேரம் கழித்த பிறகு அவனுக்கு லேசாய் உறக்கம் வரத் தொடங் யது. கண்கள் சொருக ஆரம்பித்தபோது தூரத்தில் ஒரு



வெளிச்சப் பொட்டு தெரிந்தது. சத்யா சட்டென்று உஷாரானான். தப்பித்து ஓடியவர்களில் எவனாவது இருக்கலாம். பிஸ்டலை கைகளில் எடுத்துக் கொண்டு எழுந்து அமர்ந்தான். வெளிச்சம் அசைந்து அசைந்து மெதுவாய் நெருங்கி வந்தது. சில நிமிடங்களில் சத்யா இருந்த பாறையை நெருங்கியதும் சத்யா ஒரே பாய்ச்சலில் குதித்து அருகே சென்றான். கறுப்பு கம்பளியால் முக்காடிட்டிருந்த அந்த உருவத்தின் முதுகில் பிஸ்டலை அழுத்தி, ''அப்படியே அசையாமல் நில்'' என்றான். அந்த பதிலுக்குக் கலகலவென்ற சிரிப்பு சத்தம் கேட்டது. அந்த இடத்தில் அமானுஷ்யமாய் கேட்ட சிரிப்பொலியில் ஒரு நிமிடம் சத்யா திகைத்துப் போனான். தலை வரைப் போர்த்தியிருந்த அந்த உருவத்தின் கறுப்பு கம்பளியைப் பற்றி இழுத்தான். கம்பளி நழுவிக் கீழே விழ முன்னால் திரும்பி அவனைப் பார்த்த அந்த பெண்,

''உங்க பிஸ்டல் ஆண்களையோ, திருடர்களையோ சுடாதா டி.எப்.ஓ. ஸார்? என்னைப் போல் அப்பாவி பெண்களின் முதுகில் குறி வைக்கவா துப்பாக்கிக்கு லைசன்ஸ் கொடுத்தார்கள்?'' என்றாள் கிண்டலாக.

''டோலி நீயா?'' என்றான் சத்யா வியப்புடன்.

கையில் பிடித்திருந்த டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் தேவ லோகப் பெண்ணைப் போல் இருந்தாள். தலையிலிருந்து மார்பு வரை மூடும் துப்பட்டாவை அவன் கம்பளியுடன் சேர்த்து இழுத்து விட்டிருந்ததால் பளபளக்கும் பாவாடையிலும் ரவிக்கையிலும் சேர்ந்து அலாதி கவர்ச்சியாய் தெரிந்தாள். சத்யா கண்களைத் திருப்ப சற்றே சிரமப்பட வேண்டியிருந்தது. அகால வேளைகளில் தன்னந்தனி

யாய் ஒரு பெண் இப்படிப்பட்ட உடையுடன் எதிரே நிற்கும்போது அவனைப் போல பெண்களிடம் ஈடுபாடே இல்லாத ஆணுக்குக் கூட தலை சுற்றிப் போகிறது. பிறகு மற்ற அதிகாரிகளை குறை சொல்லி என்ன பயன் என்ற சீற்றம் வந்தது.

"இந்த நேரத்தில் உனக்கு இங்கே என்ன வேலை?" என்றான் சத்யா குரலில் கடுமையுடன்.

அந்த எதிர்பாராத கடுமையில் டோலி திகைத்தாள். "என் ஆட்டைத் தேடி வந்தேன்."

"என்னது?" என்றான் சத்யா தூக்கி வாரிப் போட்டவனாய். "நடு இரவில் தன்னந்தனியாய் இந்த காட்டிற்குள் ஆட்டைத் தேடி வந்தாயா? அதை நான் நம்ப வேண்டுமா?"

"நம்புவதும், அல்லாததும் உங்கள் விருப்பம். ஆனால் நான் உண்மையைத்தான் சொல்கிறேன். இன்று என் அம்மாதான் காட்டிற்கு ஆடு மேய்க்கப் போனாள். மேய்ப்பு முடிந்து திரும்பி வந்து மாலையில் ஆட்டை பட்டியில் அடைத்து விட்டு கொளத்தூர் சந்தையில் சாமான் வாங்கி வர போய் விட்டாள். நான் திண்ணையில் பசங்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தேன். எங்கள் பட்டியில் ஒரு ஆடு குட்டி போடும் தருவாயில் இருந்தது. நான் தினமும் அந்த ஆட்டை பார்த்து விட்டுதான் படுக்கப் போவேன். இன்று பார்த்தபோது சினை ஆட்டைக் ணோம். நானும் அம்மாவுமாய் தேடத் தொடங்கி னோம். பாதி தூரம் கூட வந்த என் அம்மா இருட்டத் டங்கியதும் களைத்துப் போய் வீட்டுக்குப் போய் டாள். எனக்கு அந்த ஆட்டை விட்டுப் போக மன மல் இவ்வளவு தூரம் வந்து விட்டேன்."



"இதென்ன கதை?" என்றான் சத்யா கிண்டலாய்.

"கதையல்ல. அடிக்கடி நடப்பதுதான். காட்டில் மேயப் போகும் போது சில சமயம் ஆடு அங்கேயே குட்டிப் போட்டுவிடும். நாம் பார்க்காமல் வந்து விட்டாலும் ஆடு தன் குட்டியை விட்டு நகராது. குட்டிக்கு காவலாய் அதே இடத்தில் நின்று கொண்டிருக்கும். திரும்பி வராது. நாங்கள் கண்டு பிடித்து ஆட்டையும் குட்டியையும் தூக்கி வருவோம். தாமதமானால் ஆட்டின் வாசம் பிடித்தபடி வரும் காட்டு நாய்களோ நரிகளோ ஆட்டைக் கடித்துக் குதறிவிடும். இப்போது இவ்வளவு நேரத்தில் என் ஆட்டிற்கு என்னவாகியிருக்குமோ தெரியாது" என்றாள் டோலி கவலையுடன்.

"ரொம்ப விசித்திரமான கவலை உன்னுடையது" என்றான் சத்யா.

"என் கவலை எனக்கு. உங்களை மாதிரி பெரிய ஆபீசரா இருந்தா எல்லாரும் உங்களுக்கு பயப்படுவாங்க. எதைப் பத்தியும் கவலை இல்லாம இருக்கலாம்."

"என்ன, என்னைக் கண்டு எல்லோரும் பயப்படறாங்களா?" என்றான் சத்யா ஆச்சரியமாய்.

"ஆமாம். இல்லியா பின்னே! பெரிய ஆபீசர்னு உங்க பெயரை சொன்னாலே நடுங்கறாங்களே! அதிகாரிகளை ரொம்ப மிரட்டுவீங்களாம். கண்டிப்பானவங்களாம். எல்லாத்துக்கும் மேல கைசுத்தமாம். பயப்பட மாட்டாங்களா என்ன?"

"அப்ப நீ மட்டும் ஏன் எனக்கு பயப்பட மாட்டேங்க டோலி?" என்றான் சத்யா குரலில் சிரிப்புடன்,

"சரிக்கு சரியா வாயாடறியே!"

அந்த குரலுக்கு நிமிர்ந்து டோலி அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் கண்களை சந்திக்க முடியாமல் முதல் முறையாய் ஒரு தயக்கம் வந்தது. தலை தானாய் குனிந்து கை விரல்கள் நகத்தை நெருடியது.

"சொல்லு டோலி. உனக்கு ஏன் என்னைப் பாத்து பயம் இல்ல?"

"சிறு வயதிலிருந்து இந்த காட்டுப் பகுதியிலேயே வாழும் நாங்கள் உங்களைப் போல பல அதிகாரிகளை, ஊழியர்களை பார்த்திருக்கிறோம். அவர்களிடமிருந்து எங்களை பாதுகாத்துக் கொள்ளும் முறையையும் கற்றிருக்கிறோம். ஒரு அதிகாரி முதல் முறை எங்களைப் பார்க்கும் பார்வையில் விசாரிக்கும் தோரணையில் தெரிந்து விடும் அவர் எப்படிப்பட்டவர் என்று. நீங்கள் வந்த முதல் நாளே தெரிந்தது நீங்கள் மிகவும் நல்லவர் என்பது. எங்கள் இன மக்களை முன்னேற்ற நீங்கள் முயற்சி செய்யப் போவதாக சொன்னதைக் கேட்ட பிறகு எங்களுக்கெல்லாம் நீங்கள் தான் நம்பிக்கை நட்சத்திரமாகத் தெரிகிறீர்கள்" என்றாள் டோலி. மனப்பூர்வமாய்.

"அடேயப்பா. டோலி உனக்கு கூட இவ்வளவு அமைதியாய் பேசத் தெரியுமா?" என்று சிரித்த சத்யா, "உங்கள் நம்பிக்கை நட்சத்திரத்துக்கு இப்போ நீதான் வழிகாட்டும் நட்சத்திரம். இங்கிருந்து நான் வெளியே செல்ல வேண்டும்" என்றான் அவளிடம்.

"வேற, இவ்வளவுதானா?" என்றாள் டோலி அலட்சியத்துடன். "இந்த காட்டில் எனக்குத் தெரியாத வழியா? ...ன் கூட வாருங்கள்" என சரிந்து கிடந்த போர்வையை ...டுத்து மேலே போட்டபடி முன்னால் நடக்கத் தொடங்



கினாள். கற்களும் முட்களும் இருந்த பாதையில் பேச்சின்றி இருவரும் சிறிது தூரம் நடந்தனர். திடீரென ஒரு இடத்தில் டோலி நின்றாள்.

"என்ன டோலி?"

பதில் பேசாது உற்று எதையோ கேட்டவள், அவன் கைகளைப் பற்றியபடி நடந்த திசைக்கு எதிர்பக்கமாய் வேகமாய் நடக்கத் தொடங்கினாள். ஏதாவது பெரிய விலங்காய் இருக்கும் என தன் அனுபவத்தில் அறிந்திருந்த சத்யா பதில் பேசாது அவளுடன் நடந்தான். திரும்பவும் பழைய பாறைக்கே வந்தார்கள் இருவரும். அவன் முன்பு அமர்ந்திருந்த கல் மீது அமர்ந்து 'ஒற்றை யானையின் பிளிறல் கேட்டது' என்றாள் டோலி.

"இப்போது என்ன செய்வது?" என்றான் சத்யா அவளிடம்.

"சிறிது நேரம் பொறுத்திருந்து பார்க்கலாம்" என்றாள் டோலி.

அவ்வளவு நேரமும் அவள் கையில் சன்னமாய் சுடர் விட்டுக் கொண்டிருந்த டார்ச்சும் அணைந்து போனது. "பேட்டரி தீர்ந்து போச்சு" என்றாள் டோலி சலிப்புடன். அந்த இடமே இருளில் மூழ்கி பயங்கரமாய் தெரிந்தது.

சத்யா யோசனையுடன் அவள் அருகே அமர்ந்து "என்னுடன் வந்த அலுவலர்கள் எங்கே போனார்களோ தெரியவில்லை" என்றான் பொதுவாக.

"அவர்களுக்கெல்லாம் இந்த காடு நல்ல பழக்கமான இடம். கையில் டார்ச் இருந்திருந்தால் இந்நேரம் வீ... போய் சேர்ந்திருப்பார்கள். இல்லை என்றால் விடி... காத்திருப்பார்கள். அவர்களைப் பற்றி நீங்கள் கவலைப்ப...

வேண்டியதில்லை. ஆமாம், துப்பாக்கியுடன் திருடனைப் பிடிக்க கிளம்பிய வீரர் கையில் ஒரு டார்ச் லைட் கூடவா இல்லாமல் வந்தீர்கள்?'' என்றாள் டோலி சிரித்தபடி.

''நீயும் உன் வாயும்!'' என செல்லமாய் கடிந்து கொண்ட சத்யா, ''தப்பி ஓடியவர்களைப் பிடிக்க துரத்தியதில் கையிலிருந்து விழுந்து உடைந்து போனது'' என்றான்.

''ஓ... வழி தெரியாத காட்டில்.. முகமறியாத ஆட்களைத் தேடிப் போன ஆளா நீங்கள்?''

''அப்படி தேடி வந்தால்தான் நிலவைப் போல ஒரு முகமும், அங்கிருந்து பேச இனிய துணையும் கிடைத்தது'' என்றான் சத்யா தன்னை மறந்து.

டோலி முகம் சிவந்ததை இருள் மறைக்க அமர்ந்திருந்த போதுதான் சத்யாவுக்கு தான் இதுவரை பெண்களிடம் இது போன்ற வார்த்தைகளை பேசியதேயில்லை என்று நினைவு வந்தது. தோற்றத்திலோ, பழக்க வழக்கங்களிலோ தன்னுடன் எதிலும் ஒத்துப் போகாத குடும்பப் பின்னணியைக் கொண்ட டோலியும் அவன் சுபாவத்தை மீறிய சரளத்துடன் அவனால் பழக முடிந்தது. சிரிப்பும், விளையாட்டும் இயல்பாய் வந்தது, அவளுக்கே அதிசயமாகத்தான் இருந்தது.

டோலி தான் போர்த்தியிருந்த கம்பளியை பாறை மீது விரித்தாள்.

''எத்தனை நேரம் இப்படி உட்கார்ந்திருக்க முடியும்? நீங்கள் சிறிது நேரம் இதில் சாய்ந்து தூங்குங்கள்'' என்றாள் அவனிடம்.

''இல்லை. இப்போது எனக்கு உறக்கம் வரவில்லை'' என்ற சத்யா,



''டோலி உனக்கு பாடத் தெரியுமா?'' என்றான் அவளிடம்.

''பெரிசா எனக்கு பாட்டெல்லாம் தெரியாது. திருமணத்தின் போதும், பண்டிகை சமயத்திலும் எங்கள் சனத்தில் பாடும் பாடல்கள் உண்டு. கும்மியடித்தபடி நாங்கள் எல்லோரும் பாடுவோம்'' என்றாள் டோலி லேசான வெட்கத்துடன்.

''இப்ப பாடேன். கேட்கலாம்.''

''உங்களுக்கு மொழி புரியாது. பிறகெப்படி பாடலை ரசிக்க முடியும்?''

''இசைக்கு மொழி அவசியமில்லை என்று நீ கேள்விப்பட்டதில்லையா டோலி? மொழியே தெரியாமல் வேற்று மொழி பாடலை பாடகர்கள் பாவத்தோடு பாடுவதில்லையா என்ன? நீ முதலில் பாடு. எனக்கு புரிகிறதா இல்லையா என்று அப்புறம் பார்க்கலாம்.'' டோலி அதற்கு மேல் பிகு பண்ணாமல் ஒரு லம்பாடி பாடலைப் பாடினாள். உண்மையிலேயே குரல் இனிமையாய் இருந்தது. வார்த்தைக்கு வார்த்தை குழைந்து கொஞ்சியது. அத்துவான காட்டில் முகம் கூடத் தெரியாத இருளில் காதுகளில் ஒலித்த பாடல் அவனுக்கு ஒரு வினோத உணர்வை ஏற்படுத்தியது. டோலி தன்னுள் லயித்தவளாய் நிறுத்தாமல் பாடிக் கொண்டேயிருந்தாள்.

சில நிமிடங்களில் பாட்டு முடிந்து போகவும், வாய் பேசாமல், அமர்ந்திருந்தவனிடம் ''ஸார் தூங்கிட்டீங்களா?'' என்றாள் டோலி.

''இல்லை. நீ பாடுவதை நிறுத்திய பிறகும் இங்கு பாட்டு சத்தம் கேட்பது போலவே ஒரு பிரேமை எ

பட்டது எனக்கு. ஒருவேளை இந்த பாறைகள் எதி ரொலிக்கின்றன என்று நினைக்கிறேன். டோலி உண் மையைச் சொல். நீ பாடியது ஒரு காதல் பாட்டுத்தானே!'' என்றான் அவளிடம்.

''எப்படித் தெரியும்? முன்பே கேட்டிருக்கிறீர்களா?'' என்றாள் டோலி நம்ப மாட்டாத வியப்புடன்.

''இல்லை. கேட்டதில்லை. உன் குரலின் நெகிழ்ச்சி யும், குழைவும் அதில் தென்பட்ட உணர்ச்சியும் உணர்த் தியது.''

''கண்ணைப் பற்றி கோபிகைகள் பாடுகிற பாட்டு இது'' என்றாள் டோலி.

''கண்ணனைப் பற்றி மட்டும்தான் பாடுவீர்களா? என்னைப் போன்ற ஆட்களைப் பற்றிய பாட்டு எதுவும் இல்லையா உங்கள் மொழியில்?'' என்றான் சத்யா கேலிக் குரலில்.

''எங்கள் சமூகத்தில் உங்களைப் போல் யாரும் ஆபீச ராய் இருந்ததில்லை. அதனால் அப்படிப்பட்ட பாட்டு எதுவும் இல்லை. வேண்டுமானால் தாலாட்டுப் பாட்டு பாடட்டுமா?''

''பாடேன்.''

டோலி மிருதுவான குரலில் பாடத் தொடங்கினாள். சிறிது நேரத்தில் சத்யாவுக்கு தன்னையறியாமல் கண்கள் சொருகின. டோலி பாட்டை முடித்தபோது சத்யா பாறை ில் விரித்திருந்த கம்பளியில் சரிந்து நன்றாக உறங்கி ட்டிருந்தான். சிறிது நேரம் வானத்தைப் பார்த்து நட்சத் ங்களை கணக்கிட்டுக் கொண்டிருந்த டோலியும் னையறியாமல் தூங்கிப் போனாள்.





# 5

''மே... மே...'' ஆடு கத்தும் அருகே கேட்டது. டோலி கண்களைத் திறக்க முயன்ற போது மல்லாந்திருந்த முகத்தில் கண்கள் கூசின. விடிந்து வெகு நேரமாகி விட்டதை உணர்ந்தவள் சடாரென எழுந்தாள். அவள் காலருகே அவளது ஆடு குட்டியுடன் நின்றிருந்தது. சட்டென ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் ''செல்லக்குட்டி'' என ஆட்டை அணைத்துக் கொண்டாள் டோலி. அருகில் சத்யா இன்னும் எழுந்திருக்காததைப் பார்த்தவள் ''ஸார்'' என குரல் கொடுத்தாள். அவன் பதில் பேசாமல் இருக்கவும் பலத்த குரல் கொடுத்தாள்.

சத்யா முகத்தை சுருக்கினானே தவிர எழுந்திருக்க வில்லை. திரும்பத் திரும்ப குரல் கொடுத்த பின் லேசாகக் கண் விழித்தான் சத்யா. கண்கள் சிவந்து முகம் கனன்று கொண்டிருப்பதைப் பார்த்த டோலி பயந்து போனாள். நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். காய்ச்சல் சூடாய் கைகளை தகித்தது. இப்போது என்ன செய்யலாம் என்று யோசித்த டோலி குட்டிப் போட்ட ஆட்டின் பாலை உள்ளங்கையில் கறந்தாள். தான் உடுத்தியிருந் துணியை பாலில் நனைத்து நெற்றியில் ஒற்றியெடு தாள்.

கீழே போய்த்தான் உதவிக்கு யாரையாவது அழை வர வேண்டும். இவனை தனியாக விட்டு விட்டு எப்

போவது என்று புரியாமல் மலைத்துப் போனாள். இரவெல்லாம் பேச்சும் சிரிப்புமாக இருந்தவனுக்கு சில மணி நேரத்தில் இப்படியா காய்ச்சல் வர வேண்டும்? நெற்றியில் போட்டிருந்த துணியின் ஈரம் உடம்பு சூட்டில் நிமிடத்தில் உலர்ந்து விட்டது. மறுபடி பாலில் நனைத்துப் போட்டபடி கவலையுடன் அவனைப் பார்த்தாள். தான் எவ்வளவு பெரிய அதிகாரி என்பதை காண்பித்துக் கொள்ளாமல் எவ்வளவு சகஜமாக பேசினார்? இது போல் நம் இனத்தை மதிக்கும் அதிகாரிகள் இதுவரை இங்கு வந்ததில்லை என்ற நினைவில் கண்கள் கலங்கின.

செய்வதறியாது சிறிது நேரம் அமர்ந்திருந்த போது தூரத்தில் விறகு பொறுக்க வருபவர்களின் குரல் சலசலவென்று பேசியபடி செல்வது கேட்டது.

''யார்? யார் அங்கே?... இங்க யாராவது வாங்க''... டோலி உரத்த குரலில் கத்தினாள். ''அக்கா... அண்ணா...'' யாராவது வாங்க. பாறைகள் அவள் குரலை எதிரொலித்தன. இப்போது காலடிச் சத்தம் அருகே கேட்டது. அவர்கள் இருக்கும் இடத்தில் புதர் அடர்ந்து இருந்ததால் டோலி பாறை மேல் உயரமாய் ஏறிச் சென்று பார்த்தாள். கும்பலாய் ஆண்களும் பெண்களும் கோடலி, அரிவாளுடன் குரல் வந்த திசையை சுற்றும் முற்றும் பார்த்தபடி வந்து கொண்டிருந்தனர். டோலி வாயை குவித்து உரக்கக் கத்தினாள்.

''நா இங்க இருக்கேன். இங்க பாருங்க.''

அவர்கள் குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தார்கள். டோலி கைகளை உயரத் தூக்கி அசைத்தாள். அவளைப் பார்த்ததும் வேகமாய் அவள் அருகில் வந்தார்கள்.



''டோலியா? இங்க என்ன செய்யற?'' என்றான் ஒருவன்.

''இது என்னடி கூத்து? உன்னை வீட்ல காணமேன்னு உங்கம்மா கிடந்து அழுதுகிட்டிருக்கா. உங்கப்பன் ஊரெல்லாம் தேடறான். நீ இங்கே எப்ப வந்த?'' என்றாள் ஒரு பெண் முகவாயில் விரல் வைத்து.

''அதெல்லாம் அப்புறம் சொல்கிறேன். என்னுடன் வாருங்கள்'' என அவர்களை சத்யா படுத்திருந்த இடத்துக்கு அழைத்துப் போனாள் டோலி.

''யார் இது?'' என்றார்கள் அவர்கள் திடுக்கிட்டு.

சத்யாவின் முகத்தை உற்றுப் பார்த்த ஒரு இளைஞன் ''இவர் நம்ம பெரிய ஆபீசர் இல்ல?'' என்றான் அவளிடம்.

''ஆமாம்'' என்று தலையசைத்தாள் டோலி.

''இவர் இங்கே எப்படி வந்தார்?''

''நீ எப்படி இவரைப் பார்த்தாய்?'' ஆளுக்காள் கேள்வி கேட்டனர்.

டோலி படபடவென்று பதில் சொன்னாள். ''என் ஆட்டைத் தேடி காட்டுக்குள் வந்த போது இந்த இடத்தில் இவரைப் பார்த்தேன். டார்ச் லைட்டில் பேட்டரி தீர்ந்து விட்டது. அமாவாசையாதலால் நிலா வெளிச்சமும் இல்லாமல் வீடு திரும்ப முடியவில்லை. இப்போ பார்த்தால் இவருக்கு நல்ல காய்ச்சல் அடிக்கிறது. இவரால் நடக்க முடியும் என்று தோன்றவில்லை எனக்கு. என்ன செய்வதென நீங்களே சொல்லுங்கள்'' என்றாள் அவர்களிடம்.

அவள் வார்த்தைகளுக்கு சாட்சி சொல்வது போல் ஆடு தன் குட்டியுடன் அவள் அருகே உரசியபடி நின்றது. ஆண்களில் இளைஞர்களாக இருந்த இருவர் சத்யாவை தூக்கிக் கொண்டனர். டோலி கீழே விழுந்த அவன் பிஸ்டலை எடுத்துக் கொண்டு அவர்கள் பின்னால் சென் றாள். மலை சரிவில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நடந்த பிறகு அவர்கள் வசிக்கும் பகுதியை அடைந்தார்கள். டோலி வீட்டில் கிடந்த கயிற்றுக் கட்டிலில் அவசர மாய் ஒரு துவைத்த ஜமக்காளத்தை எடுத்து விரித்தாள். அதில் சத்யாவை படுக்க வைத்தார்கள். மகளைத் தேடிப் போயிருந்த சக்கிரி செய்தியறிந்து அவசரமாய் ஓடி வந்தான். சத்யாவைப் பார்த்ததும் மகளை மறந்து போய்,

''அடடா, இவங்களுக்கு என்னாச்சு?'' என்றான் அனுதாபத்துடன்.

டோலி விபரம் சொன்னதும், அவர்களுக்கு வைத்தியம் பார்க்கும் மருத்துவர் வரவழைக்கப்பட்டார். 'பனியில் கிடந்ததாலும், காட்டுப் பூச்சிகள் கடித்ததாலும் ஏற்பட்ட ஜுரம்தான்' என்றபடி கையோடு கொண்டு வந்திருந்த இலைகளைப் பிழிந்து சத்யாவின் வாயில் சில துளிகள் புகட்டினார். அத்துடன் ஒரு வெள்ளை நிற பவுடரை டோலியிடம் கொடுத்து ''இதை தேனில் கலந்து ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை நாக்கில் தடவு. காய்ச்சல் இறங்கி விடும். நான் மாலையில் வந்து பார்க்கிறேன்'' என்றபடி அவர்களிடம் விடைபெற்றுப் போனார்.

அவர் போனதும் சுண்டி பயத்துடன் கணவனைப் பார்த்தாள். ''இவரோ பெரிய ஆபீசர். நம்ம நாட்டு வைத் தியமெல்லாம் இவங்களுக்கு சரிப்பட்டு வருமா? நாளைக்கு எதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆகிப்போச்சுன்னா



நாமதான் மாட்டிக்கணும். பேசாம பாரஸ்ட் ஆளுங்களுக்கு சொல்லி விடுங்க. அவங்க வந்து பெரிய ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போய் இங்கிலீஷ் வைத்தியம் பாப்பாங்க'' என்றாள்.

சக்கிரிக்கு மனைவி சொல்வது சரியென்றே பட்டது. அவன் ஏதோ சொல்ல வாயைத் திறக்கு முன் டோலி குறுக்கிட்டாள். ''இப்ப நீங்க போய் பாரஸ்ட் ஆபீசில் சொல்லி, அவங்க மேலிடத்துக்கு தகவல் கொடுத்து வண்டியோட வந்து கூட்டிட்டுப் போறதுக்குள்ள இரவாகி விடும். இவருக்கு கூட பிறந்தவங்களோ, பெத்தவங்களோ யாருமே இல்லைன்னு நம்ம வாட்ச்சர் சொன்னார். பெரிய ஆஸ்பத்திரியில சேர்த்தாலும் வீட்டு மனுஷங்கன்னு பாத்துக்க யாருமில்லை பாவம்.''

''அதனால்?'' என்றாள் சுண்டி கண்களைச் சுருக்கி.

''நாளைக் காலையில் ஆபீசுக்கு தகவல் அனுப்பு வோம். அவர்கள் வருகிற வரை நாமே கவனித்துக் கொள்வோம். சாதாரண காய்ச்சல் என்று வைத்தியர் சொல்லியிருப்பதால் இன்னிக்கு ஒரு நாளிலேயே குணமானாலும் ஆகி விடும்'' என்றாள் டோலி தயக்கத் துடன்.

சத்யாவை காட்டிலிருந்து தூக்கி வந்து அதுவரை அவர்களுடன் நின்றிருந்த இளைஞர்கள் சுண்டியிடம் சொன்னார்கள். ''சார் ரொம்ப நல்லவர் அக்கா. எங்களுக் கெல்லாம் கூட அரசாங்கத்தில் வேலை வாங்கித் தர முயற்சி பண்ணிட்டு இருக்கார். நம்ம பயல்களை படிக்க வெக்கச் சொல்லி பெரிசுகளை கூப்பிட்டு அன்னிக்கு பேசிட்டு இருந்தார். காட்டு நிலத்தில் பயிர் சாகுபடி

செய்யும் விவசாயத்தையும், கறவை மாடுகளுக்கு அரசு தரும் கடனைப் பற்றியும் விளக்கி அதை நடைமுறைப் படுத்தவும் முயற்சி செய்து வருகிறார். நமக்கு நல்லது செய்ய வந்திருக்கிறவருக்கு நாம ஒரு உதவி செய்ய வேண்டாமா அக்கா?''

சுண்டி அதற்கு மேல் எதுவும் பேசாமல் அமைதி யானாள். சக்கிரியும் டோலியும் சத்யாவைக் கூடவே இருந்து கவனித்துக் கொண்டனர். வைத்தியர் சொன்னபடி அரை மணிக்கு ஒரு முறை தேனில் மருந்தை குழைத்து தடவியதால் ஜுரம் படிப்படியாக குறைந்து வியர்க்கத் தொடங்கியது. மாலையில் டோலி கொடுத்த புழுங்கல் அரிசி கஞ்சியை குடித்தபடி அமர்ந்திருந்த சத்யாவைப் பார்த்த வைத்தியரின் முகம் மலர்ந்தது.

''என்னுடைய மருந்துக்கு பயப்படாத ஜுரம் கூட இருக்கிறதா என்ன?'' என்றார் தன்னைத்தானே புகழ்ந்து கொண்டு. காலையில் வேலையாய் வெளியே போயி ருந்தவர்கள் மாலையில் செய்தியறிந்து ஒவ்வொருவராய் சத்யாவைப் பார்க்க வந்தனர்.

''அவரைக் கொஞ்சம் ஓய்வெடுக்க விடுங்கள். போய் விட்டு அப்புறமாய் வாருங்கள்'' என டோலி கும்பலாய் இருந்தவர்களை அவ்வப்போது விரட்டிக் கொண்டிருந் தாள்.

தான் அமர்ந்திருந்த ஓட்டு வீட்டைச் சுற்றிலும் ர்வையை ஓட விட்ட சத்யா, ''என்னை எப்படி இங்கே ாண்டு வந்தாய் டோலி?'' என்றான் அவளிடம்.

'உங்களையா? இதோ இந்தக் கையால் அப்படியே கி தோள் மீது போட்டுக் கொண்டு வந்தேன்'' என்றாள் லி அலட்சியமாக.



''நீ செய்தாலும் செய்திருப்பாய்'' என்றான் சத்யா குரலில் சிரிப்புடன்.

டோலி சற்று தயக்கத்துடன் சொன்னாள். ''உங்களுக்கு பழக்கப்பட்ட எந்த சௌகர்யமும் இங்கே இருக்காது. நியாயமாக நாங்கள் உங்களது அலுவலகத்திற்கு தகவல் சொல்லியிருக்க வேண்டும். அங்கே பெரிய மருத்துவ மனையில் காட்டியிருப்பார்கள். ஆனால் காய்ச்சலில் நினைவில்லாமல் கிடந்த உங்களை அப்படியே அனுப்ப மனசில்லாமல்தான் இங்கே கொண்டு வந்தேன். உங்களுக்கு உடனடியாய் வைத்தியம் பார்த்துவிட்டு காலையில் பாரஸ்ட் ஆபீசுக்கு தகவல் அனுப்பலாம் என்றிருந்தேன். நல்ல வேளை உங்களுக்கு ஜுரம் இறங்கி விட்டது. இல்லை என்றால் நாங்கள் பெரிய பழிக்கு ஆளாகியிருப்போம். இன்று இரவு மட்டும் இங்கே வசதிக் குறைவை பொறுத்துக் கொண்டீர்கள் என்றால் நாளைக் காலையில் போய் விடலாம்.''

''எதற்கு வருத்தப்படுகிறாய் டோலி? என் வசதிக்கு எந்தக் குறையும் இங்கே இல்லை. அதுவும் சொல்லப் போனால் நேற்று இரவு வெட்ட வெளியில் நடுக் காட்டில் கழித்ததை விட இன்று மனிதர்களுடன் இங்கே கழிப்பது எவ்வளவோ மகிழ்ச்சியாக இருக்கிறது. அது மட்டுமல்ல நினைவில்லாமல் கிடந்தவனைக் காப்பாற்றி சிகிச்சையும் உணவும் அளிப்பவர்களிடம் என் சுகம்தான் பெரிதென்று நடந்து கொள்ளும் அளவு நான் சுயநலக்காரனும் அல்ல'' என்றான் சத்யா அவளுக்கு சமாதானமாய்.

அப்போது கூட்டமாய் அந்த வீட்டை கடந்து சென் வர்கள் கட்டிலில் அமர்ந்திருந்த சத்யாவைப் பார்த்த

அருகில் வந்தார்கள். "ஐயா எப்படியிருக்கீங்க? காலையில் காட்டுக்குப் போனபோதுதான் டோலி கத்துகிற சத்தம் கேட்டு வந்தோம். நீங்க நினைவில்லாம கிடந்ததைப் பார்த்து பயந்துட்டோம். இதோ இந்த பீமனுடைய மகனும் அவன் கூட்டாளியும்தான் உங்களை இங்கே தூக்கி வந்தார்கள். இப்ப பரவாயில்லையா?" என்றபடி காலையில் நடந்த சம்பவத்தை விவரிக்க, சத்யா டோலியைப் பார்த்த பார்வையில் அவளுக்கு அசடு வழிந்தது.

அவர்கள் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சென்றதும் சத்யா எழுந்தான். ஜுரம் விட்டதும் அவனால் ஒரே இடத்தில் உட்கார முடியவில்லை. வெளியே சிறிது நடக்கலாம் என்று வந்தபோது டோலியின் தம்பி அவன் கூடவே ஓடி வந்தான். அவனுடன் பேசியபடியே சத்யா குடிசைப் பகுதிகளை சுற்றி வந்தான். குளிருக்கு இதமாய் நெருப்பை மூட்டி அதை சுற்றி அமர்ந்து குடியும் கும்மாளமுமாய் இருந்தவர்கள் இவனைக் கண்டதும் அடையாளம் புரிந்து மரியாதையுடன் எழுந்து நின்றனர். இவர்கள் சாராய அடுப்பை முதலில் அணைக்க வேண்டும். இந்தப் பழக்கத்திலிருந்து மீட்க முயற்சிக்க வேண்டும். குறைந்த பட்சம் இளைய தலைமுறையாவது இந்தத் தொழிலில் ஈடுபடாமல் தடுக்க வேண்டும் என்று சிந்தித்த சத்யா மனதில் அதற்கான திட்டங்களை வகுக்கத் தொடங்கினான். நல்ல வேகத்துடன் அரை மணிநேரம் நடந்து விட்டு வந்ததும் டோலி நாட்டுக்கோழி சூப்பில் மிளகு அரைத்து அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள்.

"இதைக் குடிங்க. உடம்பு கலகலன்னு ஆயிடும்" என்றதும் சத்யா பதில் பேசாமல் சூப்பைக் குடித்தான்.



சிறிது நேரத்தில் டோலி கேழ்வரகு ரொட்டியும், கார சட்னியும் தந்தபோது அதை மறுத்துவிட்டு கட்டிலில் அமர்ந்து சோர்வுடன் கண்களை மூடினான். இரவு அக்கம் பக்கம் குடிசைகளிலிருந்த ஆண்கள் ஒவ்வொருவராய் வந்து சத்யாவின் கட்டிலை சுற்றி அமர்ந்தனர்.

"ஐயா ராவுக்கு கையை காலை வலிச்சுதுன்னா ஒரு குரல் கொடுங்க. நாங்களெல்லாம் உங்களுக்கு துணையா இங்கேதான் இருப்போம்" என்றபடி உட்கார்ந்து கொண்டவர்களிடம் சத்யா கூறினான்.

"எனக்கு இப்போ உடம்புக்கு எதுவுமில்லை. ஜுரம் கூட சரியாகி விட்டது. நீங்கள் எல்லோரும் உங்க வீட்டுக்குப் போய் தூங்குங்கள்" சத்யா சொன்னதை அவர்கள் கேட்க மறுத்தார்கள்.

"இன்னிக்கு எங்க விருந்தாளி நீங்க. நீங்க உடம்பு சுகமில்லாம இருக்கிறப்போ எப்படி உங்களை விட்டுட்டுப் போக முடியும்?" என்றார்கள்.

ஒரு வயதான கிழவி இடுப்பில் சொருகியிருந்த கண்ணாடி பளபளக்கும் ஓரம் நைந்த சுருக்கு பையைப் பிரித்தாள். அதில் ஒரு காகிதத்தில் மடித்து வைத்திருந்த விபூதியை நடுங்கும் விரல்களால் எடுத்து சத்யாவின் நெற்றியில் பூசி விட்டாள். "இது எங்க குலசாமி திருநீறு. பூசிக் கொண்டால் எந்தப் பிணியும் அண்டாது' என்றாள் அவன் கன்னத்தை வழித்து.

சாயம் போன பூப்போட்ட பாவாடையும், லேசாய் கிழிந்த சட்டையுமாய் சத்யாவின் அருகே வந்த ஒரு சிறுமி கையிலிருந்து அலுமினிய தூக்கை அவனிடம் கொடுத்தாள். "அம்மா உங்களுக்காக கறிக் கொழம்பு கொடுத்தனுப்புச்சி."

பாசாங்கே இல்லாத அந்த எளிமையான அன்பு சத்யாவின் மனதை நெகிழ்த்தியது. வெளியுலகில் இத்தனை நாள் அவன் காண்பித்து வந்த கம்பீரமும் கடுமையும் மறைந்து போய் அந்த சிறுமியை அணைத்துக் கொண்டான்.

அவன் கண் விழித்ததிலிருந்தே ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பனைவெல்லம் போட்ட சுக்கு காபியும், தினை உருண்டையும், இளநீரும், வாழைப்பழங்கள், பலாப்பழம் என்று சாப்பிட எதாவது கொடுத்தனுப்பிக் கொண்டேதான் இருந்தார்கள். உண்மையில் பெரிய மருத்துவமனையின் ஏசி அறையில் அநாதையாய் படுத்துக் கிடக்க வேண்டியவனை இங்கே கொண்டு வந்து சேர்த்த டோலிக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

இரவு அடிக்கடி எழுப்பி டோலி கொடுத்த மருந்தை சாப்பிட்டதால் காலையில் எழும்போது வழக்கம் போல உடம்பும் மனசும் பரபரப்பானது. விடியும் முன்பே ஊர் எழுந்து அன்றைய வேலையைப் பார்க்கத் தயாரானது. சேவல்கள் துயிலெழும்ப கூவும் சத்தமும், மாடுகளின் மணி சத்தமும், பால் கறக்கும் ஒலியும் ஒரு தாள லயத்துடன் கேட்டன.

''ஐயா, உடம்பைப் பாத்துக்கங்க. வருகிறோம்'' என்றபடி அவனுடன் இரவு இருந்தவர்கள் விடைபெற்று போனார்கள்.

டோலி கடுங்காபியை அவனிடம் கொடுத்தாள். ''பாலில்லாத பனை வெல்லம் சேர்த்த சுக்கு காபி. உங்களுக்குப் பிடிக்கிறதா பாருங்கள்'' என்றாள்.



''பனை வெல்லம் போட்ட காபி நான் நிறைய முறை குடித்திருக்கிறேன். எப்பவும் காடுகளை சார்ந்தே என் வேலை அமைந்திருப்பதால் போகும் இடங்களில் எல்லாம் பால் கிடைக்காது. என்னுடன் வருபவர்கள் இது போன்ற காபி தயாரித்துக் கொடுப்பார்கள். சில சமயம் மலைப் பகுதியில் வசிப்பவர்களிடமும் சுக்கு காபி, மல்லி காபியெல்லாம் அருந்தியிருக்கிறேன். ஆனால் நீ இரவெல்லாம் தூங்கவே இல்லை போலிருக்கிறதே டோலி! எனக்கு சமையல் செய்யவும், மருந்து கொடுக்கவுமாய் உன்னை ரொம்ப சிரமப்படுத்தி விட்டேன் போலிருக்கிறதே'' என்றான் அவளிடம்.

''சிரமமா?'' எனக்கா? நாங்கள் உழைக்கவே பிறந்தவர்கள் சார். உங்களுக்கு செய்வது சிரமமா?

இனியொரு முறை இந்த வார்த்தை சொல்லாதீர்கள்'' என்றாள் டோலி.

பதில் பேசாது காலி டம்ளரை அவளிடம் கொடுத்த சத்யா விடிந்து வெளிச்சம் பரவுவதைக் கண்டு எழுந்தான்.

''எங்கள் டிபார்ட்மென்ட் ஆட்கள் என்னைக் காணவில்லை என் காடுகளில் தேடிக் கொண்டிருப்பார்கள். ஹெட் ஆபீசுக்கு தகவல் தருமுன் நானே போய் அவர்களை சந்திப்பதுதான் நல்லது. நான் வருகிறேன்'' என்று கிளம்பினான் சத்யா.

உணவு உபசாரங்களையும், உடன் வரத் துடித்தவர்களையும் கட்டாயமாக மறுத்து விட்டு, சக்கிரியிடமும் சுண்டியிடமும் தன்னை பராமரித்து குணமாக்கியதற்கு நன்றி கூறினான்.

பாசாங்கே இல்லாத அந்த எளிமையான அன்பு சத்யாவின் மனதை நெகிழ்த்தியது. வெளியுலகில் இத்தனை நாள் அவன் காண்பித்து வந்த கம்பீரமும் கடுமையும் மறைந்து போய் அந்த சிறுமியை அணைத்துக் கொண்டான்.

அவன் கண் விழித்ததிலிருந்தே ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பனைவெல்லம் போட்ட சுக்கு காபியும், தினை உருண்டையும், இளநீரும், வாழைப்பழங்கள், பலாப்பழம் என்று சாப்பிட எதாவது கொடுத்தனுப்பிக் கொண்டேதான் இருந்தார்கள். உண்மையில் பெரிய மருத்துவமனையின் ஏசி அறையில் அநாதையாய் படுத்துக் கிடக்க வேண்டியவனை இங்கே கொண்டு வந்து சேர்த்த டோலிக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

இரவு அடிக்கடி எழுப்பி டோலி கொடுத்த மருந்தை சாப்பிட்டதால் காலையில் எழும்போது வழக்கம் போல உடம்பும் மனசும் பரபரப்பானது. விடியும் முன்பே ஊர் எழுந்து அன்றைய வேலையைப் பார்க்கத் தயாரானது. சேவல்கள் துயிலெழும்ப கூவும் சத்தமும், மாடுகளின் மணி சத்தமும், பால் கறக்கும் ஒலியும் ஒரு தாளலயத்துடன் கேட்டன.

''ஐயா, உடம்பைப் பாத்துக்கங்க. வருகிறோம்'' என்றபடி அவனுடன் இரவு இருந்தவர்கள் விடைபெற்று போனார்கள்.

டோலி கடுங்காபியை அவனிடம் கொடுத்தாள். பாலில்லாத பனை வெல்லம் சேர்த்த சுக்கு காபி. உங்களுக்குப் பிடிக்கிறதா பாருங்கள்'' என்றாள்.



''பனை வெல்லம் போட்ட காபி நான் நிறைய முறை குடித்திருக்கிறேன். எப்பவும் காடுகளை சார்ந்தே என் வேலை அமைந்திருப்பதால் போகும் இடங்களில் எல்லாம் பால் கிடைக்காது. என்னுடன் வருபவர்கள் இது போன்ற காபி தயாரித்துக் கொடுப்பார்கள். சில சமயம் மலைப் பகுதியில் வசிப்பவர்களிடமும் சுக்கு காபி, மல்லி காபியெல்லாம் அருந்தியிருக்கிறேன். ஆனால் நீ இரவெல்லாம் தூங்கவே இல்லை போலிருக்கிறதே டோலி! எனக்கு சமையல் செய்யவும், மருந்து கொடுக்கவுமாய் உன்னை ரொம்ப சிரமப்படுத்தி விட்டேன் போலிருக்கிறதே'' என்றான் அவளிடம்.

''சிரமமா?'' எனக்கா? நாங்கள் உழைக்கவே பிறந்தவர்கள் சார். உங்களுக்கு செய்வது சிரமமா?

இனியொரு முறை இந்த வார்த்தை சொல்லாதீர்கள்'' என்றாள் டோலி.

பதில் பேசாது காலி டம்ளரை அவளிடம் கொடுத்த சத்யா விடிந்து வெளிச்சம் பரவுவதைக் கண்டு எழுந்தான்.

''எங்கள் டிபார்ட்மெண்ட் ஆட்கள் என்னைக் காணவில்லை என் காடுகளில் தேடிக் கொண்டிருப்பார்கள். ஹெட் ஆபீசுக்கு தகவல் தருமுன் நானே போய் அவர்களை சந்திப்பதுதான் நல்லது. நான் வருகிறேன்'' என்று கிளம்பினான் சத்யா.

உணவு உபசாரங்களையும், உடன் வரத் துடித்தவர்களையும் கட்டாயமாக மறுத்து விட்டு, சக்கிரியிடமும் சுண்டியிடமும் தன்னை பராமரித்து குணமாக்கியதற்கு நன்றி கூறினான்.

''ஐயோ, நாங்க என்ன பெரிசா பண்ணிட்டோம்?'' என இருவரும் வெட்கப்பட்டார்கள்.

டோலியிடம் தலையசைத்து விட்டு அவன் கிளம் பியதும், கண்ணனும் அவன் நண்பர்களும் சத்யாவை பின் தொடர்ந்தனர். சத்யா தன் சுபாவமான வேகத்துடன் நடந்து சென்று செடிகளிடையே மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் டோலி. அவன் கண்ணுக்கு மறைந்ததும் அந்த இடமே வெறிச்சோடினாற் போலா யிற்று. வீட்டின் பின்பக்கமாய் சென்று அமர்ந்து தூரத்து மலைச்சிகரங்களை வெறித்தவளுக்கு தன்னையறியாமல் கண் கலங்கியது. சிறிது நேரம் தனிமையில் கண்ணீர் விட்ட பின் தன் தோளில் படிந்த கைகளை உணர்ந்து திரும்பினாள் டோலி.

துளசி ஒரு சிரிப்புடன் அவள் அருகே அமர்ந்தாள்.

''என்ன டோலி, எட்டாத பழத்துக்கு ஏங்கி அழற மாதிரி இருக்கு?''

''நான் ஏன் ஏங்க போறேனாம்?'' என்றாள் போலி ரோஷத்துடன்.

''பிறகு ஏன் உன் கண் கலங்கி இருக்கு?''

''அதுக்கு எத்தனையோ காரணம் இருக்கும். ஏன் தூசி — விழுந்திருக்கலாம்.''

இருக்கும். இருக்கும். உன் கண்ணுல தூசியா விழுந்து னை நாள் முழுக்க கண்மூட விடாமல் செய்தது னு நானும் பார்த்தேனே!''

த்தாச்சில்ல? இப்ப என்ன செய்யப் போற?''



''நா செய்யறதுக்கு எதுவுமில்ல டோலி. ஆனா நீ நடக்காத விஷயத்துக்கு ஆசைப்படாதே. நாம் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத உயரத்தில் இருப்பவர் அவர். ஒரு நாள் நம் குடிசையில் தங்கியதே அவர் பெருந் தன்மைக்கு எடுத்துக் காட்டு. அந்த நல்ல குணத்தை தவறாக எடை போட்டு விடாதே. நீ திருமணம் நிச் சயிக்கப்பட்டிருக்கும் பெண். கண்ட கற்பனைகளில் ஆழ்ந்து வாழ்க்கையை பாழாக்கிக் கொள்ளாதே.''

டோலி பதில் பேசாது அமர்ந்திருந்தாள். கண்ணீர் வழிந்து கன்னங்களை நனைத்தது. அவள் கண்களை துடைத்த துளசி,

''உங்கம்மாவோ, அப்பாவோ பாத்து என்ன ஏதுன்னு விசாரிக்கறதுக்குள்ள உள்ளே போகலாம் வா'' என டோலியின் கைகளைப் பற்றி உள்ளே அழைத்துப் போனாள்.

மலையடிவாரத்தில் சத்யாவின் ஜீப் அவன் நிறுத்திய இடத்திலேயே நின்றிருந்தது. கூட இன்னும் சில வண்டி களும், ஆட்களின் நடமாட்டமும் தெரிந்தது. கூடவே வந்த கண்ணனையும், அவன் நண்பர்களையும் தட்டிக் கொடுத்து திருப்பி அனுப்பி விட்டு சத்யா அலுவல கத்திற்குள் சென்றான். அவனைக் கண்டதும் அங்கு கூடியிருந்தவர்கள் முகத்தில் பெரிய நிம்மதி தெரிந்தது. ''நல்லவேளை ஸார். நல்லபடியா திரும்பி வந்தீங்க.

''நேற்று முழுவதும் நம்ம ஆட்கள் காட்டில் உங்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள். ஹெட் ஆபீசுக்கு தகவல் கொடுக்கலாம் என்றிருந்தோம். அதற்குள் லம் பாடிகள் பகுதியில் நீங்கள் இருப்பதாக செய்தி கிடைத்தது

நாங்களே அங்கு வரலாம் என்று கிளம்பிக் கொண்டிருந்தோம். அதற்குள் நீங்கள் வந்து விட்டீர்கள்'' என்று ஆள் மாற்றி ஆள் பேசினார்கள்.

''சரி அன்று இரவு தப்பித்துப் போனவர்களைப் பற்றி தகவல் கிடைத்ததா?'' என்றான் சத்யா.

''ஒரு விஷயம் தெரிந்திருக்கிறது ஸார்'' என்றார் ரேஞ்சர்.

''இங்கு சுற்று பக்கமுள்ள பகுதிகளில் வசிக்கும் சில வேலையற்ற இளைஞர்கள் ஒன்றாய் சுற்றித் திரிகிறார்கள். காடுகளிலும் சில நாள் தங்கியிருந்து சமைத்துச் சாப்பிடுகிறார்கள். பல சமயம் விளையாடப் போன சிறுவர்கள் அவர்களைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் அவர்களைப் பற்றி இதுவரை தவறான தகவல் எதுவும் வரவில்லை. விரும்பத்தகாத சம்பவம் எதுவும் நடைபெறவில்லை.''

''அதற்காக இந்த விஷயத்தை எளிதாக விட்டுவிட முடியாது. இது போன்ற இளைஞர்கள்தான் பின்னாளில் சமூக விரோத காரியங்களில் ஈடுபடுகிறார்கள். நாம் இதை உடனடியாய் கவனித்து நடவடிக்கை எடுத்தால்தான் இந்த இடம் எதிர்காலத்தில் வன்முறைகளின் களமாக மாறுவதை தடுக்க முடியும்'' என்றான் சத்யா அழுத்தமாய்.

சிறிது நேரம் ஏதோ சிந்தித்தபடி நடந்தவன், ''அந்த இளைஞர்களை எப்படியாவது நான் சந்திக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

மேலும் சில நிமிடங்கள் அவர்கள் செய்ய வேண்டியதை விளக்கி விட்டு கிளம்பி கெஸ்ட் அவுஸ் வந்து தன்



படுக்கையில் விழுந்ததும் களைப்பில் உறங்கிப் போனான்.



# 6

இருள் அடர்த்தியாக இருந்தது. மார்கழி மாதக் குளிர் படுத்திருந்த கோரைப் பாயை மீறி உடலை நடுக்கியது. ராஜேந்திரன் சற்றே விலகியிருந்த போர்வையை தலை வரை இழுத்து விட்டான். தெருவில் நடவுக்கு கிளம்பி விட்ட மாடுகளின் சலங்கை சத்தமும், மாட்டு வண்டிகளின் கடகட சத்தமும் கேட்டது.

எருமைப் பாலை கறந்து முடித்ததும் உள்ளே கொண்டு வந்த செல்லாயி அலுமினிய கேனில் பாலை ஊற்றினாள். குளிருக்கு இதமாய் கடுங்காபி குடித்துக் கொண்டிருந்த கருப்பசாமி டம்ளரை கீழே வைத்துவிட்டு கேனை தூக்கிக் கொண்டு பால் சொசைட்டிக்குக் கிளம்பினார்.

''ஏங்க, அந்த செவளைக் காளைக்கு கொஞ்சம் தண்ணி காட்டிட்டுப் போங்களேன்! அது எங்கிட்ட அடங்காது. ஆம்பளைங்க பிடிச்சாதான் நிக்கும்'' என்றாள் செல்லாயி.

''நேரமாச்சுனா பால் வேன் போயிடும். அப்புறம் கொளத்தூர் போய் தான் பாலை ஊத்திட்டு வரணும். ஏன்? உன் மகன் என்ன பண்றாப்ல? நாள் முழுக்க சும்மா கிடக்கற துரை இந்த வேலைகூட செய்ய மாட்டாரா?

என்றார் கருப்பசாமி பால் கேனை சைக்கிளுடன் சேர்த்து இறுகக் கட்டியபடி.

''காலங்காத்தால அவனை ஏன் வம்புக்கு இழுக்கறீங்க?'' என்றாள் செல்லாயி தணிந்த குரலில்.

''உன்னாலதாண்டீ அவன் குட்டிச்சுவரா போயிட்டு இருக்கான். ராவுக்கு அவன் வீட்டுக்கே வரல. எங்க போனான்னு கேட்டியா அவன்கிட்ட?''

''அவன் கூட்டாளிகளோட உட்காந்து பேசிட்டு இருந்துட்டு அப்படியே தூங்கிட்டானாம்.''

''நல்ல கூட்டாளிங்க அவனுக்கு. எல்லாம் உருப்படாத பசங்க. அப்பன் காசுல படிச்சுட்டு சும்மா சுத்துதுங்க. எவனாவது எதாவது வேலைக்குப் போறானா? அவனுங்க கூட சேர்ந்தா புத்தி எப்படிப் போகும்?''

''பால் வேன் கிளம்பிடப் போகுது. நேரமாகலியா உங்களுக்கு?'' என்றாள் செல்லாயி உள்ளே பார்த்தபடி.

''அண்ணே! இன்னும் பால் கொண்டு போகலியா? வேன் வந்துடிச்சி அண்ணே!'' என தெருவில் காலிக் கேனுடன் திரும்பி செல்பவர்கள் குரல் கொடுக்கவும், கருப்பசாமி அதற்கு மேல் தாமதிக்காமல் கிளம்பிப் போனார்.

பால் பண்ணைகளிலிருந்து பால் வேன்கள் ஒவ்வொரு கிராமமாகப் போய் பாலை சேகரித்துக் கொண்டு போகும். அதனால் இப்போதெல்லாம் உள்ளூரிலேயே பாலை ற்றுவிட முடிகிறது. முன்பானால் அருகிலுள்ள டவுன் கடைகளுக்கும், வீடுகளுக்கும், போய் பாலை ஊற்றி டு வந்து சேர்வதற்குள் வெகு நேரமாகிவிடும்.



தனக்குள் எண்ணியபடி மகனை ஒரு பார்வை பார்த்து விட்டு செல்லாயி உள்ளே போனாள்.

ராஜேந்திரன் தூக்கம் கலைந்து எழும்போது வெய்யில் சுள்ளென்று முகத்தில் அடித்தது. ஒரு வேப்பங்குச்சியை உடைத்து பல்லைத் தேய்த்தபடி தெருவைப் பார்த்தான். காலையில் கேட்ட மனிதக் குரல்கள், ஆடுமாடுகள் மேய்ச்சலுக்குக் கிளம்பும் சத்தம், சைக்கிள் மணியின் ஓசை எதுவுமின்றி ஊரே நிசப்தமாக இருந்தது. விடியும் முன்னே வேலை பார்க்க கிளம்பி விடுவதால் பெரும்பாலான வீடுகளில் ஆட்களே இல்லை.

ராஜேந்திரன் வாயைக் கொப்பளித்துக் கொண்டு உள்ளே வந்தான். தாழ்வாரத்தில் அமர்ந்து கேழ்வரகு புடைத்துக் கொண்டிருந்த செல்லாயி மகனைப் பார்த்ததும் கையிலிருந்த முறத்தை கீழே வைத்து விட்டு எழுந்து நின்றாள். முந்தானையை உதறி இடுப்பில் சொருகிக் கொண்டு, மரத்துப் போன கால்களை மடக்கியும் நீட்டியும் சரி செய்து கொண்டு,

''சாப்பிடறியாய்யா? உட்கார். எடுத்து வருகிறேன்'' என்று சமையலறைக்குள் சென்றாள்.

வெண்கல தட்டில் பழைய சாதத்தையும், விறகடுப்பில் சுண்டிய மீன்குழம்பையும் அவன் அருகில் வைத்துவிட்டு பித்தளை சொம்பில் நீரை நிறைத்து வைத்தாள். முதல் நாள் இரவிலிருந்து எதுவும் சாப்பிடாததால் ராஜேந்திரனின் பசிக்கு அந்த மீன் குழம்பும், பழைய சாதமும் அமிர்தமாய் இருந்தது. அம்மாவின் கைப்பக்குவமே தனிதான் என்று நினைத்தபடி தட்டை காலி செய்தான்.

''ராவு கூட சாப்பிட வரலையே நீ! நல்ல பசி உனக்கு. கொஞ்சம் கம்பங்கூழ் இருக்கு. குடிக்கிறியா?'' என்றாள் செல்லாயி.

ராஜேந்திரன் 'போதும்' என தலையசைத்தான்.

உழைத்து ஓய்ந்துப் போன உடம்பும், வெளுத்துப் போன தலையும், கிழிந்த புடவையுமாக, பாசத்தையும் கவலையையும் கண்களில் தேக்கியபடி அமர்ந்திருந்த வளைப் பார்த்த ராஜேந்திரனின் மனம் சுட்டது.

பல தலைமுறைகளாக விவசாயத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாத குடும்பம் அவர்களுடையது. செல் வத்தில் புரளவில்லை என்றாலும் குறைவின்றி வாழ்ந் தார்கள். இரட்டை வடம் செயினும், தங்கக் காப்பும் அகலமான மூக்குத்தியும், நெகமம் புடவையுமாய் அம்மா வலம் வருவாள். வெண்மை மாறாத வேட்டி சட்டையும், புல்லட் பைக்குமாய் அப்பா மிடுக்காய் இருப்பார். வீடு நிறைய நெல்லும், பயிறுமாய் கொட்டிக் கிடக்கும். அவர்கள் அப்படியே இருந்திருக்கலாம். ஆனால் ஆசை யாரை விட்டது? ஒரே மகன் நம்மைப் போல் சேற்றில் இறங்காமல் சட்டை கசங்காமல் சம்பாதிக்க வேண்டும் என்று பெற்றோர் இருவரும் ஆசைப்பட்டார்கள். சேலம் டவுனுக்கு படிக்க அனுப்பினார்கள். கல்லூரி விடுதிக் கட்டணம், மற்ற செலவுகள் என நிறையத்தான் ஆயிற்று. டிகிரி முடித்ததும் இது போதாது. மேற்கொண்டு முது நிலை பட்டப் படிப்பு படித்தால்தான் வேலை கிடைப்பது எளிதாக இருக்கும் என்றான் ராஜேந்திரன். ஏற்கனவே விழி பிதுங்கி நின்றிருந்தவர்கள். இரண்டு வருடம் தானே ப்படியாவது சமாளிக்கலாம் என தலையசைத்தார்கள்.



ஐந்து வருட படிப்பு முடிகையில் கருப்பசாமியின் புல்லட்டும், செல்லாயியின் நகைகளும் கரைந்த போதும் பெரிதாய் கவலைப்படவில்லை. பட்டம் வாங்கியதும் வேலையில் சேர பணம் வேண்டுமென்று தோட்டத்தின் பேரில் கடன் வாங்க நேர்ந்தபோது மட்டும் சற்றே தயங்கி னார்கள்.

''என்ன இப்போ? வேலை கிடைச்சதும் அவனே கடனை அடைக்கப் போகிறான். அப்பாவுக்கு பைக்குக்கு பதில் காரும், அம்மாவுக்கு இரட்டை வடத்துக்கு பதிலாய் நாலு வடம் சங்கிலியும் செஞ்சு போடப் போறான் என ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொண்டார்கள். வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி பணம் வாங்கி யவன். வேலைக்கு ஆர்டர் இன்று வந்து விடும். நாளை வந்து விடும் என்று இழுத்தடித்து விட்டு பணத்துடன் ஓடிப்போகவும் தான் இடிந்து போனார்கள்.

அத்தனை வருட உழைப்பும், எதிர்பார்ப்பும் வீணான துடன் கடனாளியாகவும் நிற்க நேர்ந்ததை கருப்பசாமியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அது அவ்வப்போது மகன் மீது கோபமும் எரிச்சலுமாக வெளிப்பட்டது. செல்லாயியோ மனசை அழுத்திய துக்கத்தில் மிகவும் அமைதியாகிப் போனாள். பேச்சும், வெளிப் போக்கு வரத்தும்கூட குறைந்து போனது. தப்பே செய்யாத தன்னை அப்பா கோபிக்கும் போதெல்லாம் ராஜேந்திர னுக்கு ஆத்திரம் வரும். ''நன்றாகப் படித்து முதல் வகுப்பில் பாஸ் செய்தேன். நான் கல்லூரிக்குப் போகாமல் ஊரை சுற்றினேனா? அல்லது தவறான பழக்கங்களில் உங்கள் பணத்தைச் செலவழித்தேனா?'' என்று கத்து வான்.

இந்த நாட்டில் படித்தவனுக்கு வேலை கிடைக்க வேண்டுமானால் ஒன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவனாய் இருக்க வேண்டும். அல்லது அரசியல் வாதியையோ அவர்கள் உறவினர்களையோ தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் போனதற்கு அவன் என்ன செய்ய முடியும்?

ராஜேந்திரன் எழுந்து போய் பம்பு செட்டில் குளித்து விட்டு வந்து சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பி னான். செருப்பில் காலை நுழைக்கையில், ''கத்திரி வெய்யில் காலையிலேயே மண்டையைப் பிளக்குது. வெய்யில்ல ரொம்ப சுத்தாத ராஜு'' என்றாள் செல் லாயி.

அப்பாவின் வார்த்தைகள் ஆத்திரத்தை ஏற்படுத்து கிறது என்றால் அம்மாவின் வாஞ்சை குற்ற உணர்ச்சியை உண்டாக்கி வீட்டிலேயே இருக்க முடியாமல் செய்கிறது.

ராஜேந்திரன் அம்மாவுக்கு தலையை அசைத்து விட்டு வெளியே போனான்.

ஆலமரத்தடி கோவில் திண்ணையில் வழக்கம் போல் நண்பர்கள் கூட்டம் அமர்ந்திருந்தது. அவனைப் போலவே படிப்பை முடித்து விட்டு வேலை கிடைக்காத தங்கராசு. செந்தில் வேலன், முருகன், அன்பரசு எல்லோரும் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் உள்ளூர் பொடியன்கள் சிலரும் உட்கார்ந் திருந்தனர்.

''என்ன ராஜு இப்பத்தான் விடிஞ்சுதா?'' என்றான் கராசு.

நீ எப்ப வந்த?'' என்றான் ராஜேந்திரன்.

''போனாத்தானே வர்றதுக்கு. நான் வீட்டுக்கே போகல. இங்கயேதான் கிடக்கறேன்'' என்றான் தங்கராசு.

''ஏன் போகல?''

''நல்லா கேட்ட போ. நைட் காட்டுக்குள்ள திசை மாறி ஆளுக்கு ஒரு பக்கம் போய்ட்டோம். நான் ஒரு வழியா வழி கண்டு பிடிச்சி ஊருக்குள்ள வர்றபோது விடிஞ்சு போச்சு. அந்த நேரம் போய் எங்கப்பன் கண்ணுல பட வேண்டாம்னு இங்கயே இருந்துட்டேன்.''

''செந்தில் நீ?''

''நான் ஜாமத்துக்கு வந்து வீட்டுக்குள்ள மெதுவா போயிடலாம்னு பதுங்கிப் பதுங்கி போனேன். என் கெட்ட நேரம் எந்தங்கச்சி பாத்ரூம் போக எழுந்தவ இருட்டுல என்னைப் பாத்துட்டு 'திருடன்... திருடன்'ன்னு கத்த ஆரம்பிச்சிட்டா. அக்கம் பக்கம் எல்லாம் வழித்து விட்டார்கள். கூட்டம் சேர ஆரம்பித்ததும் நான் இங்கு ஓடி வந்து விட்டேன்'' என்றான் செந்தில் வேலன்.

''நீங்களாவது பரவாயில்லடா. நான் சத்தமில்லாம போய் திண்ணையில் படுத்துக்கிட்டேன். பாத்துகிட்டே யிருந்த எங்கம்மாவும் அப்பாவும் எழுப்பி உட்கார வெச்சி அசிங்கமா திட்டறாங்க'' என்றான் முருகன்.

''எனக்கும் அப்படித்தாண்டா. எங்கயாவது போய் செத்துப் போயிடலாம்னு இருந்துச்சி'' என்றான் அன்பரசு.

''நாம ஏண்டா சாகணும்?'' என்றான் ராஜேந்திரன் கோபத்துடன்.

''நாம என்ன தப்பு செஞ்சோம் சாகறதுக்கு?''

''அதானே! என்றான் தங்கராசு. ''நாம ஏன் வெட்கப் படணும்? அவமானப் படணும்? படிப்பதற்கு பள்ளிகளை

யும் கல்லூரிகளையும் நம் அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. குழந்தைத் தொழிலாளர்கள் முறையை தடை செய்து குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புகிறது. ஆனால் படித்த அனைவருக்கும் வேலை தருகிறதா? ஓட்டுக்காகவும், துட்டுக்காகவும் வேலைகளை விற்பனை செய்கிறது. பிறகு நமக்கெப்படி வேலை கிடைக்கும்?''

''அதற்கு நம்மால் என்ன செய்ய முடியும்?'' என்றான் முருகன்.

''செய்யலாம். நாம் நினைத்தால் செய்யலாம். தேவை மன உறுதியும் நமக்குள் ஒற்றுமையும்தான். நேற்று இரவு இதைத்தான் பேச ஆரம்பித்தோம். அதற்குள் அந்த ஆபீசர் வந்து விட்டான்,'' என்றான் ராஜேந்திரன்.

''அசராத மன உறுதியும் குலையாத ஒற்றுமையும் நமக்குள் எப்போதும் இருக்கும். நீ விசயத்தைச் சொல்'' என்றான் முருகன்.

ராஜேந்திரன் சொன்னான். ''நம்மைக் கண்டு கொள்ளாதவர்களை கவனிக்க வைக்க வேண்டும். அதிரடியாக ஏதாவது செய்ய வேண்டும். இன்னும் சில நாளைக்காவது மக்களும், மீடியாக்களும் நம்மைப் பற்றியே பேச வேண்டும்.''

''கரெக்ட். என்ன செய்ய வேண்டும் சொல்'' என்றான் அன்பரசு.

''யாரையாவது கடத்தலாமா?'' என்றான் தங்கராசு.

''யாரைக் கடத்துவது?''

''நம்ம ஊர் எம்.எல்.ஏ.வைக் கடத்தினால்?''



''கடத்தி அவரை எங்கே தங்க வைப்பது?''

''காட்டுக்குள் கடத்திப் போய் விடலாம். முன்பு கன்னட நடிகர் ராஜ்குமாரை அது போல கொண்டு போனார்களே!''

''கடத்தினவரை விடுவித்தாலும் கூட பிறகு நாம் ஆயுசுக்கும் காட்டிலேயேதான் இருக்க வேண்டியிருக்கும். அது மட்டுமில்லாமல் நமக்கு இங்கே தண்டாவிலிருந்து மாதேஸ்வரன் மலை வரைக்கும் தான் காட்டுக்குள் வழி தெரியும். நாலு புறமும் போலீஸ் சுற்றி வளைத்தால் எளிதாய் அகப்பட்டுக் கொள்வோம்.''

''ம்... எங்காவது பாம் வைத்தால்?''

''அதற்கு வெடி மருந்து வேண்டுமே!''

''இங்கே பாரஸ்டில் கல் குவாரிகளில் கல் உடைப்பவர்களிடம் மருந்து வாங்கிக் கொள்ளலாம்.

''சரி வெடிமருந்து தயார் செய்து அதை எங்கே வெடிக்கச் செய்வது?''

''பொதுமக்கள் கூடும் இடங்களில் அதாவது கட்சி மீட்டிங், கோவில் திருவிழா, சந்தை...''

''இங்கெல்லாம் விபரமறியாத அப்பாவி மக்களும் இருப்பார்கள். நம்முடைய நோக்கம் ஒரு அதிர்வை ஏற்படுத்தி எல்லோர் கவனத்தையும் நம் பக்கம் திருப்புவதுதானே தவிர கொலை செய்வதல்ல'' என்றான் தங்கராசு.

''லட்சக்கணக்கானவர்களின் கவனத்தை ஈர்க்க ஒரு சிலர் பாதிக்கப்பட்டால் என்ன தப்பு?'' என்றான் செந்தில் வேலன்.

''அப்படிப் பாதிக்கப்படுபவர்களில் நம் வீட்டு ஆட்களும் இருந்தால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்'' என்றான் ராஜேந்திரன்.

''பிறகு என்னதான் செய்வது?'' என்றான் முருகன்.

சற்று யோசனைக்கு பின் ராஜேந்திரன் சொன்னான். ''நாளை இரவு கடைசி ட்ரிப் டவுன் பஸ் வருகிறது இல்லையா? பஸ்ஸிலிருந்து எல்லாரும் இறங்கியதும், டிரைவர் கண்டக்டரையும் இறங்கச் சொல்லிவிட்டு பஸ்சை கொளுத்துவோம். நஷ்டம் அரசாங்கத்திற்கு தான். அதன் பிறகாவது நம் அரசு விழித்துக் கொள்கிறதா பார்க்கலாம்.''

எல்லோரும் ஒத்த மனதாய் தலையாட்டினார்கள். என்ன தேதி எந்த இடம், எப்படிச் செயல்படுத்துவது என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கையில் ''தம்பிகளா!'' என்றபடி காக்கி யூனிபாரம் அணிந்த பாரஸ்ட் அலுவலர் ஒருவர் அவர்கள் எதிரில் வந்து நின்றார்.

''என்ன விஷயம்?'' என்றார்கள் பார்வையாலேயே.''

''நம்ம ஆபீசர் சார் உங்களை எல்லாம் பார்க்கணுமாம். கூட்டிட்டு வரச் சொன்னார்.''

''அப்படியா? நாங்க ஒண்ணும் அத்தனை பெரிய ஆள் இல்ல. அவர் வேற யாரையாவது சொல்லியிருப்பார். சரியா விசாரிச்சு கூட்டிட்டுப் போங்க'' என்றார்கள் கிண்டலாய்.

''எல்லாம் தெரியும் கண்ணுகளா. உங்களைத்தான் கூப்பிட்டாங்க. வாங்க போகலாம்'' என்றார் அவர்.



''பாத்தயில்ல, நாங்க இப்ப ரொம்ப பிஸியா இருக்கோம். டைம் கிடைச்சா வந்து பாக்குறோம்னு செல்லு'' என்ற அன்பரசு.

''யார்டா அவன் சீட்டை நல்லா கலைச்சி போடு'' என்றான் தன் கைகளிலிருந்த சீட்டுக்களை விசிறியாக்கிக் கொண்டு.

''ரொம்பக் கொழுப்புடா உங்களுக்கு. அவ்வளவு பெரிய ஆபீசர் வலிய வந்து கூப்பிட்டா திமிராவா பேசறீங்க?'' என்றார் அவர் எரிச்சலுடன்.

''ஏய்.. என்னா!'' செந்தில்வேலன் லுங்கியை மடித்துக் கட்டியபடி எழுந்து நின்றான். ''நாங்கதான் வர முடியாதுன்னு சொல்றோம்ல. அப்புறம் என்ன வம்பு வளக்கற? அவரு பெரிய ஆபீசர்னா நீ கூழைக் கும்பிடு போடணும். நாங்க எதுக்குப் பயப்படணும்? ஒரு வேளை அவர் எங்களைப் பாத்தே ஆகணும்னு சொன்னா அவரை இங்க வந்து பாக்கச் சொல்லு.''

''அப்படிப் போடு மாப்ள!'' என எல்லோரும் சிரிக்க, வன அலுவலர் கோபமானார். ''இப்பவே இத்தனை திமிர் உங்களுக்கு. இன்னும் நல்ல வேளை கிடைச்சு நாலு காசு சம்பாதிச்சா உங்களை எல்லாம் கைல பிடிக்க முடியாதுடா'' என்றார்.

''இன்னிக்கு முழுசா திரும்பிப் போறதில்லங்கற முடிவோட வந்துருக்கிறயா? உன்னை...'' என அவர்கள் கீழே கிடக்கும் சிறு சிறு கற்களைப் பொறுக்கவும் அதற்கு மேல் அங்கு நிற்காமல் அந்த அலுவலர் வேகமாக நடந்தார்.

தன் முன்னால் மூச்சு வாங்க நின்றிருந்தவரை சத்யா முதலில் உட்காரச் சொன்னான். ''என்ன சார் காட்டு பன்றியோ, நாயோ துரத்தியதா? இப்படி மூச்சு வாங்குதே உங்களுக்கு!'' என்றான்.

''காட்டு நாய் இல்ல சார். தெரு நாய். அந்த பசங்களை எல்லாம் மனுஷங்களா நினைச்சி கூப்பிடச் சொன்னீங்களே! என்னா திமிரா பேசறாளுங்க தெரியுமா? சார் உங்களைப் பாக்கணும் வாங்கன்னு சொன்னா, உங்க சாரை வேணும்னா இங்க வந்து பாக்கச் சொல்லுங்கறாங்க. நான் அடிபடாம வந்ததே பெரிய விஷயம் போங்க'' என்றார் ஆசுவாசப்படுத்திக் கொண்டு.

ஒரு நிமிடம் யோசித்த சத்யா, ''ஓகே. நாம போய் அவங்களை பார்த்தால் போச்சு'' என்றான் காஷுவலாக.

''சார், நீங்க அவனுங்களைப் பார்க்கப் போறீங்களா?'' என்றார்கள். அங்கே நின்றிருந்தவர்கள் ஆச்சரியமாக.

''யார் போனால் என்ன? அவர்களைச் சந்திக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்'' என்றான் சத்யா.

''உங்கள் தகுதியை மறந்து நீங்கள் ஏன் கீழே இறங்கிப் போக வேண்டும்? வேலை வெட்டி இல்லாத பசங்கள் பாரஸ்ட்டில் சட்ட விரோதமான செயல்களில் ஈடு பட்டிருந்தார்கள் என நாம் ஒரு வார்த்தை போலீசுக்கு சொன்னால் போதும். குடும்பத்தோடு ஓடி வந்து காலில் விழுவார்கள்'' என்றார் பல ஆண்டுகள் அனுபவமுள்ள ரேஞ்சர்.

''ஆனால் ரேஞ்சர் சார், அவர்கள் அன்று எந்த சமூக விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்பது நமக்கு நன்றாகத் தெரியும். நம்முடைய ஈகோ சராசரி



துடுக்குத்தனம் கொண்ட இளைஞர்களை தவறான பாதைக்குத் திருப்பி விடக் கூடாது. இப்போது பொய் குற்றம் சுமத்தி அவர்களை காவல் நிலையத்திற்கு அனுப்பினால் அடுத்த நாளே ஜாமீனில் வெளியே வந்து பொய்யை உண்மையாகவே செய்யத் தொடங்குவார்கள்'' என்றான் சத்யா.

அவன் வார்த்தைகளிலிருந்த உண்மை புரியவும், யாராலும் எதுவும் பேச முடியவில்லை.

டிரைவரை அழைத்த சத்யா அவனிடம் சாவியை வாங்கிக் கொண்டு வீட்டிற்குப் போகச் சொன்னான். வன அலுவலர்கள் இருவரை அழைத்து பாரஸ்ட்டில் மரங்கள் வெட்டப்பட்ட காலி இடங்களை மார்க் பண்ணச் சொன்னான். ''நான் ஆலமரத்தடிக்குப் போய் விட்டு வருகிறேன்'' என்று அவன் கிளம்பியதும் ரேஞ்சரும், அந்த பாரஸ்ட் அலுவலரும்,

''நாங்களும் வருகிறோம் சார்'' என அவன் கூடவே கிளம்பினார்கள். மூவரும் ஜீப்பில் ஏறும்போது பண்ணையாள் ஒருவன் வேகமாக ஓடி வந்தான்.

''சார்.. சார்... நம்ம சுள்ளேரிக்காட்டு பரமசிவம் ஐயா நெஞ்சு வலியால துடிக்கறார். உள்ளூர் வைத்தியர் வந்து பார்த்துவிட்டு இது மாரடைப்பு போலிருக்கு. டவுன் ஆஸ்பத்திரிக்குதான் போகணும்ங்கறாரு'' என்றான் படபடப்பாக.

''அடப்பாவமே! பரமசிவத்துக்கா நெஞ்சுவலி!'' என ரேஞ்சர் பரிதாபப்பட,

''முதலில் அவரை மருத்துவமனைக்கு கொண்டு போங்கள்'' என்றான் சத்யா.

''அதற்காகத்தான் ஐயாவைப் பார்க்க வந்தேன்'' என அவன் தயங்கினான்.

''என்னப்பா, பணம் ஏதும் வேண்டுமா?'' என்றான் சத்யா பாக்கெட்டுக்குள் கைகளை விட்டபடி.

''இல்லீங்கய்யா. இங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக மாட்டு வண்டி, பைக்கைத் தவிர இந்த ஊரில் வேறு வாகனம் இல்லை. வாடகைக்கு வண்டி பிடிக்க வேண்டுமானால் கொளத்தூருக்குத்தான் போக வேண்டும். வண்டிக்கு சொல்லி அது வருவதற்கு நேரமாகி விடும். அதனால்... அவன் தயங்கித் தயங்கிப் பேசியதிலிருந்து விஷயத்தை புரிந்து கொண்ட சத்யா, டிரைவர் இருக்கிறானா பாருங்கள்'' என்றான் அங்கிருந்தவர்களிடம் அவன் வீட்டிற்குப் போய் விட்டான் என்றறிந்ததும் அதற்கு மேல் ஒரு நொடி கூட தாமதிக்காமல் ஜீப்பை கிளப்பினான். கூட வந்த பண்ணையாள் வழிகாட்ட தோட்டத்தின் நடுவே மேடாய் இருந்த ஓட்டு வீட்டின் அருகில் ஜீப் நின்றது.

ஊர் மொத்தமும் அந்த வீட்டின் முன் கூடியிருந்தது. பேச்சு குரல்களும் அழுகையுடன் புலம்பும் சத்தமும் உரத்துக் கேட்டன. ஆண்கள் அங்கும் இங்குமாய் ஓடிக் கொண்டிருந்தார்கள். அத்தனை பரபரப்பிலும் சத்யாவைப் பார்த்ததும் மரியாதையுடன் ஒதுங்கி வழிவிட்டனர். பரமசிவம் கயிற்றுக் கட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருந்தார். அவரை சுற்றி கும்பலாய் நின்று ஆளாளுக்கு பேசிக் கொண்டிருந்தனர்.

''இப்படி நின்றால் அவருக்கு எப்படி காற்று வரும்? விலகுங்க எல்லோரும்'' என்றான் சத்யா.



அவன் வார்த்தைக்கு கட்டுப்பட்டு எல்லோரும் விலகி நின்றார்கள். சத்யா திரும்பி தன் அருகில் இருந்த உறவினர்களிடம் சொன்னான்.

''மேட்டூர் வரை ஜீப்பில் போய், அங்கிருந்து ஆம்புலன்சில் சேலம் போய் விடலாம். ஆம்புலன்சிற்கும், சேலம் மருத்துவமனைக்கும் தகவல் சொல்லியாகி விட்டது. இப்போது இவருடன் யார் வருகிறீர்கள்?''

கண்களைத் துடைத்தபடி பரமசிவம் அருகே நின்றிருந்த அவர் மனைவி அழுகை குரலில் கூறினாள். ''இந்த தங்கராசு நேத்திலிருந்து வீட்டுக்கு வரலயே! அவனை நான் எங்க போய் தேடுவேன்? ராவு முழுக்க பையன் வீட்டுக்கு வரல பாருன்னு சொல்லிகிட்டே இருந்தார். தூங்கவேயில்ல. காலை ஆகாரம் கூட குடிக்கல. வயலுக்கு தண்ணி பாய்ச்சப் போறேன்னு எழுந்தார். நெஞ்சைப் பிடிச்சுட்டு அப்படியே சாஞ்சுட்டார். மகனை பத்திய கவலையே சாய்ச்சு விட்டது.''

கண்ணீர் விட்டபடி அவள் சொல்ல அருகில் நின்றிருந்த பெண்களும் அவளை அணைத்து கண் கலங்கினர். ''அக்கா, தங்கராசுவை ஆலமரத்தடியே அவன் கூட்டாளிகளோடு பார்த்தேன். சீட்டு விளையாடிட்டு இருந்தான்'' என்றான் அங்கிருந்தவர்களில் ஒருவன்.

''நான் பார்க்கிறப்ப மரத்தடியிலிருந்து கிளம்பி சாவடிப் பக்கம் போனான்'' என்றான் இன்னொருவன்.

எல்லோரும் பேசிப்பேசி நேரத்தை விரயமாக்குவதைப் பார்த்த சத்யா ''யாராவது இவரை அலுங்காமல் தூக்கி ஜீப்பில் படுக்க வையுங்கள். எவ்வளவு சீக்கிரம் போகிறோமோ அவ்வளவு விரைவில் குணமாக்க முடியும்'' என்றான்.

நான்கைந்து பேர் பரமசிவத்தை அலுங்காமல் தூக்கி ஜீப்பின் பின் இருக்கையில் படுக்க வைத்தனர். அவர் மனைவியும் உடன் ஏறிக் கொள்ள ஜீப் மெதுவாய் நகர்ந்தது. ஜீப்பிற்கு வெளியே தலையை நீட்டி, ''தங்க ராசுக்கு யாராவது தகவல் சொல்லி அனுப்புங்க. என் பெரிய மகளுக்கும் சொல்லி விடுங்க'' என்றாள் பரம சிவத்தின் மனைவி உரத்த குரலில் -

சத்யாவின் ஏற்பாட்டின்படி சேலம் சென்று மருத்துவ மனையில் அவரை அட்மிட் செய்தார்கள். ஐ.சி. யூனிட்டின் வெளியே அந்த பெரிய மருத்துவமனையின் பரபரப்பை மிரட்சியுடன் பார்த்தபடி பரமசிவத்தின் மனைவி நின்றிருந்தாள். டாக்டரிடம் பேசிவிட்டு அவள் அருகே வந்த சத்யா சொன்னான், ''கவலைப்படாதீர்கள். பரமசிவம் சரியாகி விடுவார். தைரியமாக இருங்கள். நான் கிளம்புகிறேன். தினமும் டாக்டர்களிடம் போனில் விசாரித்துக் கொள்வேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் உங்கள் துணைக்கு யாராவது ஊரிலிருந்து வந்து விடு வார்கள்'' என்றவன் அவளிடம் ஒரு கவரைக் கொடுத் தான்.

''இதை செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்.''

உழைத்து வாழ்ந்தே பழக்கப்பட்டுப் போன அந்த பெண்மணியின் கைகள் கவரைத் தொட கூசின. புரிந்து கொண்ட சத்யா சொன்னான். ''இதில் அவமானப்பட எதுவுமில்லை. என்னை உங்கள் மகனாக நினைத்துக் கொள்ளுங்கள்.''

அந்த வார்த்தையில் அந்தப் பெண்மணியின் கண்கள் உடைந்தன.



''உண்மையாலுமே என் மகன் செய்ய வேண்டி யதைத்தான் இன்னிக்கு நீங்க செஞ்சிருக்கீங்க'' என்றாள் நன்றியுடன்.

''அப்ப இதை வாங்கிக்குங்க'' என வற்புறுத்தி பணத்தைக் கொடுத்து விட்டு சத்யா வெளியே வந்தான். தன்னுடன் வந்த ரேஞ்சருடன் பேசியபடி வராண்டாவில் நடந்து வருகையில் ரேஞ்சர் அவர்கள் எதிரே வேகமாக வந்து கொண்டிருந்த ஒரு இளைஞனை அவனிடம் காட்டினார். ''இவன்தான் பரமசிவத்தின் மகன் தங்கராசு. காலையில் நீங்க கூப்பிட்டனுப்பினப்ப எவ்வளவு திமிரா பேசியிருக்கான்! இப்ப நீங்க மட்டும் இல்லேன்னா இவன் அப்பன் கதி என்னவாயிருக்கும்? உருப்படாத பயல்,'' என்றார் கோபத்துடன்.

''அதெல்லாம் பேசுவதற்கு நேரம் இது இல்லை. அவனே அப்பாவுக்கு என்ன ஆச்சோன்னு கவலையில் வந்திருப்பான்,'' என்றான் சத்யா.



# 7

முகத்தில் ஆறாக பெருகிய வியர்வையை மேல்துண் டால் துடைத்த முத்துசாமி உள்ளே குரல் கொடுத்தார். ''ஏ... புள்ள, ஒரு சொம்பு தண்ணி கொண்டு வா.''

பெரிய சொம்பு நிறைய தண்ணீரை முகர்ந்து வந்த அவர் மனைவி,

''போன விஷயம் என்னவாச்சு? காயா, பழமா?'' என்றாள் ஆர்வத்துடன்.

ஒரே மூச்சில் தண்ணீரை குடித்து முடித்துவிட்டு, ''இரண்டும் இல்லை''என்றார் சலிப்புடன்.

''இதென்ன இப்படி சொல்றீங்க? மாப்பிள்ளையை உங்களுக்கு பிடிக்கலையா? இல்ல, அவங்கதான் பொண்ணு பிடிக்கலேன்னு சொல்லிட்டாங்களா?'' என்றாள் திண்ணையில் அமர்ந்தபடி.

''அவங்களுக்கு நம்ம பொண்ணை பிடிச்சிருக்காம். நான் விசாரிச்ச வரையில் மாப்பிள்ளை பக்கமும் குறை சொல்கிற மாதிரி எதுவும் இல்லை. ஆனால்...''

''ஆனால் என்ன?''

''கவர்மென்ட் உத்யோகம் பார்க்கிற மாப்பிள்ளை யாச்சே! சும்மா கட்டிகிட்டு போவாங்களா? முப்பது பவுன் நகையும் முப்பதாயிரம் ரொக்கமும் ஒரு ஸ்கூட்டரும் கேக்கறாங்க.''

''அடக்கடவுளே! அதுக்கு நாம எங்க போறது? பொண்ணு அம்சமா இருக்கா. பதவிசா வேலை பாக்கறா. பெரியவங்களை அனுசரித்து நடந்துக்குவா. இதை விட வேறு என்ன வேணும் அவங்களுக்கு?'' என்றாள் அவர் மனைவி அங்கலாய்ப்புடன்.

''நீ எந்த காலத்துல புள்ள இருக்க? அனுசரித்துப் போற பொண்ணா தேடி ஏழையாய் இருந்தாலும் பரவாயில் லைன்னு பணம் கொடுத்து கட்டிட்டு வந்ததெல்லாம் அந்தக் காலம். இப்ப பணம் இருந்தா போதும். பெண்ணைக் கூட பார்க்க தேவையில்லைன்னு சொல் றாங்க.''



''ம்... உங்க ரெண்டு தங்கச்சிகளுக்கும் நீங்க கல் யாணம் பண்ணி வெச்சிங்க. இப்ப உங்க பொண்ணுக்கு பண்ண கதியத்துப் போச்சு. எல்லாம் நன்றி கெட்டதுங்க.''

''அவங்களை ஏண்டி குறை சொல்ற. உன் பையனை படிக்க வெச்சமே கஷ்டப்பட்டு. பொண்ணு கல்யாணத் துக்குன்னு சீட்டுப் போட்ட பணத்தை எடுத்து அவனுக்கு கொடுத்த. தங்கச்சிக்கு அவனே செலவு பண்ணுவான்னு சொன்ன. இப்ப என்னாச்சு?''

''அவனும் வேலை தேடிட்டுதானே இருக்கான்! வேலை கிடைச்சதும் நீங்க செலவழிச்ச பணத்தை ஒண்ணுக்கு ரெண்டா திரும்பி குடுத்திடுவான். அவன் ஒண்ணும் உங்க வீட்டு ஆட்கள் மாதிரி இல்ல.''

''திரும்ப திரும்ப எங்க வீட்டையாட குறை சொல்ற?'' என முத்துசாமி அருகில் கிடந்த கோணி சுருளை தூக்கி வீச, அது நேராய் அவர் மனைவியின் கண்களில் பட்டு அவள் அலறத் தொடங்கினாள்.

''இப்படி போட்டு அடிக்கறாங்களே! கேக்கறதுக்கு ஆளே இல்லையா?'' குரல் கேட்டு பின்பக்கமிருந்து ஓடிவந்த மகள் தாயைக் கட்டிக் கொண்டு அழ ஆரம் பித்தாள். ''சே!'' என முத்துசாமி மேல்துண்டை உதறி தோளில் போட்டபடி கொளுத்தும் வெய்யிலில் நடக்கத் தொடங்கினார்.

சத்யா தன் எதிரில் அமர்ந்திருந்த இளைஞனை புன்சிரிப்புடன் பார்த்தான். ''என்னை நினைவில்லையா உங்களுக்கு?'' என்றான் அந்த இளைஞன் மீண்டும்.

''நன்றாய் நினைவிருக்கிறது. என் அப்பாவின் உதவியாளராய் உன் அப்பா டிபார்ட்மென்டில் வேலை

செய்தார். நீ அரசு வேலைக்கு முயற்சி செய்தபோது கூட சர்வீஸ் கமிஷன் எக்ஸாம் பற்றிய விபரம் கேட்டு என்னிடம் வந்தாய். பிறகு அரசு போக்குவரத்து கழகத்தில் குமாஸ்தா வேலை கிடைத்திருப்பதாக கேள்விப் பட்டேன். அதன் பிறகு இப்போதுதான் சந்திக்கிறோம். சரியா?'' என்றான் சத்யா.

''ரொம்ப சரி சார். உங்கப்பாதான் என்னை படிக்க வைத்தார். நான் கல்லூரிக்கு போகும்போது கூட நீங்கள் துணிமணி வாங்கிக் கொடுத்தீர்கள். அந்த உதவியை நான்...'' அவன் மேற்கொண்டு பேசுமுன் சத்யா இடைமறித்தான்.

''இங்கே எதாவது வேலை விஷயமாய் வந்திருக்கிறாயா? அல்லது உங்கள் உறவினர் யாரேனும் இங்கிருக்கிறார்களா?'' என்றான்.

அந்த இளைஞன் முகத்தில் ஒரு அசட்டுப் புன்னகை பரவியது.

''இங்கே எனக்கு பெண் பார்த்திருக்கிறார்கள் சார். அந்த விஷயமாய் வந்திருக்கிறோம்''என்றான் கூச்சத்துடன்.

''வெரிகுட். செட்டிலாகப் போறேன்னு சொல். என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்'' என்றான் சத்யா மகிழ்ச்சியுடன்.

''இல்லை சார். இன்னும் முடிவாகல. அம்மா அப்பா எதிர்பார்க்கற அளவுக்கு அவங்களால செய்ய முடியாது போலிருக்கு. ஆனால் எனக்கு பொண்ணை பிடிச்சிருக்கு. நான் சொன்னால் அவர்கள் கேட்க மாட்டேன் என்கிறார்கள். எனக்கோ பணத்துக்கு ஆசைப்பட்டு என்னை



வேறு எங்காவது தள்ளிவிட்டால் என்ன செய்வது என்று பயமாய் இருக்கிறது.''

''அது சரியான பயம் தான்'' என்ற சத்யா ''இங்கே யார் வீடு?'' என்றான் டேபிள் மீதிருந்த பென்சிலை உருட்டியபடி.

''முத்துசாமி என்பவரின் பெண். ஒரு ஆண். ஒரு பெண்தான் அவருக்கு. பெண்ணைத்தான் நாங்கள் பார்த்திருக்கிறோம். அவள் அண்ணன் செந்தில்வேலன் படித்துவிட்டு இன்னும் வேலை கிடைக்காமல் இருக்கிறான். இப்போதைக்கு இருப்பதை செய்கிறோம். அவனுக்கு வேலை கிடைத்ததும் நீங்கள் கேட்டதை செய்கிறோம் என்கிறார்கள்.''

சத்யா தன் அருகில் நின்றிருந்த கார்டைப் பார்த்தான்.

''செந்தில் வேலன் என்பது....''

''ஆமாம் சார். அந்த அஞ்சு பசங்களில் ஒருத்தன்தான்'' என்றார் கார்டு.

சத்யா அந்த இளைஞனின் கைகளை குலுக்கினான்.

''இந்த திருமணம் நிச்சயமாகி விட்டது என்று நினைத்துக் கொள். உன் பெற்றோரிடம் நான் பேசுகிறேன்.''

''நன்றி சார்'' என்றான் அந்த இளைஞன் முகம் மலர.

மருத்துவமனை வராண்டாவின் தூண் ஓரமாய் அமர்ந்திருந்த தங்கராசுவை சுற்றி நண்பர்கள் நால்வரும் அமர்ந்திருந்தனர்.

''இப்ப உங்கப்பா எப்படிடா இருக்கார்?'' என்றான் ராஜேந்திரன்.

''அபாய கட்டத்திலிருந்து தாண்டிட்டார்னு சொல்றாங்க. நான் இங்க நின்னு பாத்ததுதான். அம்மா

முகங்குடுத்தே பேசல. சொந்தக்காரங்க வேற கூடவே உட்கார்ந்து என்னாலதான் இப்படியாச்சுன்னு எத்தி விடறாங்க'' என்றான் புலம்பலாய்.

''எங்க வீட்லயும் இப்படித்தாண்டா. எந்தங்கச்சி கல்யாணம் கூடி வந்து இப்ப பணத்துனால தடைபட்டு நிக்குது. அதனால வீட்ல ஒரே சண்டையும், அழுகையுமா இருக்கு. என்னை விரோதி மாதிரி பாக்கறாங்க'' என்றான் செந்தில்வேலன் துக்கத்துடன்.

''எனக்கும் வீட்டுக்கு போகவே பிடிக்கறதில்லடா'' என்றார்கள் அன்பரசும், முருகனும்.

''விதை விதைச்சுட்டு, விளைச்சலை எதிர்பார்க்கிற மாதிரி பிள்ளைங்க மேல செஞ்ச முதலீடும் சிதறாம கைக்கு வந்து சேரணும்னு எதிர்பார்க்கறாங்க'' என்றான் ராஜேந்திரன்.

''பரமசிவம் கூட இருக்கறவங்க யாரு? இந்த மருந்தை வாங்கிட்டு வாங்க...'' என ஒரு நர்ஸ் குரல் கொடுக்கவும் தங்கராசு எழுந்து நின்றான். அவன் அக்கா நர்சிடம் சீட்டை வாங்கிக் கொண்டு அம்மாவிடம் பணம் வாங்கிக் கொண்டு மருந்து வாங்கப் போனதும் பேசாமல் பழைய படி அமர்ந்தான்.

''ஆஸ்பத்திரிக்கு நிறைய செலவாகுமே! என்ன செய்யறீங்க?'' என்றான் முருகன்.

''சரியா தெரியலடா. முதல்நாள் அந்த ஆபீசர்தான் கொண்டு வந்து அட்மிட் பண்ணிட்டு பணம் கட்டிட்டு போனார்னு சொன்னாங்க.'' என்றான் தங்கராசு.

அதன் பிறகு அவர்கள் எதுவும் பேசாமல் அவரவர் ந்தனைகளில் ஆழ்ந்து வெகுநேரம் அங்கேயே அமர்ந் ருந்தனர்.



கிராமமும் அல்லாத நகரமும் அல்லாத கொளத்தூரின் வார சந்தையை சத்யா சுவாரஸ்யத்துடன் பார்வையிட்டான். மளிகை பொருட்கள், காய்கறி, பூ பழங்கள் விற்கும் சில்லரை கடைகளில் வியாபாரிகள் வெய்யிலுக்கு பெரிய குடையை நிறுத்தி வைத்து அதனடியில் மும்முரமாய் வியாபாரம் செய்தனர். மொத்த வியாபாரம் செய்யும் வெளியூர் வியாபாரிகள் மிளகாய், பருத்தி, புளி, நிலக்கடலை என மொத்தமாய் வாங்கி லாரிகளில் ஏற்றிக் கொண்டிருந்தனர். மாட்டு வியாபாரிகள் மேல்துண்டால் கைகளை மூடியபடி பேரம் பேசிக் கொண்டிருந்தனர். நடுநடுவே கலர் சர்பத், ஐஸ் வண்டி, நீர்மோர், வெல்ல பாயாசம், இட்டிலி விற்கும் கடைகளிலும் கூட்டம் களை கட்டியிருந்தது.

''என்ன சார் எப்படியிருக்கிறது எங்க ஊர் சந்தை?'' என்றார் அத்தனை நேரம் சத்யாவுடன் பேசிக் கொண்டிருந்த போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்.

''இப்போது கிராமங்களில் கூட ரேஷன் கடைகளும், மளிகை கடைகளும் வந்த பிறகு கூட இந்த வார சந்தைகளின் மவுசு குறையவில்லை போலிருக்கே!'' என்றான் சத்யா.

''இங்கு பொருட்களை வாங்க மட்டுமல்ல, விற்கவும் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு சந்தைதான் சரியான சாய்ஸ். பொருட்களின் விலை நிலவரம் என்ன என்பதை அந்த வாரம் முழுவதும் சந்தைகள்தான் நிர்ணயிக்கின்றன'' என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

''ஓகே. இன்ஸ்பெக்டர். நான் கிளம்புகிறேன். அந்த சந்தனகட்டை வெட்டி அரஸ்ட்டாகியிருக்கும் பையனை

ஜாமீனில் எடுக்க யார் வருகிறார்கள் என்று கவனித்து எனக்கு தகவல் சொல்லுங்கள். ஏனென்றால் இந்தப் பையன் அப்பாவியாகத் தெரிகிறான். இவனுக்கு பின்னால் இருப்பது யார் என்று நாம் கண்டுபிடிக்க வேண்டும்'' என்றான் சத்யா.

''கண்டிப்பாக செய்யலாம் சார். உங்களுக்கு உதவுவதை விட வேறென்ன வேலை எங்களுக்கு'' என அவனை அந்த இன்ஸ்பெக்டர் வழியனுப்பி வைத்தார்.

சத்யா ஜீப் அருகில் வருவதை கவனிக்காமல் டிரைவர் யாருடனோ மும்முரமாய் பேசிக் கொண்டிருந்தான். ''இப்படி இளைச்சி துரும்பா போயிட்டீங்களே கருப்பசாமி அண்ணே!'' என்றான் நலம் விசாரிக்கும் தொனியில்.

''என்னப்பா செய்யறது? நான் செஞ்ச அதிர்ஷ்டம் அப்படி.''

''என்னண்ணே சலிச்சுக்கிறீங்க?''

''வேற என்னப்பா செய்ய சொல்ற? கஷ்டப்பட்டு பையனை படிக்க வெச்சோம். இப்ப ஒரு வேலை வெட்டி இல்லாம இவனை மாதிரியே இருக்கற நாலுவெட்டி தடியன்களோட சுத்தறான். படிக்க வெக்காம இருந்திருந்தால் தோட்டத்திலாவது எனக்கு உதவியா வேலை செஞ்சிருப்பான்.''

''உங்கள் மகன் பெயர் என்ன?'' என்ற சத்யாவின் குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

''ராஜேந்திரன்'' என்றார் கருப்பசாமி.

''சாரி சார். நீங்க வந்ததைப் பார்க்கல. போகலாமா சார்?'' என்ற டிரைவரை கையமர்த்திவிட்டு சத்யா அவரிடம் பேசினான்.



''உங்களை நான் நிறையமுறை பார்த்திருக்கிறேன். பால் கேனை சைக்கிளில் கட்டிக் கொண்டு போவதை தினமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் ஏன் ஒரு பால் சொசைட்டி ஆரம்பிக்கக் கூடாது?''

''ஐயா நிலைமை தெரியாம கேட்டுட்டீங்க? அதுக்கெல்லாம் பணத்துக்கு நான் எங்கே போவேன்?'' என்றார் கருப்பசாமி.

''எங்கேயும் போக வேண்டாம். நம் விவசாய கூட்டுறவு வங்கியிலேயே கடன் தருவார்கள். வேலையில்லாத பட்டதாரிகளுக்கான லோனிலும் பெறலாம். நீங்கள் நிலத்தின் பேரில் கடன் வாங்கியிருக்கிறீர்கள் இல்லையா? அது கூட சமயங்களில் அரசாங்கம் விவசாய கடன்களை தள்ளுபடி செய்யும்போது தள்ளுபடியாகி விடும். நீங்க பேங்க் மேனேஜரைப் போய் பாருங்கள். அவரிடம் நான் பேசுகிறேன்'' என்றான் சத்யா.

கருப்பசாமியின் முகம் மலர்ந்து போனது. என்ன பேசுவதென்று தெரியாமல் தவித்தார்.

''அண்ணே, போய் ஆகவேண்டியதை கவனிங்க. ஐயாவை பார்த்த ராஜேந்திரன் கிட்டயும் சொல்லுங்க. உங்களுக்கு நல்ல காலம் பொறந்தாசசுன்னு நேரம் வைங்க'' என்றான் ஜீப் டிரைவர் உற்சாகத்துடன்.

கருப்பசாமியும் அதே உற்சாகத்துடன் சத்யாவை வணங்கி விட்டு கிளம்பிப் போனார்.

''எங்காவது ஹோட்டலுக்கு போப்பா'' என்ற படியே சத்யா ஜீப்பில் அமர்ந்தான். பஸ்நிலையத்தின் அருகே இருந்த சுமாரான ஹோட்டலின் வாயிலில் ஜீப்பை நிறுத்திவிட்டு இருவரும் உள்ளே நுழைந்தனர். சத்யா

டேபிளில் அமர, டிரைவர் சாப்பாட்டிற்கு சொல்லிவிட்டு வந்து மரியாதை நிமித்தம் சத்யாவின் பின்புறமிருந்த டேபிளில் அமர்ந்தான்.

வாழையிலையில் உணவு பரிமாறப்பட்டதும் சத்யா சாப்பிட ஆரம்பித்தான். திடீரென சலங்கைகளின் கலகல சத்தமும், கும்மி கொட்டும் ஓசையும் கேட்டது. சத்யா திரும்பிப் பார்த்தான். ஹோட்டல் நுழைவாயிலில் கல்லா வில் அதன் முதலாளி அமர்ந்திருக்க. அவரைச் சுற்றி லம்பாடிப் பெண்கள் கும்மியடித்துக் கொண்டிருந்தார்கள். திறந்த முதுகும், மூடப்படாத வயிறுமாய் குனிந்தும் நிமிர்ந்தும் அவர்கள் ஆட சாப்பிட்டுக் கொண்டிருந்த கூட்டம் உணவை மறந்து போய் அவர்களை வேடிக்கை பார்த்தது. லம்பாடி மொழியில் அவர்கள் பாடிய கோரஸ் பாட்டு காட்டில் கேட்ட டோலியின் குரலாய் காதில் ஒலிக்க சத்யாவுக்கு உணவு உள்ளே செல்ல மறுத்தது. கும்பலிலிருந்தவர்களை கூர்ந்து கவனித்தான். அதில் டோலி இல்லை என்றறிருந்ததும் சாப்பிட்டு முடித்து தன் அருகில் வந்த டிரைவரைக் கேட்டான்.

''இங்கே நடக்கிறது? இவர்கள் எதற்காக இப்படி செய்கிறார்கள்?''

''தீபாவளி வரப்போகிறதில்லையா சார்? அதற்காக வசூல் வேட்டையில் இறங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் தீபாவளிக்கு இருபது நாட்கள் முன்பிருந்தே இதுபோல் கடைகளிலும், சந்தைகளில் பெரிய வியா பாரிகள் முன்பும் கும்மியடித்து, பாட்டுப்பாடி பணம் வாங்குவார்கள்.''

''இவர்களில் இதுபோல் பணம் வசூல் செய்யவென்று தனிக்குழு இருக்கிறதா?'' என்றான் சத்யா.



''தனிக் குழுவெல்லாம் இல்லை. லம்பாடி இன பெண்கள் எல்லோருமே நன்றாக பாடுவார்கள். கும்மி யடிப்பார்கள். குடிப்பார்கள். தீபாவளி அவர்களுக்கு முக்கியமான பண்டிகை. பண்டிகை செலவிற்கு பணம் திரட்ட பெண்கள் எல்லோரும் வீட்டை விட்டு கிளம்பி அருகிலிருக்கும் ஊர்களுக்கு போவார்கள். அங்கே போய் தனித்தனி குரூப்பாய் பிரிந்து ஆளுக்கொரு திசையில் போய்விடுவார்கள். திரும்ப இருட்டத் தொடங்கியதும் தான் ஒன்றாக சேர்ந்து ஊர் போய் சேர்வார்கள். இந்த கும்பலில் டோலியும் இருக்கக் கூடும் என்பதை ஏனோ சத்யாவால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. இத்தனை பேர் பார்க்க அவளால் ஆட முடியுமா என்ற கேள்வி மனதை உறுத்த சத்யா ஜீப்பை நேராக போகச் சொன்னான். செக்போஸ்ட் வரை போய் திரும்பி மான்போர்ட் பள்ளி வழியாக பயணித்து மறுபடியும் சந்தைக்குள் செல்கையில் டிரைவர் கேட்டான்.

''யாரையாவது தேடறீங்களா சார்?''

''நம்ம ரேஞ்சர் வருவாரான்னு நான் பார்க்கறேன். நீ போய் ஒரு டீ குடித்துவிட்டு வா'' என சத்யா டிரைவரை அனுப்பி வைத்தான். டீக்கடை வாசலில் டோலியின் அம்மா கும்பலாய் மற்ற பெண்களுடன் நின்றிருந்தாள். முழுகாதையும் மூடி அணிந்திருந்த வெள்ளி தோட்டை யும், கொப்பையும் சரி செய்தபடி எல்லோருடனும் சேர்ந்து பாடினாள். அவர்களை சுற்றி ஒரு கூட்டம் நின்று கொண்டிருக்க. சரியாய் இருபது நிமிடங்கள் ஆடி முடித்து கடை முதலாளி தந்த டீயையும் காசையும் வாங்கிக் கொண்டு அவர்கள் அந்த இடத்தை விட்டு நகர்ந்தனர்.

சத்யா டி.எப்.ஓவின் மனைவி, மாமியார் ஒரு டீக்காக வும், சில்லரை காசுக்காகவும் தெருவில் ஆடுபவர்களா? அவர்களை அவனால் மாற்ற முடியுமா? பிறந்ததிலிருந்து ஏற்பட்டுவிட்ட குணம் எளிதில் மாறுமா? பொருந்தாத இந்த காதல் அவமானத்தில் போய் முடிந்து விடுமா? சத்யா யோசனையில் ஆழ்ந்திருந்த போது டிரைவர் டீக்கடையிலிருந்து வந்தான்.

சத்யா அவனிடம் சுண்டியை சுட்டிக் காட்டினான். "சக்கிரியோட மனைவிதானே அது!"

"ஆமாம் சார். சக்கிரிக்கு ஒரு பெண்ணும் பையனும் கூட உண்டு" என்றான் டிரைவர்.

"அந்தப் பெண் அம்மாவுடன் வரவில்லையா?"

"ஐயோ! மகா திமிர் பிடிச்ச பொண்ணு சார் அது. அந்த கூட்டத்திலேயே பள்ளிக்குப் போய் படித்த பெண் என்ற கர்வம் வேறு. இதுபோலவெல்லாம் வெளியே வராது. யாராவது சீண்டினா சும்மா பின்னியெடுத்துடும். பொது வாக இந்த பெண்கள் அழகாக இருப்பதால் அவர்களைப் பார்க்கும் எல்லோருக்கும் சபலம் ஏற்படுவதுண்டு. ஆனால் டோலியின் பெயரைக் கேட்டாலே ஆண்கள் பயந்துபோவதை நான் பார்த்திருக்கிறேன். யாருக்கும் அடங்காத பெண் அவள்" என்றான் டிரைவர் கடுப்புடன்.

சத்யாவின் மனதில் அத்தனை நேரம் இருந்த உறுத்தல் மறைந்து லேசாய் புன்னகை எட்டிப் பார்த்தது. "ஒரு பெண் தன்மானத்தோடு வாழ நினைத்தால் அவளை பாராட்டத்தான் வேண்டுமே தவிர திமிர் என்று கூறி குறைவாக பேசுவது சரியல்ல" என்றான் சத்யா கண்டிக்கும் தொனியில்.



"நீங்கள் சொல்வது உண்மைதான் சார்" என்றான் டிரைவர் அரைமனதாக.

"இப்போ எங்கே போகணும் சார்?" என்று டிரைவர் கேட்டதும்.

"இன்று உனக்கு சந்தை நாள் இல்லையா? நீ வீட்டிற்கு நேரத்தோடு போ. நான் கெஸ்ட் அவுஸ் போகிறேன்" என்றான் சத்யா.

நகரத்தில் வசிப்பவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளை பொதுவாக கறி நாளாக கருதுவதைப் போல கிராமப்புற மக்கள் பெரும்பாலும் சந்தை நாளான்று சந்தையில் இறைச்சி வாங்கி இரவு சமைப்பது வழக்கம். கூலித் தொழிலாளிகளின் வாரவிடுமுறை நாள் கூட சந்தை நாளாகவே இருப்பதையும் சத்யா இங்கு வந்த பிறகு தெரிந்து கொண்டிருந்தான். எனவே டிரைவரை வீட்டுக்கு அனுப்பி விட்டு தானே ஜீப்பை எடுத்து வலதுபுறம் திரும்பி நான்கு ரோடு சந்திப்புக்கு வந்தான். ஆல்பா பிளாஸ்டிக் கம்பெனியிலிருந்து வெளிவந்த காண்டசா காருக்கு வழிவிட்டு இடதுபுறம் ஒதுங்கினான். கார் போனதும் ஒரு பஸ்சும் அதை தொடர்ந்து செங்கல் லாரி யும் எதிர் பக்கத்திலிருந்து டிராக்டரும் வரவே இஞ் சீனை அணைத்துவிட்டு ரோடு க்ளியராக காத்திருந்தான்.

அவனது ஜீப்பிற்கு பின்புறமிருந்து பேச்சுச் சத்தம் காதைத் துளைத்தது. "நான் போக வேண்டாம்னு சொல் னேன். என் பேச்சை கேட்டியா நீ?" என்று சீறும் குர நிச்சயம் டோலியுடையதுதான்.

"இப்ப என்ன நடந்துபோச்சுன்னு இப்படி குதிக்க என்றது அவள் அம்மாவின் குரல்.

சத்யா ரியர்வ்யூ மிரரை திருப்பிப் பார்த்தான். ஜீப் நின்றிருந்த இடத்திற்கு நேர் பின்புறமிருந்த மரத்தடியில் டோலியும் அவள் அம்மாவும் வாக்குவாதத்தில் ஈடுபட் டிருந்தார்கள்.

''உழைச்சு பிழைக்க உடலில் வலு இருக்கு. நீ ஏன் போய் கண்டவங்க கிட்ட காசு கேட்கணும்?'' என்றாள் டோலி கோபத்துடன்.

''புதுசா நா என்ன செஞ்சிட்டேன்? நம்ம சமூகத்துப் பெண்கள் வருஷா வருஷம் பண்டிகைக்கு இப்படி பணம் சேகரிப்பது வழக்கம்தானே!'' என்றாள் சுண்டி புரியாமல்.

''யாரோ என்னவோ செய்யட்டும். நீ போய் நாலுபேர் முன்னால் ஆடுவதும் பாடுவதும் எனக்கு அவமானமாக இருக்கிறது. இங்கே மற்ற இனத்து பெண்களெல்லாம் இப்படியா செய்கிறார்கள்? நாம் மட்டும் ஏன் இப்படி செய்ய வேண்டும்? நம்மை ரசித்து வேடிக்கை பார்க்கிறார் களே அந்த ஆண்கள், அவர்கள் வீட்டு பெண்களை இது போல தெருவில் பாடவும் ஆடவும் அனுமதிப்பார்களா? நம் இனத்து ஆண்களுக்கு சாராயமும் கறியும் இருந்து விட்டால் வேறு யாரைப் பற்றியும் கவலையில்லை. த்தூ...''

''உன்னை நாலு எழுத்து படிக்க வெச்சது தப்பா போச்சு டோலி. எப்பவும் தகுதிக்கு மீறிய பேச்சு உனக்கு'' என்றாள் சுண்டி.

''இல்லை. நான் படித்தது தப்பில்லை. நீங்களெல்லாம் டிக்காமல் இருந்ததுதான் தப்பு. ஒரு சராசரி மனிதர்களின் னாபாவம் இல்லை உங்களுக்கு...'' சந்தையில் வாங் சாமான்களை கையில் பிடித்தபடி டோலி பொரிந்து



கொண்டிருந்தாள். சத்யாவுக்கு பின்னாலிருந்து அடித்த வண்டியின் ஹாரன் சப்தத்திற்கு சத்யா ஜீப்பை கிளப்பி னான்.

டோலியின் குரல் ஒரு சாதாரண பெண்ணின் குரலாக அவனுக்கு தோணவில்லை. மேலே வர துடித்துக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் புதிய தலைமுறையின் கூக்குரலாக காதில் ஒலித்தது. சத்யா ஒரு கை நீட்டினால் இந்த சமூகம் இன்னும் ஒருபடி உயரும். சத்யா ஸ்டிய ரிங்கை பிடித்திருந்த கைகளைப் பார்த்துக் கொண்டான். என் கை நீளமாகத்தான் இருக்கிறது. கவலையில்லை.

பாரஸ்ட் ஆபீஸ் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண் டிருந்தது. காலி இடங்களில் நடுவதற்காக வாங்கி வரப் பட்ட மரக்கன்றுகளை நடுவதற்காக ஆட்கள் வரவழைக் கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு வழி காட்டியபடி வன அலுவலர்களும் உடன் சென்றனர். நாலைந்து புளிய மரக் கன்றுகளை கூடையில் வைத்து தலைமேல் சுமந்தபடி கரட்டின் மீது ஏற முற்பட்ட அந்த முதியவர் கல்தடுக்கி கீழே விழுந்தார். கூடை ஒரு பக்கமாய் போய் விழுந்தது. கை கால் எங்கும் சிராய்ப்பு காயங்களுடன் எழ முடியாமல் கிடந்தவரை தூக்கி விட்ட கார்டு, ''என்ன பெரிசு, பார்த்து வரக் கூடாதா?'' என்றார் அதட்டலாக.

''வயதானவர்களை அழைத்து வந்து ஏன் சிரமப் படுத்துகிறீர்கள்? வேறு ஆள் கிடைக்கவில்லையா உங்களுக்கு?'' என்றான் சத்யா டிபார்ட்மென்ட் ஆட் களிடம்.

''அவராகத்தான் சார் வந்தார்'' என்றார் ரேஞ்சர்.

''ஆமாங்க ஐயா. நாந்தான் வரேன்னு சொன்னேன் என்னை திருப்பி அனுப்பிடாதீங்க. என்னுடை

உழைப்பை வெச்சுதான் இன்னிக்கு பாடு நடக்கணும்'' என்றார் முதியவர் நடுங்கும் குரலில்.

''வேறு யாரும் இல்லையா உங்களுக்கு?'' என்றான் சத்யா அனுதாபத்துடன்.

''ஒரு மகன் இருக்காங்கய்யா. அன்பரசுன்னு பேர். கல்யாணமாகி பனிரெண்டு வருஷம் குழந்தை பிறக்க லேன்னு நானும் என் மனைவியும் கோவில் கோவிலா சுத்தி பிறந்தவன். அவனை கடவுள் கொடுத்த வரம்னு நினைச் சோம். ஆனா சாபம்னு வளர்ந்த பிறகுதான் தெரியுது. படிக்கறேன், வேலை பார்க்கப் போறேன், உங்களுக்கு மாடி வீட்டு கட்டித் தரப்போறேன்னு ஆசைகாமிச்சி எங்கள் இத்தனை வருட உழைப்பையும் உறிஞ்சிகிட்டு இப்ப பேசாம வீட்ல உட்காந்துட்டான். அவனுக்கும் சேர்த்து இப்ப நான் கஞ்சி ஊத்த வேண்டியிருக்கு.'' சத்யா வாஞ்சையுடன் அவர் தோள்களைப் பற்றினான்.

''கவலைப்படாதீங்க பெரியவரே! அரசாங்கத்தில் லோன் போட்டு கறவை மாடு வாங்கினால் நீங்க வீட்டிலிருந்தே பணம் சம்பாதிக்கலாம். உங்கள் மகனும் ஒத்துழைத்தால் நீங்கள் தொடங்கும் பால் வியாபாரத்தை பிற்பாடு பால் பண்ணையாக மாற்றலாம். இதைப்போல் பால் வியாபாரத்தில் ஆரம்பித்து படிப்படியாக முன்னேறி யவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். நீங்களும் அதில் ஒருவர் ஆகலாம்'' என்றான் சத்யா.

முதியவரின் சுருக்கம் விழுந்த கண்களில் ஒளி சியது. ''ஐயா நீங்க நிஜமாவா சொல்றீங்க?'' என்றார் யப்புடன்.

'நிஜம்தான். நீங்க இன்னிக்கு உட்கார்ந்து மேற்பார்வை கிற வேலையை செய்யுங்கள்'' என பெரியவருக்கு



இலகுவாய் வேலை அளித்து விட்டு சத்யா மேலே நடந்தான்.



## 8

நண்பர்கள் கூட்டம் வழக்கம் போல ஆலமரத்தடி திண்ணையில் கூடியிருந்தது. ஆனால் வழக்கமான கோபமும், வேகமும் இன்றி எல்லோரும் அமைதியாக இருந்தனர்.

''நேற்று அந்த ஆபீசர் எங்க வீட்டிற்கு வந்திருந் தாராம்டா'' என்றான் முருகன் முதலில்.

''எதுக்காக?'' என்றான் ராஜேந்திரன்.

''வேற எதுக்கு? எங்கம்மா உடம்புக்கு முடியாம இருக்கு இல்ல. அதை டவுன் ஆஸ்பத்திரியில் காமிக்க லாம். அரசின் இலவச மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவகாப்பீடு செய்து கொள்ளலாம். அப்புறம் லோன் வாங்கி காய்கறி கமிஷன் மண்டி ஆரம்பிக்கலாம் என்று என்னென்னவோ சொன்னாராம். எங்க ஆத்தா, அப்பனை கையில பிடிக்க முடியல. இப்ப எல்லாம் நடந்து முடிஞ் சிட்ட மாதிரி குதிக்குதுங்க. நாம இந்த மாதிரி எத்தனை ஆபீசருங்களை பாத்திருப்போம், படிச்சிருப்போம்! அரசு சொத்தை கொள்ளையடிக்க பொதுமக்களை கைக்குள் போட்டுக் கொள்கிற கூட்டத்தை சேர்ந்தவனாய் இருப்பான் இந்த ஆபீசர்.''

முருகன் பேசிக் கொண்டு போக, எப்போதும் போல் கூட சேர்ந்து தாளிக்காமல் நால்வரும் அமைதியாக இருந்தார்கள்.

''என்னடா ஆச்சு உங்களுக்கு?'' என்றான் முருகன்.

''இல்லடா. நீ சொன்னதைத்தான் யோசிச்சிட்டு இருந்தோம். அந்த ஆபீசரைப் பார்த்தால் அந்த மாதிரி தெரியலடா.அவர் சொன்னதை செய்திருக்கிறார். நகை, ரொக்கம் என்ற தகராறினால் நிற்க விருந்த என் தங்கை திருமணத்தை இருபக்கமும் பேசி சீர் செய்திருக்கிறார். இன்னும் பத்துநாளில் அவளுக்கு கல்யாணம். அண்ண னாக என் பங்குக்கு எதையும் இதுவரை செய்யவில்லை. கல்யாணத்துக்கு யாரையும் அழைக்கும் தகுதி கூட எனக்கில்லை என்று தோன்றுகிறது'' என்றான் செந்தில் வேலன்.

''என் அப்பா இப்போது உயிரோடு இருப்பது கூட அவர் செய்த உதவியால்தான்'' என்றான் தங்கராசு.

''எங்களுக்கு கூட பால் சொசைட்டி ஆரம்பிக்க லோன் சாங்ஷன் ஆகி விட்டதாக அப்பா சொன்னார்'' என்றான் ராஜேந்திரன்.

''நாங்க லோனில் கறவைமாடுகள் வாங்கியாச்சு'' என்றான் அன்பரசு.

''உங்கப்பா அம்மாவிடம் சொன்ன மாதிரி ஆபீசர் செய் வார்'' என்றான் ராஜேந்திரன் முருகனிடம் நம்பிக்கையுடன்.

''சரி இதனாலெல்லாம் அவருக்கு என்ன லாபம்?'' என்றான் முருகன் விளங்காமல்.

''லஞ்சத்தில் திளைக்கும் மனிதர்களையே பார்த்துப் பழகி விட்ட நமக்கு புதிதாக ஒருவர் நேர்மையாக



செயல்படுகிறார் என்றால் அதை நம்பக் கூட முடிய வில்லை பார்த்தாயா? நமக்கு உதவுவதில் அவருக்கு எந்த லாபமும் இல்லை. இது போன்ற சேவை மனப்பான்மை யுள்ள அதிகாரியை சந்தித்தது நமக்குத்தான் லாபம்'' என்றான் தங்கராசு.

''முருகா.. ஏல முருகன் இங்கிருக்கிறானா?'' என்ற குரலுக்கு முருகன் எழுந்து கீழே வந்தான். அவன் அப்பா தடியை ஊன்றியபடி நின்றிருந்தார்.

''என்னப்பா? என்ன விஷயம்? முட்டி வலின்னு கொஞ்ச நாளா நடமாட்டமே இல்லாம இருந்த. இப்ப இவ்வளவு தூரம் தேடிட்டு வந்துருக்க!'' என்றான் வியப்புடன்.

''உங்கம்மாவை நாளைக்கு டவுனு ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போவதாக ரேஞ்சர் வந்து சொல்லிட்டு போனார்டா. காய்கறி பழ மண்டி வைக்கக் கூட லோன் கிடைச்சிடுச்சாம்'' என்றார் அவர்.

முருகன் முகம் மலர்ந்து போக, ''நாங்கதான் சொன் னோம்ல!'' என்றார்கள் நண்பர்கள்.

முதன்முதலாய் அவர்களுக்கு எதிர்காலம் நம்பிக்கை யூட்டுவதாய் கண்ணுக்கு தெரிந்தது. தாங்கள் செய்யப் போகும் தொழில், அதன் வளர்ச்சி, சிக்கல்கள், சேமிப்பு, எதிர்கொள்ளும் பிரச்சனைகள்... இவற்றில் ஆழ்ந்துபோய் நேரத்தை மறந்தார்கள். சரியாக ஒரு மாதம் முன்பு இதே இடத்தில் ஒரு பஸ்ஸை கொளுத்துவதாக முடிவெடுத் தோம் என்பது கூட அவர்கள் நினைவில் இல்லை.

சத்யா ஓடை பாலத்தின் மீது அமர்ந்திருந்தான். அவன் எதிரே அந்த இளைஞர்கள் ஐந்து பேரும் நின்றிருந்தார்கள்.

மூன்று மாதம் முன்பு அடர்ந்த காட்டிற்குள் முகம் காட்டாது ஓடிப் போனவர்கள். கண்டுபிடித்து கூப்பிட்ட

போது வர மறுத்தவர்கள். இப்போது ஓடி ஒளியாமல் யாரும் கூப்பிடாமல் தாங்களாகவே தேடி வந்து எதிரில் நிற்கிறார்கள். முகம் பார்த்து பேசுகிறார்கள். வலிய போய் நட்பு பாராட்டுகிறார்கள்.

இதற்குக் காரணம் தன்னம்பிக்கை. பிழைக்கக் கற்றுக் கொண்டோம். இனி எது வந்தாலும் சமாளிக்க முடியும் என்கிற தைரியம். நாங்கள் முன்னேற வேண்டும் என்ற துடிப்பு இவர்களிடம் இருக்கிறது. அத்துடன் கொஞ்சம் சமூக சிந்தனையும் இருந்தால் இந்த இடம் வளர்ச்சி யடைந்து விடும்.

''என்னப்பா தொழில் எப்படிப் போகிறது?'' என்றான் சத்யா அவர்களைப் பார்த்து.

''நன்றாக'' என்றார்கள் ஒரே குரலில்.

''நன்றாக திறமையுடன் தொழில் நடத்தினால் மட்டும் போதாது. வங்கியில் வாங்கிய கடனை ஒழுங்காகத் திருப்பிக் கட்ட வேண்டும். அப்போதுதான் தொழில் வளர வளர மேலும் லோன் வாங்க முடியும். அரசு தரும் சலுகைகளையும் பெற முடியும்.''

அவர்கள் 'சரி'யென தலையசைத்தார்கள்.

''உங்கள் பெற்றோர்கள் இப்போது சமாதானமாகி ...ட்டார்களா?'' என்றான் சத்யா.

''நீங்களே அவர்களை சமாதானப்படுத்தி தானே எங் ...ள வளைத்தீர்கள்! இப்போது மகிழ்ச்சியாக இருக் ...கள்'' என்றான் ராஜேந்திரன்.

...னால் சார் கறவைமாட்டில் பால் கறக்கவும், காய்கறி ... வைக்கவும் எதற்கு அத்தனை செலவு செய்து ...ாம் என்றிருக்கிறது'' என்றான் அன்பரசு.



''இது ஒரு தவறான கண்ணோட்டம் அன்பரசு'' என்றான் சத்யா.

''நம் நாட்டில்தான் கல்வியை பணம் சம்பாதிப்ப தற்கான முதலீடாக நினைக்கிறோம். உண்மையில் கல்வி என்பது நம் அறியாமையை பேதமையை உடைக் கும் கோடாரி. இந்த உலகை நாம் புரிந்து கொள்ளவும் பார்க்கவும் உதவும் ஒரு கண்ணாடி. உன் படிப்பு உன் தலைமுறையையே விருத்தியடைய செய்யும்போது நீ எப்படி அதை வீண் என்று நினைக்க முடியும்? நீயும் பால் வியாபாரம் செய்கிறாய். உன் அப்பாவும் செய்தார்.நீங்கள் இருவரும் இல்லாத சமயங்களில் உங்கள் பண்ணையாட் களும் செய்தார்கள். ஆனால் அவர்களுக்கும் சொல்லில், செயலில் சிந்தனையில் மாறுபாடு இல்லையா சொல்?''

''நீங்கள் சொல்வது உண்மைதான்'' என்றான் அன்பரசு.

''அருகிலேயே காவேரி ஆறு இருந்தாலும் கூட ஆற்றுபாசனம் இல்லாத ஊர் இது. செழுமையான மண் வளப்பகுதியோ, பெரிய நிறுவனங்கள் நிறைந்த இடமோ கூட இல்லை. இந்த ஊரில் இருந்து கொண்டு கத்தரிக் காயையும், மிளகாயையும், மைசூரிலிருந்து வரும் புளியையும் வெளி மாநிலங்களில் விற்று லட்சாதிபதி யானவர்கள் உண்டு. டிராவல்ஸ் வைத்து நடத்துபவர் களும் இருக்கிறார்கள். பழைய பேப்பர் பொறுக்கி பணக்காரர் ஆனவர்களும் இருக்கிறார்கள். இவர்க... எல்லாம் முன்னேறியதற்கு காரணம் என்ன தெரியுமா... அந்த தொழிலின் மீதிருந்த வெறி. நமக்கு படிப்பில்லை... இதை விட்டால் வேறு கதியில்லை என்ற நினைப்பி... உழைத்தார்கள். எந்த வேலையையும் இறங்கி நின்...

காரணத்தால் எல்லா இடத்திலும் நமக்கான மரியாதையை எதிர்பார்க்கிறோம். அந்த எதிர்பார்ப்பு சில சமயங்களில் நம் தொழிலை பின்னுக்கு தள்ளுகிறது. 'யார் வேண்டு மானாலும் எந்த தொழிலும் செய்யலாம். என் படிப்பு என் நிறை குறைகளை சீர்தூக்கிப் பார்க்க உதவும் என்ற எண்ணம் உங்களுக்கு வேண்டும். அரசாங்கம் ரூரல் ஏரியாவில் தொழில் தொடங்க ஏராளமான சலுகைகளை அளிக்கிறது.பிற்காலத்தில் நீங்கள் ஒரு தொழிற்கூடத்தை இங்கு நிறுவினால் உங்கள் கனவும் நிறைவேறும். நிறையபேர் பயன்பெறவும் செய்வார்கள். இங்கிருந்து கொளத்தூரின் நுழைவாயில் அமைந்திருக்கும் ஆல்பா பிளாஸ்டிக் கம்பெனி, இந்த பகுதியில் முதன் முதலாய் அமைக்கப்பட்ட தொழிற்கூடம் இல்லையா? விவசாயத் தையும் வியாபாரத்தையும் தவிர எதையும் நினைத்துப் பார்க்காத ஊரில், நினைத்துப் பார்க்காத நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்த கம்பெனி அதை சுற்றியுள் ளோருக்கு வேலைவாய்ப்பு தருவதுடன் அன்று அது போல பல தொழில் கூடங்களுக்கு முன்னோடியாகவும் இருக்கிறது. அதே போல் நீங்கள் செய்யும் ஒரு விஷயம் பலருக்கும் உபயோகமாய் இருக்க வேண்டும். வித்தியாச மாய் சிந்தியுங்கள். புதிதாக முயற்சி செய்யுங்கள். செய்கிற தொழிலையே புதிதாக மேம்படுத்தி செய்ய முயற்சி யுங்கள். உங்களைப் போன்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுங்கள். ஒரு ஊரில் வேலைவாய்ப்பு அதிகம் இருந்தால் அந்த இடத்தைத் தேடி மக்கள் ஓடிவருவார்கள். மக்களைத் தேடி வியாபாரிகளும், கல்விக் கூடங்களும் மற்ற வசதிகளும் தானாய் வந்து சேரும். கிராமங்கள் சிற்றூர்களாகவும், ஊர்கள் நகரங்களாகவும் வளர்ச்சி



நிறுத்திவிட்டு அவர்
யடையும்'' என்ற சத்யா பேச்சை
களைப் பார்த்தான்.

''போரடிச்சிட்டேன். இல்லையா?''

''இல்லை சார். எங்களை உற்சாகப்படுத்துகிற மாதிரி
இருந்தது''என்றார்கள் ஐவரும்.

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு
அவர்கள் ஐந்து பேரும் விடைபெற்றுப் போனார்கள்.

சத்யா எழுந்து ஓடைப் பாலத்தை கடந்து தார் ரோட்டில்
நடந்தான். மாலைநேரக் காற்று சிலுசிலுவென்று சுகமாக
இருந்தது.அத்தனை நேரமும் தள்ளி நின்றிருந்த ரேஞ்சர்
அவன் அருகில் வந்தார்.

''சார் உங்ககிட்ட ஒண்ணு கேட்கலாமா?''என்றார் கூட
நடந்தபடி.

''கேளுங்களேன்!''

''இத்தனை பேர் இருக்க, உங்களுக்கு சம்பந்தமே
இல்லாத இந்த அஞ்சு குடும்பத்துக்கு மட்டும் ஏன் வலிய
போய் உதவி செஞ்சீங்க?'' என்றார் புரியாமல்.

''சம்பந்தப்படாதவர்களுக்கு செய்த உதவிகளால்தான்
சரித்திரங்கள் நிகழ்ந்திருக்கின்றன'' என்றான் சத்யா.

''அப்படியானால் சரித்திரத்தில் இடம்பிடிக்கப் போகி
றீர்களா சார்?''

''இல்லை. சரித்திரம் படைக்கப் பார்க்கிறேன். உங்
களுக்கு புரியவில்லையா ரேஞ்சர். இவர்களை அப்படியே
விட்டிருந்தால் இந்த ஊரின் நிரந்தர தலைவலியாகி
யிருப்பார்கள். தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு நாட்
டிற்கும் கேடு விளைவித்திருப்பார்கள். மூளையை சரியான

சமயத்தில் சரியான வழியில் பயன்படுத்தாவிட்டால் அதனால் விபரீதங்கள்தான் ஏற்படும்'' என்றான் சத்யா.

''சார் நான் அடுத்த வருடம் ரிட்டையர்ட் ஆகப் போகிறேன். அதற்கு முன்பு உங்களைப் போன்ற ஆபீசருடன் பணிபுரிந்ததை பெருமையாக நினைக்கிறேன்'' என்றார் ரேஞ்சர் பணிவுடன்.

பட்டி ஆடுகளுக்கு டோலி தழையை ஒடித்துப் போட்டுக் கொண்டிருந்தாள். ''இங்க குடு. ஆட்டை நான் பாத்துக்கறேன்'' என அவள் அருகில் வந்து உட்கார்ந்தான் சக்கிரி. ''உன் தம்பி படிக்கறான். அவனைப் போய் பார்.''

''இதென்ன அதிசயமா இருக்கு! இந்நேரத்துல வீட்ல இருக்க. அதுவும் தெளிவா வேற பேசற'' என்றாள் சுண்டி வியப்புடன்.

''கண்ணன் படிக்க உட்கார்ந்தா வேலை செய்ய சொல்லி திட்டுவ. இப்ப என்னையே வேலை செய்ய வேண்டாம். கண்ணனுக்கு சொல்லி கொடுன்னு சொல்ற. நம்பவே முடியல'' என்றாள் டோலியும் ஆச்சரியத்துடன்.

அந்த வழியாக வந்து கொண்டிருந்த ரேஞ்சர் இவர்கள் பேச்சை கேட்டு விட்டு அருகில் வந்தார். ''ரொம்ப ஆச்சரியப்பட்டுடாதீங்க. சக்கிரி ஒண்ணும் தானாத் திருந்துல. வேறு வழியில்லாம திருந்தியிருக்கான். என்ன சக்கிரி, நான் சொன்னது சரிதானே?'' என்றார் கிண்டலாய்.

சக்கிரி அசடு வழிய, பெண்கள் இருவரும் வியப்புடன் பார்த்தார்கள்.

''ஆமா சார். இப்பெல்லாம் முன்ன மாதிரி சாராயம் கிடைக்கறதில்லை. தங்கராசு, முருகன் இன்னும் அவன் கூட்டாளிகளுக்கு எல்லாம் நம்ம ஐயா பிழைக்க



வழிகாட்டிட்டார். அவனுங்களும் ஊர்ல தெம்பா திரியறானுங்க. அதை வேடிக்கைப் பார்த்துக்கிட்டிருந்த எங்க சாதி பசங்களையும் கூப்பிட்டு இந்த காட்டை பராமரிக்கிற வேலையை செய்யுங்கள். நாளடைவில் அரசாங்கம் உங்களை நிரந்தர ஊழியர்களாக்கி விடும் என்று சொல்லியிருக்கிறார். பசங்க உடனே கல் அடுப்பையும், சாராய பானையையும் தூக்கிப் போட்டுட்டு வேலையில சேர்றோம்னு போயிட்டாங்க. எனக்கும் நம்ம பையனை படிக்க வெச்சா நல்ல நிலைமைக்கு கொண்டு போயிடலாம்ங்கற நம்பிக்கை வந்துடிச்சி,'' என்றான் சக்கிரி.

''அப்படி சொல்லு!'' என்றார் ரேஞ்சர் உற்சாகத்துடன். ''இப்ப தெரியுதா எங்க ஆபீசரைப் பத்தி. முதல்நாள் அவர் உங்க வீடுதேடி வந்து இந்த தொழில் வேண்டாம்னு சொன்னப்ப கேட்டீங்களா? இப்ப தானாவே சாராய உலையை மூட வெச்சுட்டாரே!'' என்றார் பெருமையுடன்.

''உண்மைதான் சார். அவர் நல்ல மனசுக்கு எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்'' என்றார்கள் சக்கிரியும் சுண்டியும் மனதார.

டோலிக்கு பெருமிதத்தால் மனம் பூரித்தது. சத்யா இங்கு வந்ததிலிருந்து ஊர் மக்களிடம் செல்வாக்கு பெற ஆரம்பித்திருந்தாலும் இப்போது இந்த ஊர் இளவட்டங்களின் ஹீரோவாகவே ஆகிப்போனான். முன்பெல்லாம் அவன் வரும்போது அவனுடன் பாரஸ்ட் அலுவலர்கள் சிலர் உடன் வருவார்கள். இப்போதோ அவனைச் சுற்றி ஒரு இளைஞர் கூட்டமே இருந்தது. அதனால் டோலியால் அவனை முன்பு போல சாதாரணமாக சந்திக்கக் கூட முடியவில்லை. அவன் ஜீப்பில் போவதையும், கூட இருந்தவர்களிடம் தீவிரமாக பேசியபடியே நடந்து

செல்வதையும், பாரஸ்ட்டில் நடக்கும் வேலைகளை பார்வையிடுவதையும் அவள் பார்க்க நேர்வதுண்டு. எத்தனை வேலையிலும் அலுப்பிலும் சிறிதும் குலையாத அவன் கம்பீரத்தையும், சுறுசுறுப்பையும் மறைந்து நின்று ரசிப்பதும் உண்டு. முதல்நாள் அவன் பெரிய ஆபீசர் என்று தெரிந்தபோதும் கூட அலட்சியமாய் பேசிய துடுக்குத்தனம் அவளிடமிருந்து தானாகவே மறைந்துவிட்டிருந்தது. ஒரு நிதானமும், அமைதியும் வந்துவிட்டிருந்தது. மகள் பட்டாம்பூச்சியாய் திரிவதையும், வம்பு சண்டைக்கு போவதையும் கூட செல்ல கண்டிப்பும், நோகாத புத்திமதியுமாக கூறி வந்த சுண்டி கூட 'ஏன் இந்த பெண் என்னவோ போலிருக்கு!'' என்று கவலைப்பட ஆரம்பித்தாள்.

சிடியில் ''ஸ்லம் டாக் மில்லேனியர்'' படம் ஓடிக்கொண்டிருந்தது. சத்யாவும் அவனுடன் இருந்த இளைஞர் கூட்டமும் படத்தில் ஆழ்ந்திருந்தது. சத்யா அவர்களுக்கு புரியாதவற்றை விளக்கிக் கொண்டிருந்தான். மும்பையின் குடிசைகளையும், கழிப்பிட வசதி கூட இல்லாத அவல நிலையையும் கண்டு படம் பார்க்கும் கூட்டம் முகம் சுளித்தது. ''இத்தனை பெரிய நகரம் இப்படியா இருக்கும்? நம் ஊர் தேவல'' என்றார்கள்.

மும்பையின் இன்னொரு முகமான ரவுடியிசத்தை கண்டு அதிர்ந்தார்கள். இறுதியில் கதாநாயகன் போட்டியில் வென்று பரிசு பெற்றதும் தாங்களே வென்று விட்ட உணர்வில் உரக்கக் கூச்சலிட்டனர்.

சத்யாவை பார்க்க அலுவலகத்திற்கு வந்த கார்டு ''என்னய்யா உள்ளே ஒரே கூச்சலா இருக்கு'' என்றார் வெளியே நின்று தம் அடித்துக் கொண்டிருந்த வாட்ச்சரிடம்.



''ஊர் பயலுங்க எல்லாம் சேர்ந்து ஐயாவோட படம் பாக்கறாங்க. இங்கிலீஷ் படம். தமிழே படிக்கத் தெரியாம சுத்திட்டு இருந்த பசங்க என்னத்த புரிஞ்சுக்குவாங்களோ? தினமும் எதாவது படம் பார்க்கறதும், இவனுங்களுக்கு விளக்கிச் சொல்றதும், சரித்திரங்களையும், சாதனையாளர்களையும் பற்றி பேசறதுமா இருக்கார்'' என்றார் வாட்ச்சர்.

வாட்ச்சர் சொன்னதுபோல சத்யா தூங்கும் நேரத்தை தவிர மற்ற நேரங்களை அங்கிருந்த இளைஞர்களுடனேயே கழித்தான். வாழ்க்கையில் கீழ் மட்டத்திலிருந்து மேலே உயர்ந்து சாதனை படைத்தவர்களைப் பற்றி கூறி அவர்கள் தன்னம்பிக்கையை அதிகரித்தான். அந்த ஊரிலிருந்த படித்த இளைஞர்களை ஆசிரியப் பணியாற்ற வருமாறு அழைப்பு விடுத்தான். ராஜேந்திரன் மற்றும் அவனது நண்பர்களுடன் இன்னும் சில இளைஞர்களும் தங்கள் வேலை நேரம் போக மீதி நேரத்தில் இலவச பணி புரிய ஒத்துக் கொண்டனர். சத்யா மலையடிவார பகுதியில் அரசு நிலத்தில் சிறு சிறு குடில்கள் அமைக்கச் செய்தான். சாராய அடுப்புக்கு சுள்ளி பொறுக்குவதும், மாட்டு சாணத்தை சேகரித்து வரட்டி தட்டுவதுமாய் இருந்த லம்பாடி சிறுவர் சிறுமியரை வீடு வீடாகப் போய் அழைத்து வந்து படிக்க ஏற்பாடு செய்தான். குடில்களில் பள்ளிக்கூடம் நடந்தது.

ஆரம்பத்தில் லம்பாடி இன குழந்தைகள் மட்டுமே குடிசை பள்ளிக்கு வந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்து அக்கம் பக்கம் இருப்பவர்களும் தங்கள் குழந்
தையை இந்த பள்ளியில் கொண்டு வந்து விட ஆரம்பித்
தனர். மழைகாலத்தில் குடிசை பள்ளி ஒழுகும் போது
குழந்தைகளின் பெற்றோரே தங்கள் தென்னை மரத்

லிருந்து ஓலையை வெட்டி கொண்டு பள்ளிக்கு கூரை வேய்ந்தனர்.

சத்யா பெரும் முயற்சி எடுத்து பலநாட்கள் அலைந்ததின் பலனாக சில மாதங்களிலேயே அரசு அந்த இடத்தில் ஒரு பள்ளிக்கூடம் கட்ட அனுமதி தந்து நிதியும் ஒதுக்கியது. தற்காலிகமாக வந்த ஆசிரியப் பணி செய்தவர்களையே நிரந்தர ஆசிரியர்களாகவும் நியமித்தது. அதில் அந்த இளைஞர்கள் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள்.

சத்யாவின் அடுத்த முயற்சியின் பலனாக மலைவாழ் இளைஞர்களை அவர்கள் வாழும் காட்டுப் பகுதியை பாதுகாக்கும் ஊழியர்களாக அரசு நியமித்தது.

பெரிய கூக்குரலுடன் இளைஞர் கூட்டம் சத்யாவை தோள்மீது வைத்துக் கொண்டாடியது.

''நீங்கள் இந்த பகுதிக்கு ஆபீசராக வந்தது எங்கள் அதிர்ஷ்டம்'' என்றார்கள் ஒரே குரலில்.

இங்குள்ள இளைய சமுதாயத்தின் வாழ்வு நல்ல முறையில் திசைதிருப்பப்பட்டுவிட்டதில் சத்யா மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். இன்னும் மருத்துவமனை வேலை தான் பாக்கி. அதுவும் நடந்துவிட்டால் அவன் நினைத்தது நடந்துவிடும்.

தண்டா பஸ்நிறுத்தத்தில் ராம்குமார் பஸ்சை விட்டு றங்கினான். பெரிய தோள் பையை இடதுதோளில் ட்டியபடி பாரஸ்ட் ஆபீசுக்கு நடந்தவனின் அருகே ந்தான் ஒரு இளைஞன்.

''நீங்க டி.எப்.ஓ சார் பிரண்ட்தானே? முதன்முறை கள் இருவரும் இங்கே வந்திருந்த போது பார்த்திருக் ன்'' என்றான் அவனிடம்.



ராம்குமார் 'ஆமாம்' என்று தலையசைத்தான். அவனது தோள் பையை கட்டாயப்படுத்தி வாங்கி தான் தூக்கிக் கொண்டு அந்த இளைஞன் ராம்குமாருடன் நடந்தான்.

''உன் பெயர் என்ன?'' என்றான் ராம்குமார் அவனிடம்.

''என் பெயர் முருகன். சாரிடம் சொல்லுங்கள். அவருக்கு என்னை நன்றாக பழக்கம். ஆமா சார், நீங்க ஏன் பஸ்சிலிருந்து இறங்கி நடந்து வர்றீங்க? சாரிடம் சொல்லியிருந்தால் ஜீப் அனுப்பியிருப்பாரே!'' என்றான் முருகன்.

''சத்யாவுக்கு நான் இன்று வருவது தெரியாது'' என்றான் ராம்குமார்.

முதன்முதலாக சத்யாவுடன் இங்கு வந்து சேலம் பகுதியில் வேலை பார்க்கப் போன ராம்குமார் தன் வேலை முடிந்ததும் சத்யாவுக்கு தகவல் சொல்லிவிட்டு சென்னை போய்விட்டான். இத்தனை நாளில் பலமுறை சத்யாவை தொடர்பு கொள்ள முயற்சி செய்தும் அவனால் சத்யாவை பிடிக்க முடியவில்லை. சத்யா தன் வேலை விஷயமாய் தண்டா கிராமத்திலேயே தங்கிவிட்டதால் கெஸ்ட் அவுசுக்கே போகவில்லை. அங்கே போன் செய்த போதெல்லாம் வாட்ச்மேன், ''சார் இங்கு வரவேயில்லை'' என்று சொன்னான். எனவே தனக்கு சமயம் கிடைத்ததும் ராம்குமார் விடுமுறை எடுத்துக் கொண்டு நேரடியாக சத்யாவைப் பார்க்க வந்துவிட்டான். பத்து மாதங்களுக்கு முன்பு வந்த போது இருந்த ஊர் இன்று அடையாளம் தெரியாமல் மாறியிருந்தது. முள்காடாய் சிந்துவாறின்றி கிடந்த இடங்கள் இப்போது நிரவி சமதளமாக்கப் பட்டிருந்தன. ஓலைத்தட்டி வேய்ந்த சாலைகளில் பள்ளிக்கூடம் நடந்தது. அருகே பள்ளிக்கூடத்திற்கா

கட்டப்பட்டு வரும் செங்கல் கட்டிடம் முடியும் தருவாயில் இருந்தது. கிழிந்த உடையும், உடைத்த சுள்ளியுமாய் திரிந்த சிறுவர்கள் பள்ளி சீருடையில் அமரிக்கையாய் பாடம் படித்தார்கள். பழுப்பேறிய மடித்து கட்டிய லுங்கியும், பீடி புகையும், கையில் பாட்டிலுமாய் ஊரை சுற்றிய இளவயது பையன்கள், சுத்தமான உடையணிந்து படியவாரிய முடியும் திருத்தமான முகமுமாய் வேலைக்குப் போனார்கள். சாராய பேரல்கள் ஏற்றப்பட்டிருந்த அடுப்புகளில் இட்லிபானை உட்கார்ந்திருந்தது. அதிலிருந்து தயாரான உணவு எளிமையாய் அமைக்கப்பட்டிருந்த உணவு விடுதியில் விற்பனை செய்யப்பட்டது.

ராம்குமார் அசந்து போனான். சத்யா இந்த கிராமத்தில் ஒரு புதிய முயற்சியை மேற்கொள்ளப் போவதாக கேள்விப்பட்டிருந்தான். ஆனால் அந்த முயற்சி இந்த அளவு வெற்றிகரமாய் நடந்துவிட்டிருக்கும் என்பது அவன் எதிர்பாராத ஒன்று.

''என்ன சார் எங்க ஊர் இப்ப எப்படியிருக்கு?'' என்றான் முருகன் பெருமையுடன்.

''தமிழ்நாட்டுக்கே எடுத்துக்காட்டாய் இருக்கு'' என்றான் ராம்குமார்.

''அந்த பெருமை எல்லாம் சத்யா சாரைத்தான் சேரும்'' என்றான் முருகன்.

''உண்மைதான்'' என்றான் ராம்குமார்.

இருவரும் பேசியபடியே அலுவலகத்தை அடைந்தார்கள். ராம்குமாரை அங்கு சற்றும் எதிர்பார்க்காத சத்யா, பார்த்ததும் மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டான்.



''உன்னைப் பார்த்து ரொம்ப நாள் ஆயிற்றே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நீயே வந்துவிட்டாய்'' என்றான் பிரியத்துடன்.

''நிஜமாகவே நீ என்னை நினைத்தாயா சத்யா? இங்கு நடந்திருக்கும் விஷயங்களைப் பார்த்தால் நீ உன்னை நினைத்தாயா என்பதே சந்தேகமாக இருக்கிறது.''

''உண்மைதான் ராம்குமார்'' என்றான் சத்யா நீண்ட பெருமூச்சுடன்.

''பெரிய கடமை ஒன்றை முடிக்க வேண்டிய பரபரப்பில் நான் இருந்தேன். நாட்கள் நகர்ந்ததே தெரியவில்லை. நான் நினைத்ததில் பெரும்பகுதி முடிந்துவிட்டது. இங்கு மருத்துவ வசதி வேண்டும். அதற்காக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க விண்ணப்பித்திருக்கிறேன். அது மட்டும்தான் கொஞ்சம் இழுபறியாய் இருக்கிறது.''

''நீ கேள்விப்பட்டாயா? உனக்கு விரைவில் இங்கிருந்து டிரான்ஸ்பர் வரலாம் சத்யா?

''எனக்கு தெரியும் ராம்குமார்,'' என்றான் சத்யா. ''எல்லா இடத்திலும் நல்ல விஷயங்கள் நடக்கும்போது விரும்பத்தகாத சில விஷயங்களும் நடக்கும்தான். நல்லவர்களும் தீயவர்களும் கலந்ததுதானே உலகம்.''

''சரி வா போகலாம்'' என சத்யா ராம்குமாருடன் கிளம்பி ஜீப்பில் கிராமத்தை சுற்றி வருகையில் டோலி தன் தோழிகளுடன் எதிரில் வந்து கொண்டிருந்தாள். சத்யாவுக்கு இருந்த வேலை பளுவில் அவளைப் பார்த்தே சில மாதங்கள் ஆகிவிட்டிருந்தது. எப்போதாவது எங்காவது பார்க்க நேர்ந்தாலும் கூட வேலை மும்முரத்தில்

பேசாமல் ஓடிக் கொண்டிருந்தான். இப்போது அவளை நேருக்கு நேர் பார்க்க நேர்ந்ததில் இதழ்களில் தானாய் புன்னகை அரும்பியது. கால்கள் தானாய் ப்ரேக்கை மிதித்தன.

''எப்படியிருக்கிறாய் டோலி?'' என்றான் ராம்குமார் அருகே இருப்பதையும் மறந்து.

தோழிகளுடன் பேசியபடி வந்த டோலி படாரென திரும்பினாள். இதழ்களில் நெளிந்த அழகிய புன்னகை முகத்தை வசீகரமாக்கியது. சிவப்பு துப்பட்டாவின் சலங்கைகளை விரல்கள் நெருடின. அத்தனை பேரும் இவர்களையே பார்க்கவும் அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் கண்கள் தயங்கின. சத்யா ஆர்வத்துடன் அவள் பதிலுக்காக காத்திருப்பதை பார்த்த துளசி டோலியின் தோள்களை அழுத்தமாக பற்றினாள். அந்த அழுத்தத்தில் சுதாரித்துக் கொண்ட டோலி தலைநிமிர்ந்து சத்யாவிடம் நன்றாக இருப்பதாக தலையசைத்து விட்டு நடக்கத் தொடங்கினாள்.

ராம்குமார் தன் கண்களை நம்ப முடியாத வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். சத்யா வேலை விஷயமாய்த் தவிர பொதுவாய் தானாய் வலியப்போய் ஒரு பெண்ணிடம் பேசியதை அவன் பார்த்ததேயில்லை. எனவே திரும்பி கெஸ்ட் அவுசுக்கு செல்கையில் ராம்குமார் சொன்னான். ''இந்த கிராமம் மட்டும்தான் உன்னால் மாறியிருப்பதாக நினைத்தேன். ஆனால் இப்போதுதான் தெரிகிறது. நீ கூட இங்கு வந்த பிறகு மாறிவிட்டாய் என்று.''

''எப்படி சொல்கிறாய்?''

''உனக்கு பெண்கள் மீது புதிதாக ஈடுபாடு வந்திருக் கிறதே'' என்றான் ராம்குமார் கிண்டலாய்.



''சே! அப்படியெதுவும் இல்லை'' என்றான் சத்யா உடனடியாக.

''என்ன இல்லை? நான் பார்த்தேனே அந்த லம்பாடி பெண்களிடம் நீ வழிந்ததை.''

''வழிசல் எல்லாம் இல்லை. எனக்கு ஒரு சமயம் உடல்நிலை சரியில்லாத போது அந்த பெண் என்னை அவர்கள் வீட்டிற்கு அழைத்துப் போய் கவனித்துக் கொண்டாள். அவர்கள் கூட்டத்தினர் எல்லோரும் அன்று எனக்கு செய்த உதவியை மறக்க முடியாது ராம்குமார். இன்று வழியில் பார்த்தபோது அந்த பெண்ணிடம் நலம் விசாரித்தேன். இதை வைத்துக் கொண்டு நீ வீணான கற்பனைகளில் இறங்காதே!''

''சேச்சே! நான் ஏன் கற்பனைகளில் நேரத்தை செல விடப்போகிறேன்? அதுவும் என் தங்கை உனக்காக காத்திருக்கும்போது'' என்றான் ராம்குமார்.

''மை காட்'' என்றான் சத்யா வண்டியை நிறுத்தி.

''நான் அவ்வளவு சொன்ன பிறகும் காத்திருப்ப தென்றால்? உன் தங்கைக்குத்தான் புத்தியில்லை. உனக் காவது அறிவு வேண்டாமா?'' என்றான் கோபத்துடன்.

''நான் என்ன செய்யட்டும் சத்யா? நானும் என் குடும் பத்தினரும் சொல்வதை ஷாலினி கேட்க மறுக்கிறாள். மிகவும் வற்புறுத்த பிறகு முடிவில் நீ யாரையாவது திருமணம் செய்து கொள்ளும்வரை காத்திருந்து பார்ப்ப தாக சொல்கிறாள். எப்படியானாலும் அவளுக்கு திருமண மாவது உன் கையில்தான் இருக்கிறது.''

''இது என்ன முட்டாள்தனம் ராம்குமார்? யார் திரு மணத்தை யார் முடிவு செய்வது?''

''என்ன செய்வது? காதல் வயப்படும்போது நடக்கும் எத்தனையோ முட்டாள்தனங்களில் இதுவும் ஒன்று'' என்றான் ராம்குமார் சிரித்தபடி. பதில் பேசாது சத்யா ஜீப்பின் வேகம் கூட்டினான்.



# 9

ராம்குமார் சிறிதுநாட்கள் சத்யாவுடன் தங்கியிருக்க முடிவெடுத்தது சத்யாவுக்கு ஆறுதலாக இருந்தது. இருவருமாய் பேசிக் கொண்டிருப்பதும், வேலை நடக்கும் இடங்களுக்கு சேர்ந்து செல்வதுமாய் இருந்தார்கள்.

சத்யாவை அவன் செய்த நல்ல விஷயங்களுக்காக லித்தொழிலாளிகளும், பழங்குடியினரும், வேலை ற்ற இளைஞர் கூட்டமும் தெய்வமாய் கொண்டாடிய தே சமயம் சில மேட்டுக் குடியினர் அவனிடம் ரோதம் பாராட்டினர். கூலி வேலை செய்பவர்களுக்கு மூலம் தொகுப்பு வீடுகள் கட்டித்தரவும் துப்புறவு களுக்கும் அவன் ஏற்பாடு செய்தான். அதனால் யத்திற்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு கூலி ர் அதிக கூலி கேட்பதாக ஆத்திரப்பட்டனர். ராயம் ஒழிந்து போனதால் குடிகாரர்களும் அவன் காபத்திலிருந்தனர். அரசாங்கத்திற்கு அவன் மீது ன புகார்கள் சென்று கொண்டிருந்தன. சிலர் அலுவலகத்தின் முன்பும் வந்து நின்று



கூச்சலிட்டனர். சத்யா எதையும் கண்டு கொள்ளாமல் தன் வேலையை செய்து கொண்டிருந்தான்.

டோலி தன் வீட்டு திண்ணையில் பாடப் புத்தகத்துடன் அமர்ந்திருந்தாள். அவளை சுற்றிலும் குழந்தைகள் கும்பலாய் அமர்ந்து வீட்டுப்பாடம் எழுதிக் கொண்டிருந்தனர். முன்பெல்லாம் பகலில் வேலைக்கு போய்விட்டு வரும் சிறுவர்களை மாலையில் கட்டாயப்படுத்தி உட்கார வைத்து சொல்லிக் கொடுப்பாள். பாதிபேர் படிக்கும் போதே அசதியில் அப்படியே படுத்து தூங்கிவிடுவார்கள். இப்போது எல்லோரும் பள்ளி செல்வதால், பள்ளியில் கொடுக்கும் பாடத்தை படிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் அவர்களாகவே அவளைச் சுற்றி அமர்ந்து கொள்கின்றனர். டோலி எல்லோரையும் வீட்டுப் பாடம் செய்ய வைத்து, அன்றைய பாடத்தை படிக்க வைத்து அனுப்பி வைத்துவிட்டு எழுந்தபோது இருட்டிப் போனது. மரத்துப் போன கைகால்களை உதறிக் கொண்டு உள்ளே சென்றாள்.

அவளைப் பார்த்த சுண்டி, ''இன்னிக்கு ராமுகவுண்டர் வீட்டுக்கு உன் தம்பி பால் ஊத்தப் போகலியா?'' என்றாள் அவளிடம்.

''அவன் கொளத்தூர் தியேட்டரில் அவன் நண்ப களோடு சினிமா பார்க்கப் போவதாக சொன்னான். போகி அவசரத்தில் மறந்து விட்டான் போலிருக்கிறது'' என்றா டோலி.

கவுண்டர் பெண்ணுக்கு குழந்தை பிறந்திருக்கிற நம்ம வீட்டு பசும்பாலை எதிர்பார்த்து காத்திருப்பார்க குழந்தைக்கு கொடுக்கும் பால் தாமதமாகக் கூடாது. போய் குடுத்து

''சரிம்மா''என்றபடி டோலி பால் தூக்குடன் ராமு கவுண்டர் வீட்டை நோக்கி விரைந்தாள். கவுண்டரின் மனைவி வாயிலிலேயே நின்றிருந்தாள். ''நல்லவேளையில் வந்தாய். குழந்தை கண் விழிச்சா பசிக்கு அழுவானேன்னு கவலையா இருந்தது. வீட்லயிருந்து யாரையாவது அனுப்பி வாங்கிட்டு வரசொல்லலாம்னா கவுண்டர் ஒரு கல்யாணத்துக்கு போனவர் இன்னும் வரல'' என்று பேசியபடியே பாலை உள்ளே கொண்டு போனாள். காலி தூக்கை வாங்கிக் கொண்டு டோலி தாமதிக்காமல் வீடு திரும்பினாள். எவ்வளவு விரைவாக நடந்த போதிலும் நன்றாக இருட்டிப் போனது. ஆனாலும் பழகிய கால்கள் இருட்டில் தயங்காமல் விரைந்தன. வீட்டை நெருங்கும் சமயம் பின்னாலிருந்து குரல் கேட்டது.

''டோலி.... ஏ.. டோலி.. எங்க போற?'' குரல் குழறியது.

டோபரானின் குரலை அடையாளம் கண்டுகொண்ட டோலி நிற்காமல் விரைந்தாள்.

''நில்லு டோலி.. நான் சொல்றேனில்ல..''

டோலி காதிலேயே வாங்காமல் நடந்தாள். டோபரான் வேகமாய் அவள் அருகே வந்தான். ''நான் கூப்பிட கூப்பிட நிற்காமல் அவ்வளவு அவசரமா எங்க போற?'' அவள் தோள்களை இரு கைகளாலும் பற்றினான்.

அவன் கைகளை தட்டிவிட்ட டோலி ''எனக்கு வழிவிடு. வீட்டுக்குப் போகணும்'' என்றாள் பற்களை கடித்தபடி.

''தினம் போற வீடுதானே! அங்க போக அவசரம் உனக்கு? கட்டிக்கப் போறவன் கூட நின்னு நாலு வார்த்தை



பேசினா குறைஞ்சா போயிடுவ?'' டோபரானின் கைகள் அவள் இடுப்பை வளைக்க முற்பட்டன.

டோலி ஒரே உதறலில் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

''ச்சீ.. வழியை விடு.''

''என்னம்மா அவ்வளவு அலட்சியம்? இதே அந்த ஆபீசர் பய தொட்டா இப்படி ஓடுவியா?''

''அவரைப் பற்றிப் பேச நீ யார்? உனக்கென்ன அருகதை இருக்கிறது?'' என்றாள் டோலி மிகுந்த கோபத்துடன்.

''இங்க பார்றா கோபம் வர்றதை. கட்டிக்கப் போறவன் தொட்ட கசக்குதாம். எவனையோ சொன்னால் வலிக்குதாம்...!'' மேலும் டோபரான் அசிங்கமான வார்த்தைகளில் பேசத் தொடங்கவும் கையிலிருந்த பால் தூக்கினால் அவனை ஒரே தள்ளாக தள்ளிவிட்டு வீட்டை நோக்கி ஓடினாள்.

'சாராயம் காய்ச்சறது நின்னு போன பிறகும் இவனுக்கெல்லாம் எங்கிருந்துதான் கிடைக்குதோ தெரியல..' முணுமுணுத்தபடி டோலி வீட்டினுள் சென்று பால் தூக்கை கழுவி வைத்தாள்.

''என்னடி பால் பாத்திரம் நசுங்கி கிடக்குது?''என்ற அம்மாவிடம் பதில் சொல்லாமல் கயிற்றுக்கட்டிலில் சென்று அமர்ந்தாள். ஏதோ சிந்தையில் மனம் ஆழ்ந்து போக விரல்கள் கட்டிலின் கயிற்று கட்டங்களில் நுழைந்து விளையாடியது. சத்யா தன் வீட்டில் தங்கியிருந்த அன்று இந்த கட்டிலில்தான் படுத்திருந்தான் என்பது திடீரென நினைவு வந்தது. மெதுவாய் கட்டிலில் படுத்து

கண்மூடி உறங்க முற்படுகையில் அந்த சணல் கயிற்றில் இன்னும் அவனது வாசம் மிச்சமிருப்பதாகப் பட்டது.

டோபரான் தடுமாறியபடியே சாராயக்கடைக்கு வந்து சேர்ந்தான்.

''என்னடா, இப்பதான குடிச்சிட்டு போன? அதுக்குள்ள வந்து நிக்கற?'' என்றான் அங்கிருந்த அவன் கூட்டாளி குப்பன்.

டோபரான் எரிச்சலுடன் காசை எடுத்து கல்லாவில் வைத்தான்.

''ஒரு பாட்டில் குடுங்கண்ணே.''

அன்டர்வேர் பாக்கெட்டிற்குள் கைகளை நுழைத்து சில்லரைகளை பொறுக்கி எடுத்து கொடுத்தான். இப்போது இருக்கிற காசெல்லாம் குடிக்கவே செலவா கிறது. நாமே சாராயம் காய்ச்சிய போது இத்தனை செலவோ இதற்காக நெடுந்தூரம் அலைய வேண்டியதோ இல்லை. முட்டாள் பயல்கள். எவனோ ஆபீசர் வேலை வாங்கி கொடுத்தான்கிறதுக்காக சாராய உலையையே மூடிட் டானுங்க. நாம காய்ச்சினாலும் யாரும் வேலைக்கு வரமாட்டேன்கிறாங்க. நம்மைப் போல ரொம்பப் பேர் திருட்டுத்தனமாய் காய்ச்சற இடத்துக்கோ கொளத்தூர் பிராந்தி கடைக்கோ போக வேண்டியிருக்கிறது. காட்டுல நாலு மரத்தை வெட்டி லோடு ஏத்திட்டா மடியில காசு கனக்கும். வீட்ல காய்ச்சின சாராயத்தைக் குடிச்சிட்ட மாசக் கணக்கில் விழுந்து கிடக்கலாம். திரும்பப் பணம் வேணும்ங்கிறப்ப மறுபடி மரம் வெட்டப் போனா போதும். சமயங்களில் மரத்துக்கு நடுவே சந்தனக்கட்டைகளை வெட்டி அனுப்பினால், வருஷத்துக்கு பணத்துக்கு பஞ்சமில்லாமல் இருக்கும். இப்ப எல்லாம் மாறிப்போச்சு.



காட்டில் ஒரு கிளையைக் கூட முறிக்க முடியல. நம்ம ஆளுகளே நமக்கு விரோதியா மாறிட்டாங்க. வனத்தை பாதுகாக்கறாங்களாம். அரசு சம்பளம் தருதாம். கூலிக்கு மாரடிக்கிற பயல்க. பணம் கை நிறைய இருந்த ஜோரில் தான் டோலிக்கு பரிசம் போட்டான். எந்த பயலுக்கும் மசியாத முரட்டு குதிரைக்கு கடிவாளம் போட்டுவிட்ட தாய் மெதப்பில் திரிந்தான். இப்போது குதிரை உதைக் கிறது. டோபரான் பல்லைக்கடித்தபடி கையிலிருந்த பாட்டிலை வாயில் கவிழ்த்தான்.

''என்ன டோபரான்! கல்யாணம் நிச்சயமாயிருக்கு. நிச்சயம் பண்ணின பொண்ணு கூட ஜாலியா திரியாம இங்க வந்து கிடக்கிற, என்ன விஷயம்?'' என்றார் பஞ் சாயத்து தலைவர் குப்புசாமி.

அந்த ஊரில் பணக்காரன் ஏழை என்ற ஏற்றத்தாழ் வின்றி, ஜாதி சமூக வித்தியாசங்களை மறந்து எல்லோரும் சங்கமிக்கும் இடம் ஒன்று உண்டென்றால் அது நம் நாட்டின் மதுபான விடுதிகள்தான். குடியின் போதை யில்தான் உண்மையான சோஷலிசம் பிறக்கும். போதை தெளியும் வரை அது நீடிக்கும். எனவே பஞ்சாயத்து தலைவரின் தோளில் கையைப் போட்டு ''அவ என்னை மதிக்கவே மாட்டேங்கறா'' என்றான் டோபரான் குழறின குரலில்.

''எப்படி மதிப்பா? சலவை சட்டையும், ஷூவும், ஆரடி உயரமுமா சினிமா கதாநாயகன் மாதிரி ஒரு ஆபீசர் ஜீப்பை நிறுத்தி அவளிடம் சிரித்து பேசும்போது உன்னை அவளுக்கு மதிக்கத் தோணுமா?''

''என்ன சொல்றீங்க, அந்த ஆபீசர் ஜீப்பை நிறுத்தி டோலிகிட்ட பேசினானா?''என்றான் டோபரான்.

''அட, நான் என்ன பொய்யா சொல்றேன்? அவ கூட அன்னிக்கு இருந்த பொண்ணுகளையே கேட்டுப் பார்.''

டோபரானுக்கு ஆத்திரத்தில் முகம் சிவந்தது. இரத்தமாய் சிவந்த விழிகள் வெறியுடன் மின்னின. பஞ்சாயத்துத் தலைவர் தொடர்ந்து அவனுக்கு வெறியேற்றினார்.

''இத்தனை அழகான பொண்ணு உனக்கு கிடைக்கப் போகுதேன்னு ஊர் பயலுக எல்லாம் வயித்தெரிச்சல் பட்டாங்க. எங்கிருந்தோ வந்த ஒருத்தன் உன் பிழைப்பைக் கெடுத்ததும் இல்லாமல் வாழ்க்கையும் தட்டிப் பறிக்கப் பார்க்கிறான். அவன் ஆபீசர்னா பெரிய கொம்பா? நாம பாக்காத ஆபீசர்களா? இந்த மாதிரி எத்தனைப் பேரைப்பார்த்திருக்கிறோம். இவனுகளை வெக்க வேண்டிய இடத்தில் வெக்கணும்ப்பா.''

''அந்த நாடோடி பழங்குடி மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி அவர்கள் மூலமாய் காட்டில் மரம் வெட்டி விற்பதும், குடிபோதையில் அவர்கள் கிடக்கும்போது அவர்கள் பெண்களிடம் வம்பு பண்ணுவதுமாய் ஆதாயம் கண்ட சில பெரிய தலைவர்கள் பஞ்சாயத்து தலைவர் கூட சேர்ந்து டோபரானுக்கு ஒத்து ஊதினர். குடியினாலும், கேள்விப்பட்ட விஷயங்களாலும் ஆவேசமான டோபரான் சத்யாவை எப்படியாவது இங்கிருந்து துரத்தியாக வேண்டும் என்ற வெறியுடன் இருந்தான்.

''சத்யா நீ கிளம்ப நேரமாகுமா?'' என்றான் ராம்குமார் கொட்டாவி விட்டபடி.

சத்யா ராம்குமாரைப் பார்த்து புன்னகைத்தான். ''இன்னும் ஒரு மணி நேரமாகும் ராம்குமார். உன்னுடைய விடுமுறையை ஜாலியாக செலவழிக்காமல் உன்னை யார் இந்த காட்டில் வந்து விழுந்து கிடக்கச் சொன்னது?''



''நண்பன் பாவம் தனியாய் கஷ்டப்படுகிறானே! பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். நீயோ உன் வேலை தவிர எதையும் கண்டுகொள்ள மாட்டேன் என்கிறாய். வந்த நாளாய் கூப்பிடுகிறேன். ஒரு சினிமாவிற்கு கூட வரவில்லை,'' என்றான் ராம்குமார் குறையுடன்.

''நான் என்ன செய்யட்டும் ராம்குமார்? எப்போது மாற்றல் உத்தரவு வந்துவிடுமோ என்று காத்திருக்க வேண்டிய நிலையில், நான் தொடங்கிய வேலைகளை விரைவில் முழுதாக நிறைவேற்ற வேண்டி வேகத்துடன் செயல்படுகிறேன். பாதியில் நான் விட்டுப்போக நேர்ந்தால் அடுத்து வருகிறவர்கள் அதை முழுமையாக நிறைவேற்றுவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது பார்.''

''ஓ.கே. உன் வேலையைப் பற்றி இனி நான் எதுவும் கேட்கப் போவதில்லை. நாளை நான் மாதேஸ்வரன் மலை சிவன் கோவிலுக்கு போகலாம் என்றிருக்கிறேன். கோவிலுக்காவது வருவாயா என்னுடன்?''

''நான் இங்கு வந்த சமயத்திலேயே அந்த கோவிலுக்கு போயிருக்கிறேன் ராம்குமார். இப்படியே பாரஸ்ட்டில் குறுக்கு வழியில் நடந்தே போனேன். நல்ல பெரிய கோவில். நீ மெயின் ரோடு வழியாய் நம் ஜீப்பில் போ.''

''ரோடு வழியாய் சென்றால் பாலாறு பாலத்துடன் தமிழ்நாட்டு பார்டர் முடிந்துவிடும். கர்நாடக எல்லையில் மலைமேலிருக்கும் கோவிலுக்கு தமிழ்நாடு வனத்து ஜீப் செல்ல அனுமதி பெற வேண்டும் இல்லைய சத்யா?''

''கோவிலுக்குத்தானே செல்லப் போகிறாய்? எந்த சனையும் இல்லை. யாரும் தடைசொல்ல மாட்டார்க இந்த ஜீப்பை எடுத்துக் கொண்டு போ. நான் தே

என்றால் இங்கே அலுவலக பைக்கை பயன்படுத்திக் கொள்கிறேன்.

''இருந்தாலும் ஜீப் இல்லாமல் உனக்கு சிரமம் சத்யா. நான் ஒரு வாடகைக்கார் எடுத்துக் கொள்கிறேன்.''

''ஒரு பிரச்சனையும் இல்லை. நீ இப்போதே கிளம்பு. கெஸ்ட் அவுஸ் போய் நன்றாக தூங்கிவிட்டு காலையில் மாதேஸ்வரன் மலை போ. வேண்டுமானால் கொள்ளேகால் வழியாய் அப்படியே மைசூர்வரை போய் சுற்றிவிட்டு வா.''

''இப்படி தனியாக சுற்றவா இங்கே வந்தேன்? இந்நேரம் சென்னையில் இருந்திருந்தால் கேர்ல் ப்ரண்ட்ஸ், சினிமா, பார்ட்டின்னு இருந்திருக்கலாம்.'' புலம்பியபடி ராம்குமார் கிளம்பியதும் சத்யா தன் வேலையில் ஆழ்ந்து போனான்.

ராம்குமார் யோசனையுடன் ஜீப்பை ஓட்டிக் கொண்டிருந்தான். சத்யா மிகத் திறமையானவன். செய்யும் வேலையில் எப்போதும் முழுகவனம் செலுத்துபவன் என்பது அவனுக்கு தெரியும். ஆனால் இந்த கிராமத்திற்கு அவன் செய்திருப்பவை அவன் வேலைக்கு அப்பாற்பட்ட விஷயம். எத்தனையோ தடைகளையும் பிரச்சனைகளையும் சமாளித்து அவன் இந்த வேலையை முடிப்பதற்கு விடாமுயற்சியுடன் போராடி இருக்க வேண்டும். இத்தகைய அதிகாரிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒருவர் இருந்தால் போதும், என்று நினைத்தபடி திருப்பத்தில் ஸ்டியரிங்கை ஒடித்தவன் திக்கென அதிர்ந்தான். ஏனெனில் தள்ளாடியபடி ஒரு உருவம் ரோட்டின் குறுக்கே வந்து விழுந்தது. சடாரென ராம்குமார் சுதாரித்து பிரேக்கை அழுத்தினான். ஜீப் மோதினாற்போல் அவன் அருகே



போய் நின்றது. ஜீப் நின்றதும் விழுந்து கிடந்தவன் எழுந்து ராம்குமாரின் அருகே வந்தான்.

''ஏய் ஆபீசரு. நீ படிச்சிருந்தா பெரிய இவனாயிடுவியா? என்னவோ டோலியை டாவடிக்கிறியாமே! அது நான் கட்டிக்கப் போற பொண்ணு. வெட்டி பொலி போட்டுருவேன் ஜாக்கிரதை. உனக்கு முதலும் கடைசியுமாய் சொல்றேன். இனியொரு முறை அவகிட்ட பேசறதைப் பார்த்தேன் மவனே.. நான் பேசமாட்டேன். மரம் வெட்டற கோடலி வீட்ல இருக்கு. அதுதான் பேசும்.'' இருளில் போதையில் உள்ளே அமர்ந்திருப்பது யார் என்று கூட கவனிக்காமல் அவன் பேசிக் கொண்டே போனான். ராம்குமார் சத்தமின்றி ஜீப்பை ஸ்டார்ட் செய்து மெதுவாய் அவனைக் கடந்து வேகம் பிடித்தான். அவன் சத்தமான குரல் பின்னாலிருந்து தெளிவில்லாமல் கேட்டது.

சாதாரண குடிகாரன் பேச்சு என்று ராம்குமாரால் அந்த பேச்சை எளிதாகப் புறக்கணிக்க முடியவில்லை. அன்று சத்யாவுடன் சென்றபோது அவன் வண்டியை நிறுத்தி அந்த பெண்ணிடம் தன் சுபாவத்துக்கு மாறாய் சிரித்துப் பேசியது நினைவு வந்தது. ஷாலினியை திருமணம் செய்து கொள்ள சொன்னபோது தான் இங்கே ஒரு பெண்ணை காதலிப்பதாகச் சொன்னது அப்போதைக்கு தப்பிக்க என்று நினைத்தது தவறோ என்று பட்டது. ஜீப் முன் விழுந்தவன் போதையில் உளறினாலும் அந்த பேச்சில் சிறிதளவாவது உண்மை இருப்பது புரிந்தது.

பள்ளிக் கட்டிடம் முழுதாக கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவுக்கு காத்திருந்தது. கலெக்டர் இன்னும் பதி னைந்து நாளில் திறந்து வைக்க வருவதாக இருந்ததால் கடைசிக் கட்ட வேலைகள் மும்முரமாக நடந்த

சூப்பர்வைசரை அழைத்து சில திருத்தங்களை கூறி விட்டு மலைச்சரிவில் ஏறினான் சத்யா. அங்கங்கே புதிதாய் பணியில் அமர்த்தப்பட்டிருந்த இளைஞர்கள் காடுகளில் கிடக்கும் பிளாஸ்டிக் கவர்களையும் குப்பை களையும் சுத்தப்படுத்தும் பணியில் இருந்தார்கள். காட் டில் புதிதாக போடப்பட்டிருக்கும் போர்வெல் பைப்பி லிருந்து வரும் நீரை மெகா சைஸ் தொட்டிகளில் சிலர் நிரப்பிக் கொண்டிருந்தனர். மழை பெய்யும் சமயங்களில் காடுகளில் பள்ளத்தில் தண்ணீர் தேங்கியிருக்கும். காட்டு விலங்குகள் தாகத்திற்கு அங்கே நீர் அருந்தும். சமீபத்தில் மழை இல்லாததால் காடுகளில் நீர் கிடைக்காமல் வன விலங்குகள் மலையடிவார கிராமங்களை வலம் வரத் தொடங்கின. யானைகள் விவசாய பயிர்களை துவம்சம் செய்தும், குடிசை வீடுகளின் கூரைகளை தூக்கி எறிந்தும் அட்டகாசம் செய்து வந்தன.

வசதியுள்ளவர் சோலார் கம்பிகளின் மூலம் மின் அதிர்வை ஏற்படுத்தியும், மற்றவர்கள் பட்டாசு வெடித்தும் விலங்குகளை விரட்டி வந்தனர். தெரியாமல் ஊருக்குள் வரும் அப்பாவிகள் மிருகங்களிடம் சிக்கி சில சமயம் உயிரை விட் நேர்ந்ததும் உண்டு. இப்போது சத்யாவின் தலையீட்டால் பாரஸ்டில் பல இடங்களில் போர்வெல் மூலம் பெரிய தொட்டிகளில் நீரை நிரப்பி விடுவதால் விலங்குகள் ஊருக்குள் வருவதில்லை. சத்யா மாரி மடுவு ன்றழைக்கப்படும் பகுதிக்குள் நுழைந்தபோது கேரளாவி ிருந்து வரவழைக்கப்பட்ட பாகர்கள் அங்கே யானை ளை பழக்கிக் கொண்டிருந்தார்கள். கேரளாவிலும் நம் டின் சில வனப்பகுதிகளிலும் காட்டு யானைகள் பழக் பட்டு அவை வன அலுவலர்களுக்கு உதவி செய் றன. குழியில் விழுந்த யானையை மீட்கவும், மத



யானைகளை அடக்கவும், வழி தெரியாமல் சென்று விடும் குட்டிகளை திரும்ப அழைத்து வரவும், மரங்களை எடுத்துச் சென்று போடவும் இந்த யானைகள் உதவுவ துண்டு. எல்லாவற்றையும் பார்த்தபடி சத்யா நடந்தான். இந்த சில மாதங்களில் இந்தக் காட்டுப் பகுதியே செழிப்பாகி விட்டது. முன்னேற வேண்டும், சமூகத்தில் கௌரவமான பதவியை அடைய வேண்டும் என்ற இந்த இளைஞர்களின் விடா முயற்சி தனக்கு துணையாய் இல்லை என்றால் இங்கு எதையுமே சாதித்திருக்க முடியாது. இன்று பள்ளி ஆசிரியர்களாகவும், வன பாது காவலர்களாகவும் இருக்கும் இந்த இளைஞர்கள் சில நாள் முன்பு விரக்தியுற்று திரிந்தவர்கள் என்பதை யாரும் நம்ப மாட்டார்கள். இன்னும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்து அதில் மருத்துவர்களும், செவிலியர்களும் பணிபுரியத் தொடங்கினால் அவனது நோக்கம் நிறைவேறிவிடும். ஆனால் அதற்குள் அவனுக்கு எதிராக திரைமறைவில் காய்கள் நகர்த்தப்படுகின்றன.

இத்தனை நாள் பழமையில் ஊறிப்போன பெரியவர்கள் தங்கள் முதலாளித்துவ மனப்பான்மைக்கு பங்கம் நேர்ந்து விட்டதாக அவன் மீது விரோதம் பாராட்டுகிறார்கள் என்று தான் அவன் நினைத்திருந்தான். ஆனால் மருத்துவமனை அமைப்பது தொடர்பாக மேலிடத்தை அணுகியபோது தான் சில உள்ளூர் அரசியல்வாதிகள் கூட அவனுக்கு பெயர் வாங்கிவிடக் கூடாது என்பதற்காக அதைத் தடுக் கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள் என்று சென்ற வாரம் அவனது மேலதிகாரியான சி.எப்.ஓ.வை சந்தித்த போது சொன்னார்.

"நீங்கள் சமுதாயத்திற்குச் சிறந்த பணியாற்றுகின்றீர் கள் சத்யா. எனக்குத் தெரிகிறது. எல்லாராலும் முடியாத

விஷயம் அது. ஆனால் உள்ளூர் மக்களையும் அரசியல் வாதிகளையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் மீது வரும் புகார்கள் இன்னும் நீங்கள் செல்ல வேண்டிய தூரத்தை குறைத்துவிடும்'' என்று எச்சரித்திருந்தார்.

சத்யா யோசித்தபடி மெல்லிய கம்பியாய் பாறையி லிருந்து வழிந்து வரும் நீரில் கை கால்களை கழுவி, ஒருவாய் நீரைப் பருகினான். எதிர்ப்புறமாய் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. சத்யா சுற்றிலும் பார்வையை ஓட்டினான். ஓடக்கரையின் ஒற்றை பாறை மீது கையில் ஆடு மேய்க்கும் தடியுடன் டோலி அமர்ந்திருந்தாள். எதிர் வெய்யில் அவள் உடையில் பட்டு அதில் பதித்திருந்த கண்ணாடிகள் நட்சத்திரங்களாய் ஜொலித்தன. சத்யா வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தபடி நின்றான்.

சுற்றிலும் பசுமையான மரங்களும், சலசலத்த நீரும், சுற்றி நிற்கும் ஆடுகளுக்கு நடுவே சிவப்பு உடையில் அவள் அமர்ந்திருந்தது கைதேர்ந்த ஒரு ஓவியனின் கற்பனையாகத் தெரிந்ததே தவிர, உண்மை போலவே தோன்றவில்லை. சற்று நகர்ந்தாலும் ஓவியம் மறைந்து விடும் என்ற பிரேமையில் சத்யா நகராமல் நின்றான். சில நிமிடங்களில் எதேச்சையாக திரும்பிய டோலி அவனைப் பார்த்ததும் ஒரு புன்னகையுடன் எழுந்து வந்தாள். காலில் அணிந்திருந்த தண்டை குலுங்க ஓடையை கடந்து அவள் நடந்து வந்தது கூட ஒரு ஓவியம் உயிர் பெற்று நகர்வது போலவே இருக்க அவனால் தன் பிரேமையி லிருந்து விடுபட முடியவில்லை.

அருகே வந்த டோலி ''ஸார் என்ன எதுவும் பேசாம அப்படியே நிக்கறீங்க?'' என்றாள் புன்னகைத்து.

''இல்ல. நீ உண்மையாலுமே உயிருள்ள பெண் ணான்னு சந்தேகமாப் போச்சு எனக்கு. ஒரு ஓவியம்



படத்திலிருந்து இறங்கி நடந்து வர்ற மாதிரியே இருந்தது'' என்றான் சத்யா சிரிப்புடன்.

''படத்திலேயே இருந்திருக்கலாம்'' என்றாள் டோலி. ''சுவரில் தொங்கி வீட்டை அழகுபடுத்தியிருக்கலாம். அல்லது எங்கள் குல பெண்கள் இருந்த மாதிரி மதுவும் மாமிசமும், தஞ்சமடைய இந்த காடுகளுமாய் வெளி உலகைப் பற்றிய பிரக்ஞையே இன்றி வாழ்ந்து முடித் திருக்கலாம்.

இப்போது இருக்கிற மாதிரி கனவுகளும் பிரேமை களும் இருந்திருக்காது. மான அவமான உணர்ச்சிகள் மனதை வருத்தியிருக்காது.''

குரலின் சோகம் சத்யாவின் மனதைத் தொட்டது. ''டோலி என்ன பிரச்சனை உனக்கு?'' என்றான் தன்னை யறியாமல் அவள் கைகளைப் பற்றி.

பதில் சொல்லாத டோலி தூரப் பார்வையாய் பார்த்தாள். பின் ஒரு சமாளித்துக் கொண்ட புன்னகையுடன், ''இந்தக் காடு பாத்தீங்களா ஸார் எப்படி மாறிப் போச்சுன்னு. ராமாயணத்துல சொல்வாங்க. ராமன் கால்பட்டு கல் பெண்ணா மாறிப்போச்சுன்னு. உங்க கால் பட்டதும் இந்தக் காட்டுப் பகுதி கூட அதே மாதிரி மாறிப்போச்சு'' என்றாள் உற்சாகத்துடன்.

''நீ பொய் சொல்ற டோலி'' என்றான் சத்யா தீவிரத்துடன்.

''இல்ல ஸார். நிஜமாத்தான் சொல்றேன்.''

''இராமன் கால் பட்டு கல் பெண்ணாச்சுன்னா என் கைப்பட்டும் இந்த பெண் ஏன் மாறவில்லை?'' என்றான் அவள் கைகளைப் பற்றியிருந்த தன் கையை எடுக்காமல்.

டோலி மெதுவாய் அவன் கைகளிலிருந்த தன் கை உருவிக் கொண்டாள். ''இந்த பெண் வர்க்கம் ப

நூற்றாண்டுகளாய் சபிக்கப்பட்டது ஸார். எங்களை உயிர்ப்பிக்க ஒரு ராமன் போதாது.''

''டோலி...''

சத்யாவின் அழைப்பிற்கு பதில் சொல்லாது இலக்கின்றி வெறித்தாள் டோலி. கண்களில் நீர் திரண்டு நின்றது. முதல் நாளிலிருந்தே துணிச்சலும் கலகல பேச்சுமாய் இருந்த டோலி முதன் முறையாய் அழுவதை சத்யா பார்த்தபடி நின்றிருக்கும்போதே டோலி தன் வழக்கமான நிமிர்வுடன் தலையை உயர்த்தி புன்னகைத்தாள்.

கண்களில் ததும்பியிருந்த கண்ணீர், கண்ணின் வெப்பத்திலேயே வறண்டு போக, இயல்பாய் சிரித்தவளைப் பார்த்த சத்யா அசந்து போனான்.

எத்தனையோ வசதி வாய்ப்புகள் இருந்த போதிலும் நினைத்தது நடக்கவில்லை என்றாலும் அழுது ஊரைக் கூட்டும் சில நகரத்துப் பெண்களின் மத்தியில் காட்டிலேயே காலம் கழித்தாலும் இந்த பெண்ணின் மனோதிடம் அபாரமானது என்பது புரிய அவள் மீது அவனுக்குப் புதிய மரியாதையே ஏற்பட்டது.

சத்யா பாதியில் தடைபட்டுப் போன பேச்சை தொடர முற்பட்டான்.

''டோலி நீயே சொன்ன மாதிரி இந்த ஊரில் நிறைய விஷயம் மாறியிருக்கிறது. உங்கள் சிறுவர்கள் பள்ளி செல்ல சீருடை அணிய ஆரம்பித்து விட்டார்கள். இளைஞர்களும் சுத்தமான உடை அணிந்து நேர்த்தியாய் வேலை பார்க்கப் போகிறார்கள். ஆனால் உன்னுடைய டை மட்டும் ஏன் மாறாமல் அப்படியே இருக்கிறது?''

''ஏனென்றால் என் உடையை தேர்ந்தெடுக்கும் திகாரம் எனக்கு இல்லை.''



''ஒருவேளை உன்னை மணந்து கொள்ளப் போகிறவன் தன் மனைவி இத்தனை கவர்ச்சியான உடையில் காட்சிப் பொருளாய் இருப்பதை விரும்பவில்லை என்றால்?''

''விரும்பாமல் போக வழியில்லை. எங்கள் லம்பாடி இன ஆண்களுக்கு பிடித்தமான உடை இது.''

''ஒருவேளை உன்னை மணப்பவன் ஒரு லம்பாடியாய் இல்லா விட்டால்?''

ஒரு நிமிடம் திகைத்துப் போன டோலி பதில் சொல்ல வாயைத் திறப்பதற்குள் பின்னாலிருந்து குரல்கள் கேட்டன. ராம்குமாரும் அவனுடன் சில அலுவலர்களும் வந்து கொண்டிருந்தனர்.

''ராம்குமார் நீ மாதேஸ்வரன் மலையோடு இப்படியே வந்து விட்டாயா? மைசூர் போகவில்லையா?'' என்றான் சத்யா வியப்புடன்.

கலைந்து சென்ற ஆடுகளை விரட்டிச் சென்ற டோலியைப் பார்த்தபடி, ''மைசூர் எங்கே போகிறது சத்யா? எப்போது வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம். அதற்கு முன் இங்கே சில வேலைகளை உடனே பார்த்தாக வேண்டும் என்று பட்டது'' என்றான் ராம்குமார்.

''சரி வா. கீழே போகலாம்'' என அலுவலர்களுடன் வேலை விஷயமாய் பேசியபடி சத்யா முன்னால் நட தான்.

''நீ போ சத்யா. இந்த ஓடையில் ஒரு குளியல் போட விட்டு வருகிறேன்'' என்றபடி ராம்குமார் அங்கேயே தங் விட்டான். சத்யா கீழே செல்லும் பாதையில் வெகு தூ சென்று விட்டதை உறுதிப் படுத்திக் கொண் டோலியைத் தேடிச் சென்றான் ராம்குமார்.

காலடி சத்தம் கேட்டதும் ஆடுகளுடன் சென்று கொண்டிருந்த டோலி திரும்பிப் பார்த்தாள். ராம்குமாரைப் பார்த்ததும் ''நீங்களா? என்னிடம் என்ன விஷயம் பேச வேண்டும்?'' என்றாள் வியப்புடன்.

ராம்குமார் அதைவிட வியப்புடன் ''உன்னிடம் பேசப் போவதாக யார் சொன்னது?'' என்றான்.

''பின்னே, உங்கள் நண்பரை அனுப்பி விட்டு என் பின்னால் வருவானேன்!''

''நீ புத்திசாலிதான் டோலி. இல்லை என்றால் சத்யா மாதிரி ஒரு ஆளை சராசரி பெண்ணால் வளைக்க முடியுமா?''

''வளைப்பதா? உங்கள் பேச்சு அநாகரீகமாய் இருக்கிறது'' என்றாள் டோலி கண்டிப்புடன்.

''நாகரீகத்தைப் பற்றி காட்டுக்குள் வாழும் நீ பேசுகிறாயா?'

''காட்டுக்குள் வாழ்ந்தாலும் கிராமியத்தனமாய் பேசினாலும் எங்கள் பேச்சில் கண்ணியம் இருக்கும். உங்கள் உடையிலும், பேசும் ஆங்கிலத்திலும் காணப்படும் உயர்ந்த தன்மை உங்கள் வார்த்தைகளில் இல்லை.''

ராம்குமார் மலைத்துப் போனான். ஒரு ஆடு மேய்க்கும் பெண் அவனைப் போல ஒரு அதிகாரியைப் பார்த்ததுமே பயந்து போவாள். மிரட்டினால் கண்ணீர் விடுவாள் என்று நினைத்துதான் அவளிடம் பேச வந்தான். டோலியின் பேச்சில் தெரிந்த துணிவும், தெளிவும் அவன் எதிர்பாராததாக இருந்தது. எனவே அவளிடம் மேற்கொண்டு எதுவும் பேசாமல் நேரிடையாய் வந்த விஷயத்தைப் பேசத் தொடங்கினான்.



ஏற்பட்டிருக்கிறது
''சத்யாவுக்கு உன்னால் அவப்பெயர் என்ற ஆராய்ச்
டோலி. அவன் உன்னை காதலிக்கிறானா பெண்கள்
சியில் நான் ஈடுபடவில்லை. எத்தனையோ அவனுக்காக
அவன் பின்னால் சுற்றியும், இன்னும் காட்டாத
காத்திருக்கிற நிலையிலும் அவன் யாரிடமும் உன்
ஈடுபாட்டை உன்னிடம் காட்டுகிறான். அதற்கு எதிர்
னுடைய வித்தியாசமான உடையும், மொழியும், என்பதும்கூட
பாராத இடத்தில் சந்தித்த அழகான பெண் உயர்ந்த
காரணங்களாய் இருக்கலாம். அவனை மாதிரி மாதிரிப்
நிலையில் இருக்கும் ஒருவன் உன்னை சமூகத்
பெண்ணை மணந்து கொண்டு அவன் வாழும் என்பதெல்லாம்
தின் முன் அறிமுகப்படுத்த முடியுமா
யோசிக்க வேண்டிய விஷயங்கள்.

கோட்டும் சூட்டுமாய் உடையணிந்த சத்யா பெரிய
அதிகாரிகள் சந்திக்கும் போதும் பார்ட்டிகளில் கலந்து
கொள்ளும் போதும் உன்னைப் போல் ஒரு பெண்ணை
மனதில் அவன் அருகே நிறுத்திப்பார். உனக்கே புரிந்து
விடும். இப்போதே உன்னையும் சத்யாவையும் பற்றிய
செய்திகள் உலா வரத் தொடங்கி விட்டன. நீ திருமணம்
நிச்சயிக்கப்பட்ட பெண் என்று கேள்விப்பட்டேன்.
சத்யாவின் மனதில் ஏற்பட்டிருக்கும் சலனத்தை உன்
சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்காதே.
அது உன் இனத்திற்கும், சத்யாவுக்கும் நீ சேர்த்து செய்யும்
துரோகம். வம்பு பேசுபவர்கள் உங்களைப் பற்றி பரப்பும்
வதந்திகளை உங்கள் கூட்டத்தினர் நம்பத் தொடங்கி
னால் வெளியூர்க்காரன் என்பதால் அது உன்னை வி
சத்யாவைத்தான் அதிகம் பாதிக்கும். இந்த ஊருக்கு
உன் இன மக்களுக்கும் எவ்வளவோ நன்மை செய்தி

கும் சத்யாவுக்கு நீ செய்யும் கைமாறு இந்த அவப் பெயர் தானா?''

ராம்குமார் மேலும் பேசுமுன் டோலி குறுக்கிட்டாள். ''உங்கள் நண்பரிடம் உங்களுக்குள்ள அக்கறைப் பற்றி மிகவும் சந்தோஷம். யாருடைய முன்னேற்றத்திற்கும் நல் வாழ்க்கைக்கும் நான் தடையாய் இருக்க மாட்டேன்'' என்றவள் அதற்கு மேல் அங்கு நில்லாமல் விரைந்தாள்.



## 10

அன்று 'தண்டா' கிராமம் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. வழியெங்கும் காகித தோரணங்களும், பேனர்களும் அமர்க்களப்பட்டன. ஒண்ணாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை படிக்க சகல வசதிகளுடன் கட்டப்பட்டிருந்த பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைக்க சேலம் மாவட்டம் கலெக்டரும், எம்.எல்.ஏ.வும் வருகை தந்திருந்தனர். அவர்களை வரவேற்கவும், அவர்களிடம் விண்ணப்பிக்கவும், அவர்கள் பேச்சைக் கேட்கவும் பக்கத்து கிராமங்களிலிருந்தெல்லாம் ஊர் மக்கள் வந்து சேர்ந்திருந்தனர். உள்ளூர் அரசியல்வாதிகள் மேடையில் ஏறி எம்.எல்.ஏ.வின் புகழ் பாடினர். அதிகாரிகள் கலெக்டருக்கும், எம்.எல்.ஏ.வுக்கும் சேர்த்து ஐஸ் வைத்தனர். அவர்கள் இருவருமே தங்கள் பேச்சின் இடையே சத்யாவைப் பாராட்டினார்கள். இறுதியில் சத்யா எல்லோருக்கும் நன்றி கூறினான். ''ஊர் மக்களின்



ஒத்துழைப்பும் இளைஞர்களின் கடின உழைப்பும் சேர்ந்ததால்தான் இந்த ஊர் தமிழ்நாட்டின் முன்னோடி கிராமமாகத் திகழ்கிறது'' என அவன் பேச்சை நிறைவு செய்ததும் கைத்தட்டல் காதை பிளந்தது. பத்திரிகைகளும், தொலைகாட்சியும் சத்யாவையும் எம்.எல்.ஏ.வையும் விடாது படம் பிடித்தன. கிராமத்தின் கிளை சாலைகள், காட்டுப் பகுதிக்குச் செல்லும் வழிகள் செப்பனிடப்பட்டு சீர் செய்திருப்பதை சத்யா விருந்தினர்களுக்கு காட்டினான். ''வனங்களைப் பாதுகாப்பது உங்கள் வேலையாக இருந்தாலும், இங்கு வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தியிருக்கிறீர்கள். ஒரு அதிகாரி என்னென்ன செய்ய முடியும் என்பதை எல்லோருக்கும் உணர்த்தியிருக்கிறீர்கள்'' கலெக்டர் மனமாரப் பாராட்டினார்.

அத்தனை வேலையிலும் ஆரவாரத்திலும் சத்யாவின் கண்கள் டோலியைத் தேடின. அவள் பெற்றோர், தம்பி, துளசியுடன் கிராமமே திரண்டு வந்திருந்தது. அவளை மட்டும் காணோம். சந்தடிகள் ஓய்ந்த பின்பு அவனையே சுற்றி வந்த கண்ணனிடம் சத்யா கேட்டான்.

''உங்கக்கா ஏன் வரவில்லை கண்ணன்?''

கண்ணன் வாயைத் திறக்கு முன் வேறு பக்கத்திலிருந்து பதில் வந்தது.

''என் பொண்டாட்டி ஆகப் போகிறவ. திருமண நிச்சயித்த பின் என் அனுமதி இல்லாமல் எப்படி வருவ ஆபீசர் சார்?''

சத்யா திரும்பிப் பார்த்தான். கண்கள் வழக்கம் போ சிவந்திருக்க டோபரான் அவன் அருகே நின்றிருந்தா

''கண்ணன் இவன் என்ன சொல்கிறான்?'' என்றான் சத்யா கண்ணனிடம்.

''அவன் சின்னப் பையன். அவங்கிட்ட ஏன் சார் கேக்குறீங்க? எங்கிட்ட கேளுங்க. விளக்கமா சொல்றேன். டோலிக்கு பரிசப் பணம் கொடுத்து நான் நிச்சயம் பண்ணி மூணு மாசமாகிறது. வருகிற தை மாசம் எங்களுக்குக் கல்யாணம். வெத்திலை பாக்கு வெச்சி அழைக்கிறோம். வந்து கறியும் சோறும் சாப்பிட்டு விட்டு எங்க பொம் பளைங்க அருமையா கல்யாணத்துக்கு கும்மி கொட்டு வாங்க. இருந்து பாத்துட்டுப் போங்க.''

சத்யா அவனிடம் எதுவும் பேசாமல் திரும்பி நடக்கவும்,

''போங்க. போங்க. நல்லபடியா ஊர் போய் சேருங்க. காத்திருந்தவன் பொண்டாட்டிய நேத்து வந்தவன் தூக்கிட்டுப் போன கதையெல்லாம் இங்க நடக்காது. அதை மனசுல வெச்சுகிட்டு போங்க'' டோபரான் எக்களிப் பாய் சிரித்தான்.

சத்யாவிடம் டோபரான் பேசுவதைப் பார்த்த டோலி யின் பெற்றோர் விரைந்து வந்தார்கள். ''ஏ சார் கிட்ட என்ன வம்பளக்கிற?'' என அவனை அதட்டியவர்கள்,

''சார் எதாவது மரியாதை குறைவா பேசியிருந்தா மன் னிச்சிருங்க. டோலிக்கு வரப்போகிற கணவன் இவன். தப்பா நெனைக்காதீங்க'' என்றார்கள் சத்யா கேட்காத கேள்விக்கு பதிலாக.

சத்யாவுக்கு அதற்கு மேல் அங்கே நிற்க பிடிக்க வில்லை. யாரிடமும் எதுவும் பேசாமல் கிளம்பினான். ஜீப் கிளம்பும் சமயம் ஓடி வந்து அவனுடன் ஏறிக் கொண்ட ராம்குமாரும் எதுவும் பேசாமல் அமைதியாக வந்தான்.



டோலி திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண் என்பதே இதுவரை அவனுக்குத் தெரியாது. லம்பாடி இனப் பெண்களில் திருமணமான பெண்கள் காதுகளில் பெரிய வெள்ளி தோடு, மேல் காதில் அணியும் கொப்பு, தோள்களிலிருந்து முழங்கை வரை பெரிய பெரிய வளையல்கள் அணிந்திருப்பார்கள். திருமணமாகாத பெண்களும் விதவைப் பெண்களும் அந்த பெரிய தோடும், வளையல்களும் அணிய மாட்டார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால் அவளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது என்பது அவன் எதிர்பாராத ஒன்று. திருமணம் டோலியின் விருப்பப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் என்பதை அவனால் நம்ப முடிய வில்லை. அத்தனை அழகும், அறிவும், சுயகௌரவமும் உள்ள பெண் ஒரு குடிகாரனை பொறுப்பற்று திரியும் வம்பு சண்டைக்காரனை எப்படி மணக்கத் துணிந்தாள்? இத்தனை நாட்களில் ஏன் இது பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை? சத்யா டோலியிடம் என்ன எதிர்பார்த் தோம்? எதற்காக ஏமாந்தோம்? என்று புரியாத குழப்பத் தில் இருந்தான். இரண்டு நாட்கள் இறுகிப் போய் யாருட னும் எதுவும் பேசாமல் இருந்த சத்யாவின் அறைக்கதவை மூன்றாம் நாள் ராம்குமார் தட்டினான்.

கதவைத் திறந்து கேள்விக் குறியுடன் பார்த்த சத்யா விடம் ''உன்னிடம் பேச வேண்டும்'' என்றபடி உள்ளே வந்து அமர்ந்தான் ராம்குமார்.

''சத்யா நீ என் உயிர் நண்பன். நீ வருத்தப்படும்போது அது உன் பர்சனல் விஷயம் என்று என்னால் ஒதுங்க முடியாது.

உங்கப்பா இறந்தபோது நீ கிட்டத்தட்ட இதே போல இரண்டு நாட்கள் அறையில் அடைபட்டுக் கிடந்தாய்

அதற்கு பிறகு இதுவரை நீ எதற்காகவும் வருந்தி நான் பார்த்ததேயில்லை. இந்த அளவு வருந்தும்படியாய் அந்தக் கிராமத்து நாடோடிப் பெண்ணிடம் என்ன வசீகரம் இருக்க முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. எது வாயினும் சரி அவள் இன்னொருவனுக்காக நிச்சயிக்கப் பட்டவள். அவளை நீ அடைய வேண்டும் என்றால், தன் சமூகத்தையும் பெற்றோரையும் தாண்டி வெளியூரி லிருந்து தான் வேலை விஷயமாய் வந்த ஒருவனுடன் வருமளவு துணிச்சல் அவளுக்கு இருக்க வேண்டும். அந்த அளவுக்கு அவளுக்கு உன்னிடம் பிரியம் ஏற்பட் டிருக்கிறதா? உன் மேல் மட்ட பழக்க வழக்கங்களுக்கு அவளால் ஈடு கொடுக்க முடியுமா என்பதையெல்லாம் உறுதி செய்து கொண்டு எதாவது ஒரு முடிவெடு. வெறு மனே இப்படி வருத்தப்படுவதால் எந்த பயனும் இல்லை.''

நண்பன் சொன்னதில் உள்ள நியாயத்தை உணர்ந்த சத்யா டோலியை எப்படி அணுகுவதென யோசித்தான். தனக்குள் ஒரு முடிவு செய்தவனாக ''ராம்குமார் நீ இங்கேயே இரு. நான் 'தண்டா' வரை போய் வருகிறேன்'' என்று கிளம்பினான் சத்யா.

தங்கையின் முகம் மனதில் நிழலாட ராம்குமார் நண்பனிடம் 'பெஸ்ட் ஆப் லக்' என்று வாழ்த்தி அனுப்பி வைத்தான்.

ஷாலினி மட்டும் சத்யாவை விரும்புவதில் அர்த்தம் இல்லை. நண்பனின் மனம் வேறிடத்தில் இருக்கும் பட்சத்தில் தங்கையின் வாழ்வு நரகமாகிவிடும் என்று அறிந்திருந்ததால் ராம்குமார் நண்பனின் வரவுக்காய் கெஸ்ட் ஹவுசில் ஆவலுடன் காத்திருந்தான்.

சத்யா கிராமத்தை அடைந்து வன அலுவலகத்தில் ஜீப்பை நிறுத்தி விட்டு மலைச்சரிவில் ஏறத்



தொடங்கினான். சிறிது தூரம் சென்றதுமே நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த கண்ணன் அவனைப் பார்த்ததும் ஓடி வந்தான்.

''கண்ணா உங்கக்கா எங்கே?'' என்றான் சத்யா.

''மொட்டை பாறை பக்கமாய் போயிருக்கா சார்.''

''நீ நல்லா படிக்கிறியா?''

''ஓ... க்ளாஸ்ல எப்பவும் நாதான் பர்ஸ்ட்'' என்றான் கண்ணன் பெருமையுடன்.

''வெரிகுட்.'' கண்ணனை முதுகில் தட்டிக் கொடுத் தான் சத்யா.

தோழர்களை பெருமிதமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு சத்யாவிடம் பேசியபடியே நடந்தான் கண்ணன்.

''டேய் கண்ணா விளையாட்டை பாதியில் விட்டு விட்டுப் போகாதே'' என்றார்கள் அவர்கள் கோரசாக.

கண்ணன் சத்யாவைப் பார்க்கவும், ''நீ போய் விளையாடு'' என்று அனுப்பிவிட்டு மேலே நடந்தான் சத்யா. வழியில் அவனைப் பார்த்தவர்கள் எழுந்து நின்று வணக்கம் சொன்னார்கள். இளம் பெண்கள் ஆர்வத்துடன் அளவெடுத்தார்கள். ஒரு சிலர் முதுகிற்கு பின்னால் ''சார் எங்க போறாருன்னு தெரியுமில்ல'' என ஜாடை காட்டி தங்களுக்குள் சிரித்துக் கொண்டார்கள். சத்யா எதையும் கவனிக்காமல் நடந்தான்.

மொட்டை பாறையின் அருகே வந்ததும் முகத்தில் தானாய் புன்னகை மலர்ந்தது. இரவில் வழி தெரியாமல் முன்பு ஒரு முறை டோலியும் அவனும் அமர்ந்திருந்த பாறை மீது டோலி கைகளை ஊன்றி சாய்ந்திருந்தாள். அவனைப் பார்த்ததும் சடாரென எழுந்து நின்றாள். அன்றைய இரவின் நினைவில் பற்கள் பளிச்சிட,

''உட்கார் டோலி'' என்றான் சத்யா.

டோலி தயங்கியபடி நின்றாள். சத்யா சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்துக்கு வந்தான். ''டோலி இங்கே நான் செய்ய எண்ணி இந்த வேலைகள் முடிவடைந்து விட்டன. அரசு மருத்துவமனை அமைய அரசாங்க உத்தரவும் வந்து விட்டது. இனி மருத்துவமனை கட்டிட பணிகளை எல்லாம் அரசே பார்த்துக் கொள்ளும். இங்க நடந்த மாற்றங்கள் அனைத்தும் அரசு உதவியிலும், இங்குள்ள மனிதர்களின் உழைப்பிலும் நடந்தவைதான். நடந்ததற்கான காரணம் மட்டும்தான் நானாக இருந்தேன். எனக்கு இப்போது டிரான்ஸ்பர் வரப் போகிறது டோலி. விரைவில் ஆர்டர் கையில் கிடைத்து விடும். இனி அடுத்ததாக நான் செல்லும் வனப்பகுதியை செம்மைப் படுத்த அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த என்னால் செய்ய முடிந்ததை எல்லாம் செய்வேன். என் அப்பாவும் வன அலுவலராக இருந்ததால், சிறு வயதிலிருந்து விடுமுறை சமயங்களில் அவர் கைகளைப் பிடித்தபடி சுற்றி வந்ததால் காடுகள் எனக்கு மிகப் பிரியமானவையாக தோன்றின.

காட்டு மரங்களில், செடிகளில் ஒரு கிளை முறிந்தால் கூட எனக்கு வருத்தமாக இருந்தது. இங்குள்ள மிருகங்கள் அநியாயமாய் வேட்டையாடப்படும்போது எனக்கு அளவற்ற கோபம் வந்தது.'' சத்யா சட்டென்று தன் பேச்சை நிறுத்தி அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''எனக்கு வனத்தின் மீது ஏற்பட்ட பிரியம்தான் வனமோகினியாய் சுற்றி வந்த உன்னிடமும் ஏற்பட்டது என்று நினைக்கிறேன். டோலி உனக்கு திருமணம் நிச்சயித்திருப்பதாக கேள்விப்பட்டேன். படிப்பறிவோ,



வேலையோ இல்லாத ஒரு குடிகாரனிடம் உன்னை ஒப்படைக்க உன் பெற்றோர் எப்படித் துணிந்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. உங்கள் சமூகம் முன்னேற வேண்டும் என்ற இலட்சியத்துடன் இருந்த நீ அதற்கு எப்படி சம்மதித்திருப்பாய் என்றும் என்னால் நம்ப முடியவில்லை. என்னைப் பொறுத்தவரை மணந்து கொள்ளப் போகும் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பிடித்துப் போய் நிச்சயித்துக் கொள்வதுதான் உண்மையான திருமணம். பெற்றவர்களுக்காக, சமூகத்திற்காக நடத்தப்படும் திருமணங்கள் வெறும் நிர்ப்பந்தங்கள் தான். உன்னை நிர்ப்பந்தப்படுத்த நீ யாருக்கும் உரிமையளிக்க வேண்டியதில்லை. எந்த வகையிலும் பொருந்தாத ஒரு திருமண உறுதிக்கு மதிப்பளிக்க வேண்டியதுமில்லை. என்னுடன் வந்து விடு டோலி. புதிய இடத்தில் புதிய சூழ்நிலையில் நம் வாழ்வை மகிழ்ச்சியுடன் தொடங்கலாம்.''

டோலிக்கு மகிழ்ச்சியும் துக்கமும் ஒரே நேரத்தில் ஏற்பட்டது. இவ்வளவு பெரிய பதவியிலிருப்பவன் தன்னை திருமணம் செய்து கொள்ள முன் வந்ததால் மகிழ்ச்சியும், அதை மறுக்க வேண்டிய நிலையில் இருப்பதால் துக்கமும் ஏற்பட்டது. ராம்குமாரின் வார்த்தைகள் சொல் பிசகாமல் நினைவு வந்தது. எந்த வகையிலும் தான் விரும்பியவன் பிறர்முன் தலைகுனிய தானே காரணமாய் இருக்கக் கூடாது என்று முடிவெடுத்த டோலி சத்யாவிடம் சொன்னாள்.

''பிறந்த இடத்தையும் வளர்ந்த சூழ்நிலையையும் மறந்து புதிய வாழ்வை ஏற்கும் நிலையில் நான் இல்லை சிறு வயதிலிருந்தே நான் இந்த வாழ்க்கைக்கு பழக்க

படுத்தப் பட்டேன். முரண்பாடுகளை ஏற்கும் பக்குவம் எனக்கில்லை. மன்னித்து விடுங்கள். நீங்கள் எங்களுக்கு செய்த உதவிகளை என்றும் மறக்க மாட்டோம்.''

''டோலி..'' என சத்யா மேற்கொண்டு பேசியதைக் கேட்காமல் டோலி அங்கிருந்து தன் வீட்டை நோக்கி ஓடினாள். செய்வதறியாது சிறிது நேரம் நின்றிருந்த சத்யா ஒரு பெருமூச்சுடன் திரும்பி நடந்தான். டோலிக்கு தன் மீது ஏற்பட்டுப் போன அன்பைப் பற்றி அவனுக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவள் தன்னை மறுத்ததற்கான சமூகக் காரணங்கள் என்னவாக இருக்கும் என்று சிந்தித்தபடி தன் ஜீப்பை அடைந்து அதில் ஏறி அமர்ந்தான். அவனைப் பார்த்துவிட்டு கண்ணன் எங்கிருந்தோ ஓடி வந்தான்.

''அக்காவைப் பாத்தீங்களா சார்?'' என்றான் ஆவலுடன்.

அதற்கு பதில் சொல்லாத சத்யா காரில் கிடந்த பாக்கெட்டுகளை எடுத்தான். ''இது உனக்கு. இன்னொன்று உன் அக்காவிடம் கொடுத்து விடு'' என்றவன் கண்ணனிடம் கையசைத்துவிட்டு கிளம்பினான்.

மூச்சிறைக்க தன் வீட்டிற்கு ஓடி வந்த கண்ணன் ''அக்கா'' என்று கத்திக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

''என்னடா?'' என்றாள் டோலி லேசான அதட்டலுடன்.

''சார் கொடுத்தாருக்கா'' என்றபடி தன் பாக்கெட்டைப் பிரித்தான். புதிதாய் சட்டை டிராயரும், சாக்லேட்டுகளும் உள்ளே இருக்கவும் தாங்க முடியாத மகிழ்ச்சியில் குதித்தான். ''சார் ரொம்ப நல்லவர் இல்லக்கா? உன்னுடையதை பார்ப்போம் கொடு'' என்றபடி இன்னொரு பாக்கெட்டைப் பிரித்தான்.



''குடுடா'' என டோலி அந்த பாக்கெட்டை பறிக்க முயல, கண்ணன் பிரித்துப் பார்க்கும் ஆவலுடன் வேகமாய் இழுக்க, அதிலிருந்த புடவைகளும், சுடிதார்களும் கீழே விழுந்து சிதறின.

''ஐய் உனக்கு இந்த டிரஸ் எல்லாம் நல்லா இருக்கும். நீ இனிமே இதையே போட்டுக்க'' என கண்ணன் ஆர்ப்பரித்தான். பதில் பேசாத டோலி கீழே சிதறிய துணிகளை அணைத்தபடி கதறி அழுவதைப் பார்த்த கண்ணன் திகைத்துப் போனான். அத்தனை நேர உற்சாகமும் வடிந்துப்போக ''அக்கா அழாதே'' என்றான் அவள் கண்களைத் துடைத்து. டோலியின் அழுகை நிற்பதாக இல்லை. எனவும் அவனுக்கும் கண்கள் கலங்கின.



## 11

இடுப்பில் கட்டியிருந்த லுங்கியை தரையில் விரித்து அதன் மீது அமர்ந்து டோபரான் பீடியை புகைத்தான். கண்கள் சொருக புகையை வெளியேற்றியவனைப் பார்த்த அவன் கூட்டாளி குப்பன்,

''என்ன மாப்ள கண்ணை மூடிகிட்ட?'' என அவன் தோளைத் தட்டினான்.

கண்களைத் திறந்த டோபரான் ஒரு சோம்பலுடன் சுற்றி அமர்ந்திருந்தவர்களைப் பார்த்தான்.

''அவனை ஏண்டா தொல்லை செய்யற? அவனே நடக்கிற அசிங்கத்தை எல்லாம் பார்க்கக் கூடாதுன்னு

தானே கண்ணை மூடிட்டு உட்கார்ந்திருக்கான்'' என்றான் சுக்கான்.

''அப்படியென்னடா அசிங்கம் நடந்து போச்சு?'' என்றான் பார்த்தியான்.

''பின்னே, நாளைக்கு இவன் பொண்டாட்டியாகப் போகிறவள், அந்த ஆபீசரை வரவழைச்சு மொட்டை பாறையில கும்மாளம் போடறாளே, இது அசிங்கமில்லையா?''

''டேய் நீ நிஜமாவா சொல்ற?'' என்றான் குப்பன்.

''பின்னே, என் ரெண்டு கண்ணால பாத்தேம்ப்பா. அவங்க ரெண்டு பேரும் காட்டுக்குள் ஒதுங்கினதை'' என்றான் சுக்கான்.

''நம்ம டோபரான் பாவம். இளிச்சவாயன் ஆயிட்டான்.''

''கல்யாணம் மட்டும்தான் இவன்கூட. சாந்தி முகூர்த்தம் அவன் கூடத்தான்.''

''பெரிய ஆபீசர். அவனை தட்டிக் கேக்கற தைரியம் இந்த ஊர்ல யாருக்கு இருக்கு?''

குடி போதையில் வார்த்தைகள் எகிறின.

டோபரான் கண்கள் சிவக்க வேகத்துடன் எழவும் சத்யாவின் ஜீப் மெயின் ரோட்டில் அவர்கள் அருகே வரவும் சரியாக இருந்தது. அவர்கள் நின்றிருந்த இடத்திற்கு அருகே கொளத்தூர் சந்தைக்குப் போக தேங்காய்களை லோடு ஏற்றிக் கொண்டிருந்தனர். கூலியாள் ஒருவன் தேங்காய் மட்டையை அரிவாளால் அவசரமாய் உரித்துக் கொண்டிருந்தான். டோபரான் கண் இமைக்கும் நேரத்தில் அவன் கையிலிருந்த அரிவாளைப் பிடுங்கிக் கொண்டு ஜீப்பின் குறுக்கே பாய்ந்தான். ஜீப்பை நிறுத்திய சத்யா



அருகே அரவம் உணர்ந்து தன்னிச்சையாய் தலை குனியவும் அரிவாள் சத்யாவின் தோளில் விழுந்தது.

இரத்தம் ஆறாய் ஓட சத்யா சுய உணர்விழந்தான். டோபரானை சீண்டிவிட்டு உசுப்பேற்றிய கும்பல் சிதறி ஓடியது. சில நிமிடங்களுக்குப் பிறகே டோபரானுக்கு தான் செய்த காரியம் புரிய முகத்தைப் பொத்தியபடி அழத் தொடங்கினான். சம்பவ இடத்திற்கு அருகிலே வன அலுவலகம் இருந்ததால் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த அலுவலர்கள் ஜீப்பில் கிடந்த சத்யாவைப் பார்த்ததும் உறைந்து போனார்கள். ஆம்புலன்சுக்கும் போலீசுக்கும் தகவல் பறக்க சில நிமிடங்களில் அந்த இடம் பரபரப்பானது. கெஸ்ட் அவுசிலிருந்த ராம்குமாருக்கு தகவல் சொல்லப் போன் நெம்பரை அழுத்திய ரேஞ்சருக்கு சத்யாவுக்கு உயிர் இருக்கிறதா என்று புரியாததால் மருத்துவமனைக்கு செல்வதாக மட்டும் தெரிவித்தார்.

மேட்டூர் மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவிற்குள் நுழைந்த ராம்குமார் தன் அஜாக்கிரதையை எண்ணி நூறாவது முறையாக வருந்தினான். ஏற்கனவே சத்யா என நினைத்து ராம்குமாரிடம் டோபரான் ஜீப்பை வழிமறித்து தகராறு செய்திருக்கிறான். அப்படியிருக்க இன்று சத்யாவை தனியாய் அனுப்பியது தவறு என்று தன்னையே நொந்து கொண்டான். மருத்துவமனை கட்டிலில் நிராதரவாய் படுத்து கிடந்த சத்யாவைக் கண்டதும் கண்களில் நீர் தானாய் நிரம்பி வழிந்தது. அவனைச் சந்தித்த மருத்துவர் குமரேசன் கூறினார். ''சத்யாவுக்கு வெட்டுப்பட்ட இடத்தில் தையல் போட்டிருக்கிறோம். பெருமளவில் இரத்தம் வெளியேறியிருக்கிறது. அவருடைய ப்ளட் குரூப் இங்கு

குறைவான அளவே ஸ்டாக் இருந்தது. அதை செலுத்தியிருக்கிறோம். சேலம், ஈரோடு என சுற்றியுள்ள அனைத்து இரத்த வங்கிகளுக்கும் தகவல் கொடுத்திருக்கிறோம். இரத்தம் கிடைக்கக் காத்திருக்கிறோம்'' என்று.

சத்யா ஏ.பாசிட்டிவ். தன்னுடையது பி.பாசிட்டிவ் என்பதால் ராம்குமார் தன் வீட்டினர் உறவினரிடம் தொடர்பு கொள்ள முயற்சி செய்தான். வராண்டாவில் இவர்கள் பேச்சை கேட்டபடி நின்றிருந்த இளைஞர்கள் சிலர் ''எங்களுடைய இரத்தத்தை சோதியுங்கள் சார்'' என்றனர் டாக்டரிடம்.

பரிசோதித்து பார்த்ததில் அதில் ஒருவனுடைய ப்ளட் குரூப் மட்டும் ஒத்துப் போனது. டாக்டர்கள் அவனது இரத்தத்தை சேகரித்து செலுத்துவதற்கான முயற்சியில் இருக்க, கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களும் சிறுவர் சிறுமியரும் சாரிசாரியாய் வர ஆரம்பித்தனர்.

''எங்கள் இரத்தத்தையும் பரிசோதியுங்கள்'' என்றபடி.

அத்தனை கூட்டத்தையும் அவர்கள் கண்களில் வழியும் நீரையும் பார்த்த ராம்குமார் சத்யா இங்கு உழைத்தது வீண் போகவில்லை.

இவர்களுக்காக இரத்தம் சிந்த தகுதியானவர்கள்தான் என்ற நினைவில் பெருமிதமும் நண்பனை நினைத்து ஆதங்கமும் ஏற்பட்டது.

கும்பல் கும்பலாய் கிராம மக்கள் அரசு மருத்துவமனை
யின் மரத்தடியிலேயே அமர்ந்திருந்தார்கள். ''கண்
விழித்ததும் தகவல் சொல்கிறோம்'' என் டாக்டர்களும்,
ர்சுகளும் திரும்பத் திரும்பப் போகச் சொல்லியும் அவர்
ள் கேட்பதாக இல்லை. இரண்டு நாட்கள் மருத்துவர்



குழுவின் தீவிர சிகிச்சையில் இருந்த சத்யா மூன்றாம் நாள் கண் விழித்தான். அருகிலிருந்த ராம்குமாரைப் பார்த்து அயர்வுடன் புன்னகைத்தான்.

''எப்படியிருக்கே சத்யா?'' என ராம்குமார் குரல் அடைக்க கேட்டபோது ''பைன்'' என்றான் லேசாய் தலையசைத்து. அதன் பிறகு வந்த நாட்களில் சத்யாவின் உடல்நிலை சீராய் முன்னேற்றமடைய ஆரம்பித்தது.

காவல் துறையினர் சத்யாவிடம் தங்கள் விசாரணையைத் தொடங்கினர். ''டோபரான் எதற்கு உங்களைத் தாக்கினான் என்று தெரியுமா? எப்போது சம்பவம் நிகழ்ந்தது? உங்களுக்கும் அவனுக்கும் முன் விரோதம் உண்டா?'' அடுக்கடுக்காய் கேள்வி கேட்டனர்.

அவர்களை கையமர்த்திய சத்யா சில நொடிகள் மௌனத்திற்குப் பின் சொன்னாள். ''என்னை யாரும் தாக்கவில்லை.''

அதிர்ச்சியுடன் கூடியிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ''சத்யா நீங்கள் என்ன பேசுகிறோம் என்று புரிந்துதான் பேசுகிறீர்களா?'' என்றார் போலீஸ் அதிகாரி.

''நிச்சயம் புரிந்துதான் பேசுகிறேன்.''

''அப்போ வெட்டுக்காயம் எப்படி நிகழ்ந்தது? அரி
வாளால் வெட்டப்பட்ட காயம்தான் அது என்று டாக
டர்கள் உறுதியாக சொல்லுகிறார்கள். யாரும் வெட்
வில்லை எனில் காயம் எப்படி ஏற்பட்டது?'' கிண்டலா
கேட்டார் இன்னொரு அதிகாரி. சற்று யோசித்த சத்
கோர்வையாகச் சொல்லத் தொடங்கினான். ''அன்
பாரஸ்ட்டுக்கு போய் விட்டுத் திரும்பி கெஸ்ட் ஹவுசு

வந்து கொண்டிருந்தேன். தண்டா ரோடு சிங்கிள் ரோடாக இருந்ததால் எதிரே வந்த வண்டிக்கு வழிவிட பாதையை விட்டு ஜீப்பைக் கீழே இறக்கினேன். அப்போது வலது பக்கமிருந்த மரத்தில் சொருகியிருந்த அரிவாள் ஜீப் நின்ற அதிர்வில் நழுவி என் தோள் பட்டையில் விழுந்தது. உடனே இரத்தம் பெருக நான் மயக்கமானேன்.''

''சத்யா உங்களுக்கேத் தெரியும். நீங்கள் சொல்வது நம்பும்படியாய் இல்லை என்று. டோபரான் கையில் அரிவாளுடன் உங்கள் மீது பாய்ந்ததாக அவன் கூட்டாளிகளே சொல்லுகிறார்களே!''

''டோபரான் கூட்டாளிகள்தானே! போதையில் உளறுவார்கள்'' என்றான் சத்யா அலட்சியத்துடன்.

''அப்போது மரத்தில் அரிவாள் எங்கிருந்து வந்தது?''

''யாராவது ஆட்டுக்கு தழையோ, மாட்டுக்கு புல்லோ வெட்டிவிட்டு மரத்தில் சொருகியிருக்கலாம். கிராமத்தில் அது வழக்கம்தானே!''

''அரிவாளை பயன்படுத்தி விட்டு தற்செயலாய் மரத்தில் சொருகி வைப்பது நடப்பதுதான் என்றாலும் அந்த அரிவாள் சொல்லி வைத்ததுபோல் எப்படி உங்கள் தோள் மீது விழுந்தது?''

''விபத்துக்கள் எல்லாமே தற்செயலாக நடப்பவை தானே! எங்கிருந்தோ வரும் வண்டிகள் எதிர்பாராமல் விபத்துக்குள்ளாவதில்லையா?''

''டோபரான் கையில் இருந்த அரிவாளில் உங்கள் இரத்தமும் அவனது கைரேகையும் அழுத்தமாய் பதிந்திருக்கின்றன சத்யா'' என்றார் ஒரு போலீஸ் அதிகாரி குரலில் அழுத்தத்துடன்.



''இருக்கலாம். என் தோளில் விழுந்த அரிவாளை டோபரான் உருவி எடுத்துவிட்டுக் காப்பாற்ற முயற்சித்த போது ஏற்பட்டிருக்கலாம்.''

''டோபரான் இப்போது போலீஸ் காவலில் இருக்கிறான். தான் செய்த குற்றத்தை அவனே ஒப்புக் கொண்டிருக்கிறான்.''

''போலீசுக்கு பயந்து ஒத்துக் கொண்டிருக்கலாம்.''

துருவித் துருவி விசாரித்த போதிலும் சத்யா ஒரே பதிலைத்தான் சொன்னான். ''என்னை யாரும் தாக்கவில்லை.''

அதற்கு மேல் எதுவும் பேசாமல் அனைவரும் எழுந்து வெளியே செல்லும்போது சத்யாவுக்குப் பழக்கமான அந்த மூத்த காவல் துறை அதிகாரி அவனிடம் தனிமையில் கேட்டார்.

''சத்யா நீங்கள் ஏன் குற்றவாளியைக் காப்பாற்ற விரும்புகிறீர்கள்? ஒரு பொறுப்புள்ள அதிகாரியான நீங்களே இப்படிச் செய்யலாமா?''

ஒரு நிமிடம் அமைதியான சத்யா பிறகு சொன்னான். ''நான் இந்த ஊருக்கு வந்ததும் ஏழ்மையிலும் அறியாமையிலும் உழன்று கொண்டிருக்கும் இவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்று விரும்பினேன். இப்போது நான் விரும்பியபடி அவர்களுடைய குலத் தொழிலை மறந்து கௌரவமான சமூக அ
தஸ்தை அவர்கள் அடைந்திருக்கும் சமயம் அவர்களி
ஒருவன் குற்றவாளி என்று நானே எப்படி முத்திரையி
முடியும்?

திட்டமிட்டுச் செய்யும் அளவுக்கோ, கொலையையே தொழிலாக செய்யும் அளவுக்கோ அங்கு கிரிமினல்கள் யாரும் இல்லை. எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்கள் பிறர் தூண்டுதலால் தன்னிலை மறந்தால் என்ன நடக்குமோ அதுதான் நடந்தது.''

''எப்படியிருந்தாலும் சத்யா ஒரு குற்றவாளி நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்.''

''நீங்கள் குற்றவாளிக்கு தண்டனை வாங்கிக் கொடுப்பதைப் பற்றியே யோசிக்கிறீர்கள். இன்னொரு விஷயத்தையும் நினைத்துப் பாருங்கள். சமூக சேவை செய்யப் போன அதிகாரி அந்த சமூக மக்களின் கையாலேயே வெட்டப்பட்டார் என்று பத்திரிகைகளில் செய்தி வந்தால் சேவை மனப்பான்மை உள்ள பலருக்கு அதைச் செய்ய தைரியம் இல்லாமல் போய்விடும்.''

''மற்றவர்களை விடுங்கள். உங்களுக்கு நடந்தது நியாயமானது என்று நீங்கள் சொல்வீர்களா?'' என்றார் அந்த போலீஸ் அதிகாரி முடிவாக.

''சுதந்திரத்தைப் பெற்று தந்த மகாத்மாவுக்கே நாம் துப்பாக்கி குண்டுகளைத்தான் பரிசாகக் கொடுத்தோம். எனக்குத் தோன்றியதை செய்தேன். பலனையோ ராட்டையோ நான் எதிர்பார்க்கவில்லை.''

சத்யாவின் கைகளை குலுக்கிவிட்டு அந்த அதிகாரி டை பெற்றுப் போனதும் அருகே நின்றிருந்த ராம்குமார் யா என்ன இது?'' என்றான் வியப்புடன்.

தில் சொல்லாத சத்யா சோர்வுடன் கண்களை மூடி கத் தொடங்கினான்.





# 12

சத்யாவின் கை காயத்திற்கு தையல் பிரிக்கப்பட்டு மருத்துவமனையிலிருந்து கெஸ்ட் அவுஸ் வந்தான். ராம்குமார் 'சென்னை போகலாம்' என்றபோது 'சென்னை யிலும் தான் தனிதான்' என்று தோன்றியது சத்யாவுக்கு.

''பார்க்கலாம் ராம்குமார். எனக்கு போகத் தோன்றினால் போகலாம்'' என்றான் சத்யா பொதுவாக.

சத்யா மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனது தெரிந்ததும் அவனைப் பார்க்க கிராம மக்கள் கூட்டமாக வரத் தொடங்கினர். பழங்கள், மலைத்தேன், வள்ளிக் கிழங்கு, கடலை என அவர்கள் கொண்டு வந்த பொருட் களால் அந்த அறை நிரம்பிப் போனது. கிராம மக்கள் இவ்விதம் என்றால் அதிகாரிகள் பொக்கேவுடனும், ஊர் பெரியவர்கள் எலுமிச்சைப் பழம், சால்வை என்று வந்ததைப் பார்த்த ராம்குமார் ''சத்யா நான் சொல்வதைக் கேள். நீ பேசாமல் வேலையை ரிசைன் செய்துவிட்டு ஒரு கட்சி ஆரம்பித்து விடு. நான் கொள்கை பரப்பு செயலாளர் ஆகி விடுகிறேன்'' என்றான் கிண்டலாக.

டோலியின் பெற்றோர் சத்யாவைப் பார்க்க வந்தபோது கண்ணன் சொன்னான். ''நீங்க ஆஸ்பத்திரியில இருந் போது அக்கா உங்களைப் பாக்க வந்துச்சு. அப்ப நீங் நினைவில்லாம இருந்தீங்க. நீங்க கண்ணு முழிக்கி வரை இரண்டு நாள் வெளியேதான் உட்காந்திருந்தே

உங்களுக்கு பயப்படத் தேவையில்லை என்று டாக்டர்கள் சொன்னதும்தான் திரும்பி ஊருக்குப் போனோம். இப்ப எங்க ஊரிலிருந்து யார் உங்களைப் பார்க்க வந்தாலும் அவர்கள் திரும்பி வந்ததும் ''எப்படியிருக்கிறார்?'' என்று உங்களைப் பற்றி கேட்டுக் கொண்டேதான் இருக்கிறது'' என்றான்.

அவனுக்கு பதில் சொல்லாத சத்யா தன் அருகே கூடையிலிருந்த பழங்களை அவனிடம் கொடுத்து 'சாப்பிடு' என்றான்.

சத்யா குணமடையவும் அவனது வேலை மாற்றல் உத்தரவு கைக்கு கிடைக்கவும் சரியாக இருந்தது.

இடையில் ராம்குமார் ஒருமுறை சென்னை போய் வந்தான். திரும்பி வரும்போது அவனுடன் ஷாலினியோ அவன் வீட்டினரோ வராததிலிருந்து அவன் தன்னைப் பற்றி வீட்டில் ஏதும் சொல்லவில்லை என்று ஊகித்தான் சத்யா.

சத்யாவுக்கு மாற்றல் உத்தரவு வந்திருப்பதாக அறிந்ததும் வருந்திய கிராமத்தினர் அவன் கிளம்பும் முன் அவனுக்கு ஒரு பாராட்டு விழா நடத்த ஆசைப்பட்டனர். சத்யா மறுத்தபோது ராம்குமாரும் கூட சேர்ந்து வற்புறுத்தினான்.

பாராட்டு விழாவை தீர்மானமாக மறுத்த சத்யா
ற்றொரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு பண்ணும்படி கூறினான்.
எப்படியும் நான் ஊர் மக்களிடம் விடைபெற்றுச் செல்ல
வண்டும். எனவே ஊருக்குப் பொதுவாய் விருந்து
மைத்து எல்லோரும் சேர்ந்து உண்ணலாம். பள்ளி
தானத்திலேயே விருந்துக்கு ஏற்பாடு செய்யலாம்.



எல்லோரையும் ஒரே இடத்தில் சந்தித்து விடை பெறவும் எளிதாக இருக்கும். மாலை மரியாதைகளும், மேடை போட்டு பாராட்டு வாசிப்பதும் எனக்கு விருப்பமில்லாத ஒன்று. எனவே அது நிச்சயம் வேண்டாம்'' என்றான்.

சத்யாவின் பெருந்தன்மையை சமீப நாட்களில் உணர்ந்து கொண்ட பஞ்சாயத்து தலைவர் இப்போது பெரிதும் நெகிழ்ந்து போய், ''உங்க விருப்பப்படி என் செலவிலேயே எல்லா ஏற்பாடும் செய்து விடுகிறேன். நீங்க அதைப்பத்தி கவலையே படாதீங்க'' என்றார்.

''பொது விருந்து எனும்போது என்னுடைய பங்களிப்பும் இருப்பதுதான் நியாயம். விருந்துக்கு என் பங்கு ஐயாயிரம் ரூபாயை பெற்றுக் கொள்ளுங்கள்'' என அவர்களிடம் வற்புறுத்தி பணத்தைக் கொடுத்தான் சத்யா.

''என் பங்கு... என்னால் முடிந்தது...'' என கேள்விப்பட்டவர்கள் அனைவரும் அவர்களால் முடிந்த பணத்தை தர விருந்து கோலாகலமாகத் தொடங்கியது.

'தண்டா' கிராமத்தில் இரண்டு மூன்று வருடங்களுக்
ஒரு முறை தான் மாரியம்மன் பண்டிகை நடக்கு
அப்போதுதான் ஊர் சந்தடியுடன் இருக்கும். அன்
இருந்தது போன்ற கலகலப்பை அந்த ஊர் பெரிசுகள்
வாழ்நாளில் இதுவரை பார்த்ததில்லை. சிறியவர்க
பெரியவர்களுமாய் தன் வீட்டு விசேஷம் போ
ஆர்வத்துடன் மைதானத்தில் கூடியிருந்தார்கள். கா
யில் ஆரம்பித்த உணவு பந்தி மாலை வரை ந
கொண்டே இருந்தது. சத்யா எல்லோருடனும் உட்க
பேசியபடியே சாப்பிட்டான்.

மைதானம் முழுவதும் வரிசையாய் பந்தியிடப்பட்டு கும்பலாய் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். எல்லோருக்கும் ஒரே மாதிரியான உணவு பரிமாறப் பட்டிருந்தது. இந்த சமயத்தில் இங்கு கூடியிருந்தவர்கள் எல்லா வித்தியாசங்களையும் மறந்து விட்டவர்கள் போல் காணப்பட்டார்கள். சத்யாவுக்கு நிறைவாக இருந்தது. உணவு முடிந்ததும் சத்யாவை அவன் வளர்த்துவிட்ட இளைஞர்கள் கூட்டம் சூழ்ந்து கொண்டது. சத்யா அவர்களிடம் சொன்னான். ''நல்ல அதிகாரிகளுக்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். மோசமான வர்கள் வந்தால் அவர்களை கண்டு கொள்ளாமல் உங்கள் கடமையை செய்ய வேண்டும். ஏனென்றால் அதிகாரிகள் வரலாம் போகலாம். இந்த இடத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் நீங்கள்தான். இதன் முன்னேற்றம் உங்களுக்கு அவசியமான ஒன்று. எந்த சூழ்நிலை வந் தாலும் தவறான பாதையில் அடியெடுத்து வைத்துவிடக் கூடாது. இப்போது நடந்து கொண்டிருக்கும் நல்ல விஷ யங்களை நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும்.''

''சார் உங்களை நாங்கள் போக விடமாட்டோம்'' என்றான் ராஜேந்திரன் உணர்ச்சி வசப்பட்டு.

''ஆமாம். உங்கள் வேலையை ரிசைன் செய்து விட்டு எங்களுடனே இருந்து விடுங்கள்'' என்றார்கள் அவன் நண்பர்களும் மற்றவர்களும்.

''இங்கு இனி நான் செய்தாக வேண்டிய வேலை எதுவுமில்லை. இதே போல் என் உதவி தேவைப்படும். இன்னொரு இடத்தில் நான் பணியாற்ற வேண்டாமா? நான் எங்கிருந்தாலும் எந்த நேரமும் நீங்கள் என்னை



தொடர்பு கொள்ளலாம்'' என்றான் சத்யா அவர்களுக்கு சமாதானமாக.

சிறியவர்களும், வயதில் பெரியவர்களும் சத்யாவின் கைகளைப் பற்றி கண் கலங்கியபோது அவனுக்கும் வருத்தமாக இருந்தது. ஒவ்வொருவரிடமும் பேசியபடி மைதானத்தை வலம் வந்தான்.

மைதானத்தின் வலது பக்கம் செம்பருத்திச் செடிக்கு அருகே கண்ணனின் கைகளைப் பற்றியபடி ரோஜா நிற சுடிதாரில் வட இந்திய கல்லூரி மாணவியைப் போல் ஒரு பெண் நின்றிருந்தாள். அவள் வசீகரத்தில் ஆகர்ஷிக் கப்பட்ட சத்யா தன்னையறியாமல் கண்ணன் அருகே சென்றான். பிறகு தான் அது டோலி என்று தெரிந்தது.

''வாவ்'' என்றான் கூட்டத்தையும் கூட இருப்பவர் களையும் மறந்து. உடல் முழுவதும் மறைக்கும் படியாய் கண்ணியமான உடை அணிய வேண்டுமென்றுதான் அவளுக்கு நம் மரபுப்படி அணியும் உடைகளை வாங்கி கண்ணனிடம் கொடுத்தனுப்பினான். ஆனால் டோலி வனப்பும் நளினமும் கூடிப் போய் ஆளே அடையாளம் தெரியாத அளவு மாறிப்போய் விட்டிருந்தாள். முகத்தின் சிவப்பும், வெட்கமும் அவளது பெண்மையை அழகாக மிளிரச் செய்தன.

சத்யா அவளிடம் பேச வாயைத் திறந்த போது அருகே வந்த பஞ்சாயத்துத் தலைவர் ''வாங்க சார்'' என அவனை கைப்பிடியாக அழைத்துப் போய் சிலரை அறிமுகப் படுத்தி வைத்தார். சத்யா இங்கே வந்த சமயம் அவனிடம் மிகுந்த விரோதம் பாராட்டியவர் பஞ்சாயத்துத் தலைவர் தான். இப்போது மிகவும் மாறி விட்டிருப்பது அவனுக்கு

சந்தோஷமாக இருந்தது. அவர்களுடன் மரியாதை நிமித்தம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பிப் பார்த்தபோது டோலி போய் விட்டிருந்தாள்.

எல்லோரிடமும் விடைபெற்றுக் கிளம்பும் சமயம் இருட்டத் தொடங்கி விட்டது. கடைசியாக தயங்கித் தயங்கி வந்த டோபரான் ''என்னை மன்னிச்சிடுங்க. புத்திக் கெட்டு உங்களைப் போய்...'' என முடிக்காமல் சத்யாவின் காலில் விழுந்தான்.

''டோபரான் என்ன இது? எழுந்திரு'' என்றபடி சத்யா அவனை எழுப்பி அணைத்துக் கொண்டான்.

சத்யாவின் தோளில் வெட்டிவிட்டு இரத்தம் படிந்த அரிவாளுடன் நின்றிருந்த டோபரானை போலீசார் கைது செய்து சிறையில் தள்ளினர். மறுக்க வழியின்றி குற்றத்தை ஒப்புக் கொண்ட டோபரான் தன்னைத் தானே நொந்த வண்ணம் சிறையில் இருந்தான்.

சத்யா கண் விழித்ததும் அவனைப் பார்க்க வந்த ஊர் முக்கியஸ்தர்கள் 'சத்யா அவன் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும் நடந்தது விபத்து' என்று போலீசாரிடம் சொல்லிவிட்டதாகவும் சொன்னதைக் கேட்ட டோபரான் கூசிப் போனான். அவர்கள் சொன்ன படியே கோர்ட் விசாரணையில் சத்யாவைக் காப்பாற்றப் போய் அரிவாளைக் கையில் வைத்திருந்ததாகவும், போலீசாரின் மிரட்டலுக்குப் பயந்து கொலை முயற்சி என்று ஒத்துக் கொண்டதாகவும், இப்போது சம்பந்தப் பட்ட நபரே அது ஒரு விபத்து என்று வாக்குமூலம் கொடுத்திருப்பதால் தன்னை விடுவிக்கும்படியும் கேட்டுக் கொண்டான்.



அவன் தரப்பை ஏற்று நீதிமன்றம் அவனை விடுவித்தபோதும் அவமானமும் வெட்கமுமாய் வெளியே நடமாடத் தெம்பின்றி அடைந்து கிடந்தான். சத்யாவிடம் மன்னிப்பு கேட்ட பிறகுதான் அவன் மனதிலிருந்த பாரம் பெருமளவு குறைந்தது. எத்தனையோ பேர் புத்திமதி கூறியும் சண்டை போட்டும் திருந்தாத டோபரான் சத்யாவின் பெருந்தன்மையால் முழுவதுமாய் மாறி விட்டிருந்தான்.

சத்யாவுக்கும் அவனைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. டோபரான் ஜெயிலுக்குப் போயிருந்தால் ஏற்கனவே முரட்டு சுபாவமுள்ள அவன் சிறையில் சந்திக்கும் குற்றவாளிகளுடன் சேர்ந்து பெரிய கிரிமினலாக மாறி விட்டிருப்பான். அவனை விடுவித்ததால்தான் தவறை உணர்ந்து திருந்த முடிந்தது.

''டோபரான் இனி நீ எதாவது வேலை பார்த்து நல்ல படியாய் வாழ வேண்டும். பழைய வாழ்க்கையை நினைத்தே பார்க்கக் கூடாது என்ன?'' என்றான் அவனிடம்.

டோபரான் சம்மதமாய் தலையாட்டினான்.

ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து சத்யாவுக்கு நினைவு பரிசளிக்க முன் வந்தபோது சத்யா பெற்றுக் கொள்ள மறுத்தான். ''உங்கள் எல்லாருடைய நினைவும் என் மனதில் இருக்கிறது. அதுதான் பெரிய பரிசு'' என்றபடி கிளம்பியவனை கிராமமே பின் தொடர்ந்தது.

மெயின் ரோடில் நிறுத்தியிருந்த ஜீப்பில் ஏற போனவனை வழிமறித்த ராம்குமார் ''ஜீப்பை நா எடுத்துச் செல்கிறேன். நீ இந்த காரில் வந்துவிடு'' என்

முன்னால் நிறுத்தியிருந்த காரின் சாவியைக் கொடுத் தான்.

அந்த காருக்கு அருகே சக்கிரியும், சுண்டி, கண்ணன், துளசி, டோபரான் அனைவரும் கண் கலங்க நின்றிருந் தனர். ''நான் எங்கேயிருந்தாலும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருப்பேன். அழாதீர்கள்'' என அவர்களுக்கு ஆறுதல் கூறிய சத்யாவின் விழிகள் ஆவலுடன் கூட் டத்தை வலம் வந்தன. எதிர்பார்த்ததை பார்க்காத ஏமாற்றத் துடன் காரில் அமர்ந்து காரை ஸ்டார்ட் பண்ணியபோது காரை சுற்றிலும் சூழ்ந்து நின்ற கிராம மக்கள் ஒரே குரலில் கூறினார்கள்.

''எங்க நினைவுப் பரிசை வாங்க மறுத்துட்டீங்க. ஆனா எங்க கிராமத்தை மறக்க முடியாதபடி ஒரு பரிசை சக்கிரி யும், சுண்டியும் உங்களுக்காக காரில் வைத்திருக்காங்க. அதை எப்படி மறுப்பீங்க?''

ஒரு நிமிடம் எதுவும் புரியாத சத்யா தேனோ, தினைமாவோ வைத்திருக்கக் கூடும் என்று நினைத்தபடி கிளட்ச்சை மாற்றி காரை நகர்த்தினான். சில அடிகள் நகர்ந்ததும் பின் பக்கமிருந்து இரண்டு வளையல் அணிந்த கரங்கள் அவன் கழுத்தை வளைத்தன. டிரைவர் சீட்டிற்கு முன்னே உள்ள கண்ணாடியில் டோலியின் முகம் தெரிந்தது. சத்யா ப்ரேக்கை மிதித்த வேகத்தில் வண்டி பெரிய குலுக்கலுடன் நின்றது. திரும்பிப் பார்த்த சத்யா ''டோலி நீயா?'' என்றான் நம்ப முடியாமல்.

''ஆமாம். எங்கள் கிராமத்தினரும் பெற்றோரும் ..ங்களுக்கு தர விரும்பிய நினைவுப் பரிசு நான்தான். ..ப்போதும் மறுப்பீர்களா டி.எப்.ஓ. சார்?''



''மறுப்பதா?'' என்ற சத்யா தன் கழுத்தை வளைத்த கரங்களில் குனிந்து முத்தமிட்டான்.

ஜன்னல் வழியாய் பின்புறம் திரும்பிப் பார்த்த சத்யாவிற்கும் டோலிக்கும் ஊர் மக்களுடன் சேர்ந்து ராம்குமாரும் உற்சாகமாய் கையசைத்து விடை கொடுத் தான். சத்யா அரிவாளால் வெட்டுப்பட்ட போதும் யாரையும் காட்டிக் கொடுக்காத, தன் கொள்கையையும் விட்டுக் கொடுக்காத பெருந்தன்மையையும் மன உறுதியையும் கண்டு ராம்குமார் கரைந்து போனான். இத்தனை நல்ல வனுக்கு அவன் விரும்பியது ஏன் கிடைக்கக் கூடாது? என்று யோசிக்கத் தொடங்கினான். இருவர் மனமும் பொருந்திப் போன பிறகு எந்த திருமணமும் பொருந்தாத திருமணம் என்று சொல்ல முடியாது என்பதை உணர்ந்தவ னாய் 'தண்டா' சென்று டோலியின் பெற்றோரையும் ஊர் பெரியவர்களையும் சந்தித்தான். ''தியாகம் செய்தவர் களுக்கு எப்போதுமே துரோகம்தான் பரிசாகக் கிடைத் திருக்கிறது. நீங்களும் சத்யாவுக்கு அதைத்தான் தரப் போகிறீர்களா?'' என்று கேட்டான். எல்லோரிடமும் பேசி ஒத்த மனதாய் டோலிக்கு சத்யாதான் என்று சம்மதிக்க வைத்தான். சத்யாவுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க எண்ணி டோலியை பின் சீட்டில் இருக்க வைத்து அவ னுடன் அனுப்பி வைத்தான். இப்போது இருவரும் கையசைக் கையில் தங்கையின் முகம் கண் முன் தெரிந்தது. ''வரும் போது சத்யாவை எப்படியாவது அழைத்து வந்து விடு அண்ணா'' என்ற கெஞ்சல் காதில் ஒலித்தது. 'உன்னை விரும்பாதவனுடன் உன்னால் எப்படி சந்தோஷமாக வாழ முடியும்' என்றான் மனதில், 'ஷாலினி புத்திசாலி. புரிந்து கொள்வாள்' என்றான் தனக்கும் சேர்த்து.

கார் சீரான வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. சத்யா ஒரு சுகமான கிறக்கத்தில் இருந்தான். டோலி மூச்சு விடாமல் பேசிக் கொண்டிருந்தாள்.

''ஷ்... பேசாமலிரு'' என்றான் சத்யா.

''இல்லை. நான் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும். முதலில் உங்களை விரும்பியது. பின் மறுத்தது... இப்போது உங்களுடன் வரக் காரணம்... எல்லாவற்றையும் விளக்க வேண்டும்.''

''பிறகு...''

''இல்லை. எனக்கு இப்போதே சொல்ல வேண்டும்.''

''நான் இப்போது கேட்கிற மூடில் இல்லை டோலி.''

''ஆனால் நான் சொல்கிற மூடில் இருக்கிறேன்.''

''சொன்னால் கேட்க மாட்டாயா டோலி?''

''மாட்டேன்.''

''உன் பேச்சை எப்படி நிறுத்துவது என்று எனக்குத் தெரியாது.''

''எங்கே, நிறுத்துங்கள் பார்க்கலாம்.''

கார் கிறீச்சிட்டு நின்றது. சத்யா வேகத்துடன் அவள் புறம் திரும்பினான். டோலி சற்றே பயந்து பின்னால் நகர்ந்தாள். அழுத்தமாய் அவள் முகத்தைப் பற்றி அருகே இழுத்தான். குனிந்து படபடத்த அவள் இதழ்களை தன் உதட்டால் மூடினான். உலகம் ஒரு நொடி சுற்றுவதை நிறுத்தியது. காற்று, பறவைகள், செடி கொடிகள் அனைத்தும் அசையாமல் நின்றன. டோலியும் தன் பேச்சை மறந்து போனாள்.